23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs
Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca
Tel.:416.315.9397 / www.mahendran.ca

நதி 23 | பாலம் 07 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 01, 2013

# தமிழக அரசின் தீர்மானம்

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு செல்வி ஜெயலலிதா முன்மொழிய மார்ச் 27, 2013 இல் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானம் தமிழக சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

‘இலங்கையில் இனப்போரின் போது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து சுதந்திரமான நியாயமான சர்வதேச புலன்விசாரணை நடத்திடவும், இந்த சர்வதேச விசாரணை யின் அடிப்படையில் போர்க்குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத்தந்திடவும், தமிழர் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை மீது பொருளாதார தடையை விதித்திடவும், ஈழத்தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு ‘தனி ஈழம்’ குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடமும் இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும் ஐக்கிய சபையின் பாதுகாப்புக்குழுவில் தீர்மானம் கொண்டுவர இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இலங்கையை ‘நட்பு நாடு’ என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது”.

மேற்கூறிய தீர்மானத்தை தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றியதற்காக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், கனடியத் தமிழர் தேசிய அவை உட்பட பல தமிழ் அமைப்புக்கள் தமிழக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். ஏற்கனவே தி.மு.க மத்திய அரசில் இருந்து விலகிய நிலையில் CNN - IBN செய்தி நிறுவனத்திற்கு பேட்டி கொடுத்துள்ள இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சர் Salman Khurshid பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர், தமிழ்நாடு நிறைவேற்றி யுள்ள தீர்மானம் பற்றி கேட்டகேள்விக்கு அமைச்சர் அத்தீர்மானத்தின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுபூர்வமான நிலை வெளிப்படுகிறது என்றார். அதுமட்டுமல்லாமல் எமது கட்சி உறுப்பினர்களிடையேயும் அவ்வாறான



உணர்வுகள் உண்டு. ஆனால் அதேசமயம் எமது அரசாங்கம் இலங்கை அரசாங்கத்து டன் நடத்திய பேச்சு வார்த்தைகள் அதன் மூலம் ஏற்பட்ட விளைவுகளும் முக்கியம் வாய்ந்தவை என்றார்.

அவ்வாறாயின் நீங்கள் தமிழ்நாட்டு அரசின் தீர்மானத்தை முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்கிறீர்களா? என ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் “இல்லை” எனப்பதிலளித்தார். அப்போது தமிழ்நாட்டு அரசின் தீர்மானத்தின் மூன்று முக்கிய அம்சங்களான இலங்கையை நேசநாடு அல்ல என்று அறிவிப்பது, இலங்கைக்கு எதிராக பொருளாதார தடை கொண்டு வருகிறது, மற்றும் ஐ.நா சபையை தனி ஈழம் தொடர்பாக தமிழ் மக்களிடையே வாக்கெடுப்பு நடத்த கோருவது பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்ட ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலம் மற்றைய மாநிலங்களில் இது தொடர்பான நிலை என்ன? மற்றைய மாநிலங்கள் இந்த தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றனவா?. மற்றைய மாநிலங்களும் இத்தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தால் அது பற்றி யோசிக்கலாம். ஆனால் ஒரே ஒரு மாநிலம் மட்டும் இவ்வாறு கூறினால் நாங்கள் அவர்களது உணர்வுகளை புரிந்து கொள்ளலாமே ஒழிய அத்தீர்மானத்தை அப்படியே முற்றுமுழுதாக ஏற்க முடியாது என்றார்.

இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த இந்தியாவின் ‘The Sunday Standard’ ஊடகம் தனது மார்ச் 31, 2013 இதழில் இலங்கை தமிழர் விவகாரமான நெருப்பு தி.மு.க வினரையும் காங்கிரஸ் கட்சியையும் மூழ்கடிக்கப் போகிறது என்கிறது. அவ்விதழ் இலங்கைக்கு எதிராக தமிழக அரசு நிறைவேற்றிய தீர்மானத்தை எதிர்ப்பதன் மூலம் மத்திய அரசு தமிழகமக்களிடையே தமிழர்களுக்கு எதிரான அரசு என்கிற மனப்பான்மையை தோற்றுவித்துள்ளது. தனது செல்வாக்கை தமிழக மக்களிடையே நிலை நிறுத்தும் முகமாக திமுக மத்திய அரசில் இருந்து விலகினாலும் தமிழக அரசின் தீர்மானத்தின் மிகவும் முக்கிய அம்சமாக ‘தனி ஈழம்’ தொடர்பாக இலங்கை தமிழ் மக்களிடையே வாக்கெடுப்பு நடத்த ஐ.நா. வை இந்திய அரசு கேட்க வேண்டும் என்றதற்கு தனது உணர்வுபூர்வமான ஆதரவை திமுக அரசு தெரிவிக்காததால் திமுகவும் தமிழக மக்களின் ஆதரவை பெற தவறிவிட்டது. இவ்விரண்டு கட்சிகளும் இவ்வாறு தமிழகமக்களிடம் செல்வாக்கு பெற தவறிவிட்டதால் செல்வி ஜெயலலிதாவின் தீர்மானம் அவருடைய செல்வாக்கை தமிழ் மக்களின் கோரிக்கைக்காக போராடுபவர் என தமிழகமக்களிடையே உயர்த்தியுள் ளது என தெரிவித்துள்ளது. (Her image as the ultimate tamil champion)

அவ்விதழ் மேலும் தெரிவிக்கையில் தமிழக

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி
TOYOTA
MARKVILLE
905.294.8100

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

# தமிழக...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

முதலமைச்சர், அடுத்த தேர்தலில் தமிழக மக்களின் அனுதாபத்தை பெற செய்த நாடகமே திமுகவின் அரசில் இருந்து விலகும் நடவடிக்கை என்பதை சுட்டிக் காட்டியதுடன் தனது பேரனான கலாநிதி மாறனின் சிங்கள துடுப்பாட்ட வீரர்களை தனது 'Sun Rises' துடுப்பாட்ட அணிக்கு தெரிவு செய்வது தொடர்பான முடிவுக்கு எவ்வித கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் சாதித்த கருணாநிதியின் சந்தர்ப்பவாத அரசியலையும் எடுத்துக்காட்டியுள்ளார் என்கிறது.

TESO ஐ மீளஎழுப்பி மத்திய அரசை பொதுநலவாய தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடைபெறும் போது அதில் பங்குபற்ற வேண்டாம் எனக் கேட்ட கருணாநிதி தனது பேரன் மாறனின் முடிவான இலங்கையை சேர்ந்த Kumar Sangakkara வை தனது சொந்த துடுப்பாட்ட அணிக்கு தலைமை தாங்க வைக்க வேண்டும் என முடிவெடுத்தபோது அதுபற்றி கருத்து ஒன்றும் தெரிவிக்கவில்லை என்கிறது 'The Sunday Standard'. தமிழகமுதலமைச்சர் இந்திய பிரதமருக்கு எழுதிய தபாலில் 'தமிழக அரசு Indian Primier League (IPL) இன் விளையாட்டுப்போட்டிகளை தமிழ் நாட்டில் நடைபெற அனுமதிக்கும், அதன் அமைப்பாளர்கள் அப்போட்டியில் இலங்கை விளையாட்டு வீரர்களோ, இலங்கையை சேர்ந்த நடுவர்களோ அல்லது இலங்கையை சேர்ந்த எந்த உதவி உத்தியோகத்தவர்களோ பங்குபற்றா விட்டால் மட்டுமே' என தெரிவித்திருந்தார்.

இதை அடுத்து வேறு வழியில்லாமல் IPL அமைப்பாளர்கள் இலங்கையை IPL போட்டியில் சேர்க்காமல் விட்டது செல்வி ஜெயலலிதாவின் மிகப்பெரிய அரசியல் வெற்றி என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. கருணாநிதியின் நடவடிக்கைகளை நாடகம் எனக் கூறும் தமிழகமுதலமைச்சர் திமுக மத்திய அரசில் இருந்து விலகியதும் ஒரு நாடகம் என்கிறார். திமுக மத்திய அரசில் இருந்து முற்று முழுதாக விலகவில்லை என்பது திமுகவின் நாடாளுமன்ற தலைவர் T.R பாலு தொடர்ந்தும் புகையிரத சபையின் தலைவராக (Chairman) இருப்பதை காட்டுகிறது என்கிறார்.

திமுக அரசு தமிழ் நாட்டை ஆட்சி செய்யும் போது இலங்கைத் தமிழர் படுகொலை சம்பந்தமாக எந்த ஒரு திடகாத்திரமான நடவடிக்கைகளையும் எடுக்காமல் கண் துடைப்புக்காக பல நாடகங்கள் ஆடியதை தமிழக முதல்வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## திமுக தலைவரின் பதில்

திமுக மத்திய அரசில் இருந்து தற்போது வெளியேறிவிட்டது. இதனால் என்ன நடந்து விட்டது? ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு விடிவு ஏற்பட்டுவிட்டதா? அமெரிக்க தீர்மானத்தில் இந்தியா திருத்தங்களை கொண்டு வந்து விட்டதா? நாடாளு மன்றத்தில் தீர்மானத்தை திருத்தங்களோடு நிறைவேற்றிவிட்டதா? இல்லை மத்திய அரசில் இருந்து திமுக வெளியேறியது மட்டும் தான் நடந்தது. ஆனால் அதற்காக திமுக சிறிதும் கவலைப்படவில்லை. 2009 இல் (இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்பட்டு கொண்டிருந்த போது) திமுக மத்திய அரசில் இருந்து வெளியேறி யிருந்தாலும் இதேநிலை தான் என்பதை நடுநிலையோடு சிந்தித்துப் பார்ப்பவர்கள் உணர்வார்கள். அப்போதே வெளியேறி யிருந்தால் இலங்கைத் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கமாட்டார்கள் என்பதெல்லாம், திமுக வின் மீது பழியை போடுகின்ற ஒரு செயலே தவிர வேறல்ல என்பது தான் உண்மை அனுமானத்தின் அடிப்படையில் ஒரு கருத்தை உறுதி செய்வதை வரலாற்றை அறிந்தவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இவ்வாறு கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.




# வெளிநாட்டு குடியுரிமை பெற்றுள்ள இலங்கையர்கள் இரட்டை குடியுரிமை பெற்றுக்கொள்ள முடியும்!

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுள்ள இலங்கையர்களுக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் இரட்டை குடியுரிமையை பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இரட்டை குடியுரிமை வழங்கப்படும் போது, செயற்படுத்தப்பட வேண்டிய புதிய சட்டத்திருத்தங்களை உருவாக்கப்பட்டுள்ளன என குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார். இரட்டை குடியுரிமை வழங்கப்படும் போது, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இரட்டை குடியுரிமை என்ற போர்வையில் வடக்கில் காணி உரிமைகளை பெற்றுக் கொள்ள வர முயற்சிக்கும் வடபகுதிகளை சேர்ந்த இலங்கையர்களும் இருப்பதாக




பாதுகாப்பு தரப்பினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. மேற்குலக நாடுகளில் வாழும் பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக இரட்டை குடியுரிமையை பெறுவதற்காக காத்திருப்பதாக தெரியவருகிறது.



விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc., 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com
www.tamilvanakkam.com


Dr. Bhaminy Mohendran
Dentist
7595 Markham Rd, #4
(Markham & 14th Ave.)
905 201 8900
1200 Markham Rd, #119
(Markham & Ellesmere)
416 289 7187
Opened 7 days a week

# கனடா ஒரு கண்ணோட்டம்

## கடந்த இதழ் தொடர்ச்சி

அத்திலாந்திக் பிரதேசம்

### முக்கிய சொற்கள்

நோவா ஸ்கோஷியா நியூ பிறவுண்ஸ்விக்
நியூபவுண்லாந்து-லாபிரடோர்
பிறின்ஸ் எட்வேட் தீவு ஐக்கேடியர்

ஐக்கிய பேரரசு விசுவாசிகள்

ஐபேணியா

நோவா ஸ்கோஷியா, நியூ பிறவுண்ஸ்விக், நியூபவுண்லாந்து-லாபிரடோர், பிறின்ஸ் எட்வேட் தீவு என்பனவே கனடாவின் அத்திலாந்திக் மாகாணங்கள். மீன் பிடிப்பதற்காகவும், பழங்குடி மக்களுடன் வியாபாரம் செய்வதற்காகவுமே ஐரோப்பிய ஆய்வுப்பயணிகள் முதன்முதல் கனடாவுக்கு வந்தார்கள். பின்னர் குடியேறியவர்கள் வலுவான சமூகங்களாய் நிலையூன்றி, பண்ணைத் தொழிலிலும் கடற்றொழிலிலும் கப்பல் கட்டுவதிலும் சிறந்து விளங்கினர். அத்திலாந்திக் மாகாணக் கரையோரங்களும் இயற்கை வளங்களும் அம்மாகாணங்களுக்கு கனடிய வரலாற்றிலும் விருத்தியிலும் ஒரு முக்கிய பங்கினைக் கொடுத்துள்ளன.

### மக்கள்

இத்தாலிய ஆய்வுப்பயணி ஜோன் கபொற் (John Cabot) 1497ல் நியூபவுண்லாந்தை அடைந்தார். பிரெஞ்சு ஆய்வுப்பயணி ஜேக்கி காடியர் (Jacques Cartier) 1500ல் அப்பிரதேசத்தை ஆய்விட்டார். 1600ல் குடியேறிய ஐக்கேடியர் (Acadians) எனப்பட்ட பிரெஞ்சுக் குடியேறிகளே முதன் முதல் கனடாவில் நிரந்தரமாகக் குடியேறிய ஐரோப்பியர். காலப்போக்கில் பிரித்தானிய தீவுகளிலிருந்தும் ஜேர்மனியிலிருந்தும் குடியேறியவர்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

அமெரிக்கப் புரட்சியின் பொழுதும் (1775-1783) பின்னரும் ஆயிரக் கணக்கான மக்கள் ஐக்கிய அமெரிக்காவை விட்டு வெளியேறினார்கள். அவர்கள் ஐக்கிய பேரரசு விசுவாசிகள் (United Empire Loyalists) எனப்பட்டார்கள். அவர்களுட் பலர் அத்திலாந்திக் புலத்தில் குடியேறினார்கள். அவர்கள் ஆங்கிலேய, அயர்லாந்திய, ஸ்கொட்லாந்திய, ஜேர்மானிய, சுவிற்சலாந்திய, ஒல்லாந்த, இத்தாலிய, யூத, ஆபிரிக்க-அமெரிக்க பின்னணி போன்ற பல்வேறு பின்னணிகளைக் கொண்டவர்கள். பலர் முழுமுதற் குடியேறிகளின் வழித்தோன்றல்கள்.

கனடாவில் உள்ள ஒரே ஓர் இருமொழி மாகாணம் நியூ பிறவுண்ஸ்விக்கே. அங்கு வாழும் மக்களுள் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினர் பிரெஞ்சு மொழி பேசி, பிரெஞ்சு மொழியிலேயே பணியாற்றி வருகிறார்கள்.

### பொருள்வளம்

அத்திலாந்திக் கனடாவின் பொருள்வளம் காலந்தோறும் கடற்றொழில், பண்ணைத் தொழில், காட்டுத்தொழில், சுரங்கத்தொழில் உட்பட்ட ஒரு வலுவான வளத்துறையில் தங்கியிருந்து வந்துள்ளது. அண்மைக் காலத்தில் அதன் பொருள்வளம் பெருகி, பன்முகப்பட்டுள்ளது. தகவல் தொழினுட்பம், துறைசார் சேவைகள், நவீன உற்பத்தித் தொழில்கள், நீர்ப்பண்ணை, எண்ணெய், வாயு ஆய்வு உட்பட்ட வேறு துறைகளின் விருத்திக்கு இது வழிவகுத்துள்ளது. வியாபாரமும் பெருகியுள்ளது.



பிறின்ஸ் எட்வேட் தீவு, நோவா ஸ்கோஷியா, நியூ பிறவுண்ஸ்விக் மாகாண உருளைக் கிழங்கு, பழ வகைகள் கனடா முழுவதும், பிற நாடுகளுக்கும் விற்கப்படுகின்றன. உணவு பதனிடும் தொழில் இன்னொரு முக்கிய பொருள்வளத் துறை ஆகும்.

நியூ பிறவுண்ஸ்விக், நோவா ஸ்கோஷியா இரண்டும் காடுகள் அடர்ந்த மாகாணங்கள். ஆதலால் கடதாசிக் கூழ், கடதாசி, வெட்டுமரம் போன்ற பெறுமதி வாய்ந்த பொருட்களை அவை ஆக்க வல்லவை. நியூ பிறவுண்ஸ்விக்கைப் பொறுத்தவரை வெட்டுமரங்களே பெறுமதி மிகுந்த பொருட்கள். இப்பொருட்களுட் பல வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

காலந்தோறும் கடற்றொழிலில் தங்கியிருக்கும் நியூபவுண்லாந்து-லாபிரடோர் மாகாணம் எண்ணெய், நிக்கல், செப்பு, கோபாற்று (cobalt) போன்ற வேறு இயற்கைப் பொருள்வளங்களையும் ஈட்டி வருகிறது. நியூபவுண்லாந்து-லாபிரடோர் மாகாணத்தின் கரையோரத்துக்கு அப்பால் உள்ள ஐபேணியா (Hibernia), கனடாவில் உள்ள ஐந்தாவது பெரிய எண்ணெய்க் களம் ஆகும். உற்பத்தித்தொழிலும் பிற தொழில்களும் தொடர்ந்து வளர்ந்து வருகின்றன.

அத்திலாந்திக் புலத்தின் பொருள் வளத்தில் சேவைத் துறையும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. கனடாவின் ஏனைய புலங்களைப் போலவே அத்திலாந்திக் புலத்திலும் வழமையான இயற்கைவள உற்பத்தித் துறையை விட வங்கிச் சேவை, அரசாங்க சேவை, நிதிச் சேவை, ஆட்சேவைகளில் அதிகமானோர் பணியாற்றுகிறார்கள்.

அத்திலாந்திக் புலத்தைப் பொறுத்தவரை சென்லோறன்ஸ் ஆற்று வளைகுடாவும் அத்திலாந்திக் சமுத்திரமும் சுற்றுலாவாணர்களை ஈர்க்கும் முக்கிய அம்சங்கள் ஆகும். ஒவ்வோராண்டும் ஆயிரக் கணக்கான சுற்றுலாவாணர்கள் அத்திலாந்திக் மாகாணங்களுக்குச் சென்று கண்கவர் இயற்கைக் காட்சியையும் கரையோரத்தையும் வெதுவெதுப்பான கடற்கரைகளையும் கண்டு களிக்கிறார்கள். அத்திலாந்திக் புலத்தில் வாழும் கனடியர்களுள் ஏறத்தாழ 85,000 பேர் சுற்றுலாத் துறையில் பணியாற்றுகிறார்கள்.

### மக்கள்தொகை (பருமட்டானது)

| | |
|---|---|
| நியூபவுண்லாந்து-லாபிரடோர் | 5,34,000 |
| நோவா ஸ்கோஷியா | 9,43,000 |
| பிறின்ஸ் எட்வேட் தீவு | 1,39,000 |
| நியூ பிறவுண்ஸ்விக் | 7,57,000 |
| அத்திலாந்திக் மாகாணங்கள் | 23,73,000 |

தொடரும்... - மணி வேலுப்பிள்ளை

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# மர அபிமானம் வளர வேண்டும்

2006ம் வருடம் செப்டம்பர் மாதம் சென்னையில் நடந்த ஈஷா பசுமைக்கரங்கள் இயக்கத்தின் மூலம் ஒரே நாளில் 8 இலட்சத்திற்கும் அதிகமாக மரக்கன்றுகள் நட்ட விழாவில் பேசியது.

முதலில் உங்கள் கரங்களைத் தொட்டு முத்தமிடுகிறேன். அந்தக் கரங்கள் எதனால் பெருமை பெற்ற கரங்கள் என்று யோசித்துப் பார்க்கிறேன். பொதுவாக மனிதர்கள் கரங்களுக்கு எதனால் மரியாதை கொடுக்கிறார்கள்? உண்பதற்கு பயன்படுவதனால் அந்த கரங்களுக்கு மரியாதையா? கும்பிடுவதனால் அந்த கரங்களுக்கு மரியாதையா? இல்லை திருவிழாக்களில் கை தட்டுவதனால் அந்த கைகளுக்கு மரியாதையா? என்றால் இவையெல்லாம் கடந்து இந்த மண்ணை காப்பாற்றுகிற மரக் கன்றுகளை நட்டு வந்த கரங்கள் என்பதற்காக உங்கள் கரங்களை நான் தொட்டு முத்தமிடுகிறேன்.

சத்குரு அவர்களைப் பார்த்து நான் வியந்து நிற்கிறேன். அவரைப் பார்க்கிறபோது ஒரு ஆன்மீகவாதி என்று மட்டும் அவரைப் பார்க்காமல் அதையெல்லாம் கடந்து, இந்த மண்ணுக்கு செயல் ஊக்கம் தருகிற ஒரு மாமனிதராக அந்த மனிதரை நான் பார்க்கிறேன்.

நண்பர்களே, இனிமேல் இந்த மண்ணுக்குத் தேவையானது இரண்டு. ஒன்று “மனிதாபி-மானம்”. “மனிதாபிமானம் நிலத்தடி நீரைப்போல குறைந்து கொண்டே போகிறது”. மாவட்டம் என்பது, மாநிலம் என்பது மாவட்டமாக சுருங்கி, மாவட்டம் என்பது ஊராய் சுருங்கி, ஊர் என்பது தெருவாய் சுருங்கி, தெரு என்பது வீடாய் சுருங்கி, வீடு என்பது அவரவர் அறை, அவரவர் டூத்பேஸ்ட், அவரவர் சோப், அவரவர் டவல், அவரவர் செருப்பு, என்று மெல்ல மெல்ல மனிதாபிமானம் சுருங்கிக்கொண்டிருக்கிற காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனிதாபி-மானத்தை வளர்க்கக்கூடிய மனிதர்களே, “மனிதாபிமானம் மட்டும் அல்ல, மனிதாபி-மானத்தோடு சேர்ந்து மர-அபிமானத்தையும் வளர்க்க வேண்டும்”.


அடுத்த தலைமுறை நிகழ்கால மனிதனைப் பார்த்து கேட்கின்ற கேள்வி, நாங்கள் பிறந்தபோது இருந்த பூமியை அப்படியே விட்டுவிட்டு போவீர்களா? இதுதான் மிகப்பெரிய கேள்வி. நாங்கள் பிறந்தபோது சூரியனை மறைக்க வானம் இருந்தது. எங்கள் வானத்தின் உச்சியில் நிலா இருந்தது. பூமியில் நதி இருந்தது. மரங்கள் இருந்தன, பசுமை இருந்தது. இதை அப்படியே விட்டுவிட்டு செல்வீர்களா? எங்கள் புல்வெளி எங்களுக்கு சொந்தமா? எங்கள் நதிகள் எங்களுக்கு சொந்தமா? எங்கள் மலைகள் எங்களுக்கு சொந்தமா? என்று மனிதர்கள் கேட்டால், அதற்கு பதில் சொல்ல வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

நான் ஈஷா யோக மையத்தை சேர்ந்த நண்பர்களைப் பார்த்து வியந்து போகிற ஒரு விஷயம் உண்டு. எல்லோருடைய கண்களிலும் ஒரு சூரியப் பிரகாசம் இருக்கிறது. ஆண்களும், பெண்களும் யாரைப் பார்த்தாலும் மழை ஓடைமாதிரி தெளிவான கண்கள். மேகம் மறைக்காத சூரிய பிரகாசம் மாதிரி கண்கள். நிலா மிதக்கிற கண்கள். இது எப்படி வந்தன என்று யோசித்து பார்க்கிறேன். உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒலி உண்டாகும் என்றான் கவிஞன். உள்ளத்தில் உண்மை உண்டாயின் கண்களிலே ஒளி உண்டாகும் என்று சத்குரு பாராட்டியிருக்கிறார்.

ஒரு தவம் செய்கிறவன், யோகம் செய்கிறவன், அவனுக்கும் பூமிக்குமான உறவைத் திட்டமிட்டு தீர்மானித்துக் கொள்கிறான். செருப்பு தைக்கிறவனுக்கு அந்த ஊசி, அந்த நூல், அந்த தோல், அவன் மனசும், உடம்பும், ஒரு புள்ளியில் சந்திக்கிற போது அதே தியானம். எனவே கடமையினை சரியாக செய்கிறவன் சரியான தியானம் செய்கிறான் என்றே புரிந்துகொண்டிருக்கிறேன். அதை நீங்களும் இந்த மண்ணிற்கு சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த மரக்கன்று இருக்கிறதே, இந்த மண்ணை, பூகோள உருண்டையை உடைந்துவிடாமல் காப்பாற்றுகிற மிகப்பெரிய காரியத்தை நீங்கள் செய்திருக்கிறீர்கள். உங்கள் அமைப்பிற்கு தமிழகத்தின் எதிர்காலம் கடமைப்பட்டிருக்கிறது, இது மிகப்பெரிய செயல்.

மரங்களை வெட்டாதீர்கள், கொல்கத்தா மூழ்கிவிடும். இது மிகப்பெரிய விஞ்ஞான எச்சரிக்கை. இது சில ஆண்டுகளாக சொல்லப்படுகிற செய்தி. மரங்களை வெட்டாதீர்கள், கொல்கத்தா மூழ்கிவிடும். மரங்களை வெட்டுவதற்கும், கொல்கத்தா மூழ்குவதற்கும் என்ன சம்பந்தம் என்று யோசித்து பார்த்தால், இந்த பூமிக்கு மேலே இருக்கிற ஓசோன் கூரை ஓட்டையாகிவிட்டது. ஏன் ஓட்டையாகிவிட்டது? ஆக்ஸிஜன் இல்லை. ஓசோன் கூரையில் ஓட்டை விழுந்துவிட்டால் என்ன நேரும் என்றால், வடிகட்டி வருகிற சூரிய கதிர்கள் நேராக பூமியை தாக்கும். அந்த வடிகட்டாத வெளிச்சம், சூடு, பூமியை சுட வைக்கிறது. பூமியை சுட வைப்பதால் பூமியின் வெப்பம் அதிகரிக்கிறது. பூமியின் வெப்பம் அதிகரித்தால் இமயமலை உருகத் தொடங்குகிறது. இமயமலை உருகத் தொடங்கினால் கங்கை நதியில் வெள்ளப் பெருக்கு வருகிறது. கங்கை நதி வெள்ளப் பெருக்கு நிகழ்ந்தால் கடல் மட்டம் உயர்கிறது. கடல் மட்டம் உயர்ந்தால் கொல்கத்தா மூழ்கப் போகிறது.

இன்னொரு முக்கியமான செய்தி, மரங்களை நம் முன்னோர்கள் பாதுகாத்த அளவிற்கு இன்றைக்கு பாதுகாக்கிறோமா? தலவிருட்சம் என்று ஆலயங்களில் வைத்தார்களே, ஏன்



## சத்குரு வாசுதேவ்

என்று யோசித்து பார்க்கிறேன். தலவிருட்சம் என்று வைத்தது அந்த மரத்தை கோயிலுக்குள் மட்டும் கும்பிடுவதற்கு அல்ல. கோயிலுக்கு வெளியிலும் கும்பிடுவதற்கு. மரத்தைத் தெய்வமாகப் பார்த்தவன், கடவுளாக பார்த்தவன், தாயா-கப் பார்த்தவன், ஞானமாக பார்த்தவன், தத்துவமாகப் பார்த்தவன் தமிழன். மறந்துவிட்டோம் இன்றைக்கு. மரம் என்பது சராசரி ஒரு வியாபாரப் பொருள் என்று சுருங்குகிறபோது தான் மரம் தனது அர்த்தத்தை இழந்துவிடுகிறது.

ஒரு சமஸ்கிருத ஸ்லோகம் உண்டு. வீடு கட்டும்போது பூமி பூஜை செய்கிறார்கள் இல்லையா, அங்கே ஒரு மந்திரம் சொல்லப்படுகிறது. அந்த மந்திரத்துக்கு என்ன பொருள் என்று அறிந்து ஆச்சரியப்பட்டு போனேன். மரங்களின் மீது எவ்வளவு காதல் வைத்திருக்கிறான் அந்த சமஸ்கிருத பாட்டைப் படித்தவன். இப்படித் தொடங்குகிறது ஸ்லோகம். மரங்களே, மரங்களில் குடியிருக்கும் பறவைகளே, எங்களை மன்னித்து விடுங்கள்... வீடு கட்டப்போகிறோம், மண்ணைத் தோண்டுகிறோம் உங்கள் இடத்தில் நாங்கள் வந்து குடியிருக்கப் போகிறோம். உங்களை அகற்றுகிறோம், எங்களை மன்னித்து விடுங்கள்... என்று தொடங்குகிறது ஸ்லோகம்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

என்ன தெரியுமா முக்கியம், நீங்கள் பிள்ளைகளைப் பெறுகிறீர்கள், பிள்ளைகள் பேர் சொல்கிறார்களோ, இல்லையோ, மரங்கள் பேர் சொல்லும். ஏனென்றால் பிள்ளைகளைவிட மரங்களுக்கு ஆயுள் அதிகம். இன்னொரு விஷயம்... பிள்ளைகள் அமெரிக்கா போய்விடுவார்கள், மரங்கள் அமெரிக்கா போகாது. ஆகவே பிள்ளைகளுக்கு பக்கத்தில் நீங்கள் மரங்களையும் வைத்துக்கொள்ளுங்கள்.

எனக்கு சின்ன வயதில் மரங்களோடு ஒரு சினேகிதம். எங்கள் ஊரில், எங்கள் பள்ளியில் ஒரு அசோக மரம் வளர்த்தேன். நான் தினந்தோறும் ஊருக்கு வெளியே இருந்து தண்ணீர் எடுத்து வந்து வளர்த்த அசோக மரத்தை இப்போதுகூட தொட்டு தொட்டுப் பார்த்துவிட்டு வருவேன். அது மரமல்ல, என் பால்ய வயதினுடைய உருவம். அது மரமல்ல, அது என்னுடைய தமிழின் உயரம். அது மரமல்ல, என் நினைவுகளினுடைய பசுமை நிறம்.

\- கவிப்பேரரசு வைரமுத்து


**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

**MERVIS & HWY 401**
2 Story detached home for sale. Very demand area.

**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

**LAND VALUE**
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

**GAS STATION**
North of Barrie with property. Good income. Store + Apartment

# மோட்கேஜ் கிளினிக்

- லைன் ஒப் கிரெடிட் (equity) எடுக்க வேண்டுமா?
- கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமன்டையும் ஒரே பேமண்டாக மாற்ற வேண்டுமா?
- ரீபைனான்ஸ் செய்ய வேண்டுமா?
- 2வது மற்றும் 3வது மோட்கேஜ தேவையா?
- பாங்க்ரப்சி, கொன்சுயுமர் புறப்போசல் செய்தோருக்கு மோட்கேஜ் தேவையா?
- உரிய நேரத்தில் மோட்கேஜ் தவணைப் பணத்தினை செலுத்தமுடியாது பவர் ஒப் சேலினை எதிர்நோக்குகிறீர்களா? உடனடித்தீர்வுக்கான ஆலோசனைகள் தேவையா?
- 2வது 3வது தடவை வீடு வாங்குவதற்கான மோட்கேஜ் தேவையா?
- உங்கள் வீட்டு உரிமத்தினை உறவினரின் பெயருக்கு மாற்ற வேண்டுமா?
- அனைத்து ரியல் எஸ்டேட் சம்பந்தமான சேவைகளையும் குறைந்த செலவில் செய்ய வேண்டுமா?

மற்றும் பல சேவைகள்...

**வோக் இன் சனிக்கிழமை தோறும் 9.00 am - 5.00 pm**

**416-644-3555**

**CENTUM Rapid Mortgages Inc.**
211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4
FSCO LIC# 10156

**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Mortgage Development Manager & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. 416-259-2002 "Rapid Response; Rapid Results"

# விளையாட்டுத் தகவல்கள் 348

## பிராட்மேனுக்குப் பிறகு சிறந்த பேட்ஸ்மென் யார்? அலசுகிறார் மார்ட்டின் குரோவ்!




டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மிகச்சிறந்த பேட்ஸ்மென் டான் பிராட்மேன் என்பதை 100 சதங்கள் அடித்து சச்சின் கடந்து வந்தாலும் இன்னும் இந்த விவாதம் நடந்தவண்ணமே உள்ளது. நியூசீலாந்தின் மிகச்சிறந்த பேட்ஸ்மென் மார்ட்டின் குரோவ் பிராட்மேனுக்கு அடுத்த இடத்தில் யார் என்பதை அலசியுள்ளார்.

பிரபல தனியார் கிரிக்கெட் இணையதளத்தில் அவர் எழுதியுள்ள பத்தியில் கூறியிருப்பதாவது:

பல்வேறு காலக்கட்டங்களிலிருந்து நாம் 4 மிகச்சிறந்த பேட்ஸ்மென்களை எடுத்துக் கொள்வோம்.


வாலி ஹாமண்ட் என்று யாரும் நினைக்கவேண்டாம். 'கறுப்பு பிராட்மேன்' என்று அழைக்கப்படும் மேற்கிந்திய பேட்ஸ்மென் ஜோர்ஜ் ஹெட்லிதான் டான் பிராட்மேனுக்கு அடுத்த படியாக 2வது தலை சிறந்த பேட்ஸ்மென்.



ஏன் ஜார்ஜ் ஹெட்லி எனில் ஒவ்வொரு 4 இன்னிங்ஸ்களிலும் அவர் சதம் எடுத்துள்ளார். ஆனால் ஹேமண்ட் ஒவ்வொரு 7 இன்னிங்ஸ்களிலும் சதம் எடுத்துள்ளார். எனவே டான் பிராட்மேனுக்கு நெருக்கமாக உள்ளவர் மேற்கிந்திய அணியின் ஜோர்ஜ் ஹெட்லிதான்.

இவருக்கும் டான் பிராட்மேன் போன்ற அதே மனோநிலைதான். போட்டிக்கு முதல் நாள் தூங்க மாட்டார். மைதானத்தில் நிற்பதுதான் அவருக்கு ரிலாக்சான டைம். இதனால் ஜோர்ஜ் ஹெட்லிதான் சிறந்த பேட்ஸ்மென் அதாவது நம்பர் 2.

சரியாக 20 ஆண்டுகள் கழித்து மீண்டும் ஒரு அபார பேட்ஸ்மென் மேற்கிந்திய தீவுகளிலிருந்து வருகிறார் அவர் கேரி சோபர்ஸ். பிராட்மேன் போலவே இவரும் அவரது தினத்தில் கடுமையான அதிரடி



மன்னன். அனைத்து சூழல்களிலும் பிட்ச்களிலும் பந்து வீச்சுகளிலும் இவரை கட்டுப்படுத்துவோர் இல்லை என்றே அப்போதைய பார்வை. வேகமாக சதம் எடுப்பார், சீரான முறையில் சதம் எடுப்பார். ஆல்ரவுண்டராக, கேப்டனாக இருந்தும் ஒவ்வொரு 6வது இன்னிங்ஸிலும் சீராக சதம் கண்டுள்ளார். எனவே சோபர்ஸ் ஜோர்ஜ் ஹெட்லிக்கு அடுத்த இடத்தில் இருகிறார்.



இவருக்கு அடுத்தபடியாக மேற்கிந்திய தீவுகளின் ஆட்களை அடித்து வீழ்த்தும் படு பயங்கர பந்து வீச்சிற்கு எதிராக கொடி நாட்டிய பேட்ஸ்மென் சுனில் கவாஸ்கர் என்றால் மிகையாகாது. முதலில் நிற்கவேண்டும், பிறகு தாக்கவேண்டும், பிறகு ஆட்கொள்ளவேண்டும். மேற்கிந்திய பந்து வீச்சாளர்கள் விட்டு விடுவார்களா என்ன? ராபர்ட்ஸ், கார்னர், ஹோல்டிங், மார்ஷல், கிரா.ஃப்ட் ஆகியோரை எதிர்கொண்டு இவர்களுக்கு எதிராகவே 7 சதங்களை எடுத்துள்ளார் மேற்கிந்திய தீவுகள் பந்து வீச்சு உச்சத்தில் இருந்தபோதே அவர்களுக்கு எதிராக 7 சதங்கள் கவாஸ்கரின் சாதனையாகும். இவரது காலக் கட்டத்தில் அதிரடி வீரர்களான விவ் ரிச்சர்ட்ஸ், கிரெக் சாப்பல் இருந்தும் இவர்களை விட ஆதிக்கம் செலுத்திய ஒரு உயரம் குறைந்த வீரர் என்றால் அது சுனில் கவாஸ்கர்தான். விவ் ரிச்சர்ட்ஸ் மேற்கிந்திய தீவுகளின் பயங்கர பந்து வீச்சை சந்திக்கவேண்டிய நிர்பந்தம் இல்லை. இந்த விஷயத்தில் கிரெக் சாப்பலையும் கடந்து நிற்பவர் சுனில் கவாஸ்கர்.



கடைசியாக டான் பிராட்மேனே தன்னைப் போல் விளையாடுவதாக அரிய பாராட்டைப் பெற்ற சச்சின் டெண்டுல்கர். தொடர்ந்து அவரது கூற்றை நிரூபித்து வருகிறார் சச்சின். இவர் இந்தக் காலத்தின் டான் பிராட்மேன். அவ்வளவு ரன்களை எடுத்துள்ளார் சச்சின். ஆகவே ஹெட்லி, சோபர்ஸ், சுனில் கவாஸ்கர் அல்லது சச்சின் டெண்டுல்கர்? இவர்களில் எங்கிருந்து துவங்குவது என்பதை தீர்மானிப்பது கடினமே. இதனால் டான் பிராட்மேனுடன் களமிறக்கினால் யாரை களமிறக்கலாம் என்று யோசித்து பார்ப்போம். என்னைப் பொறுத்தவரை டான் பிராட்மேனுடன் களமிறங்க மிகப்பொருத்தமானவர் கேரி சோபர்ஸ்தான். இவ்வாறு கூறியுள்ளார் மார்ட்டின் குரோவ்.

ஆனால் மேலும் ஸ்ட்ராங்கான பேட்ஸ்மென்களை விட்டு விட்டார் மார்ட்டின் குரோவ். குறிப்பாக 503 ரன்கள் 375 ரன்கள் இங்கிலாந்துக்கு எதிராக 400 என்று வெளுத்து வாங்கிய மேற்கிந்திய தீவுகளின் மற்றுமொரு கேரி சோபர்ஸ் என்று வர்ணிக்கப்பட்ட பிரையன் லாராவை ஏன் மார்ட்டின் குரோவ் விட்டுவிட்டார் என்பது புரியவில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தனி மனிதனாக 153 நாட் அவுட் என்று வெற்றித் தேடித் தந்த இன்னிங்ஸை கிரிக்கெட் ரசிகர்கள் மறக்க முடியுமா? சச்சின் டெண்டுல்கரின் இன்னிங்ஸில் எதையாவது அந்த தரத்திற்கு கூற முடியுமா என்பது விவாதத்திற்குரியதே!

## சென்னையில் ஜீடு நடப்பதில் தொடர் குழப்பம்

சென்னை போட்டிகளை கொச்சியில் நடத்துவதிலும், சென்னை அணி சார்பில் முக்கிய வீரர்கள் பங்கேற்காவிட்டால் அணிக்கு பலம் குறையும் என்று அணியின் உரிமையாளர்கள் ஐ.பி.எல் நிர்வாகத்திடம் கருத்து வேறுபாடு தொடர்வதாலும், சென்னையில் திட்டமிட்டபடி ஐ.பி.எல். போட்டிகள் நடைபெறுவதில் தொடர் இழுப்பறி நடந்து வருகிறது. ஆறாவது ஐ.பி.எல்.டி20 தொடர் வரும் ஏப்ரல் 3 ஆம் தேதி தொடங்குகிறது. சென்னையில் நடக்கும் போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்கேற்க கூடாது என்று தமிழக அரசு கேட்டுக் கொண்டது.


இதை ஏற்றுக்கொண்ட ஐ.பி.எல் நிர்வாகம், மாற்று வழியை தேடியது. அணித்தலைவர் தோனியின் சொந்த ஊரான ராஞ்சியில் அனைத்து போட்டிகளையும் நடத்தலாம் என்று அணி உரிமையாளர்கள் தெரிவித்தனர். இதற்கு ஐ.பி.எல்., நிர்வாகம் மறுப்பு தெரிவித்தது. கடைசியில், சென்னையில் மட்டும் இலங்கை வீரர்கள் பங்கேற்க மாட்டர் என்று உறுதி தெரிவித்தது. பிரச்சனை தீர்ந்தது என்ற நிலையில் சென்னைக்கெதிரான போட்டிகளில் முக்கிய வீரர்கள் இல்லாமல் களமிறங்கினால் அது அந்த அணிக்கு சாதகமாகி விடும் என்று அணி உரிமையாளர்கள் ஏற்க மறுக்கின்றனர்.


இதுகுறித்து பேச்சு வார்த்தை நடைபெறும் என்றும் கூறப்படுகிறது. இதில் முடிவு ஏற்பட்டால், சென்னையில் நடக்கவுள்ள போட்டிளை கேரளாவின் கொச்சிக்கு மாற்ற முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. தவிர, விசாகப்பட்டின மைதானத்தையும் தயார் நிலையில் வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். எனினும் மே 21, 22 ல் நடக்கவுள்ள 'பிளே ஆப்' போட்டிகள் கட்டாயம் சென்னையில் நடக்காது என்று தெரிகிறது. ஏனெனில், இறுதிச்சுற்றுக்கான தகுதிப் போட்டி என்ற நிலையில் முன்னணி வீரர்களை சேர்த்தாக வேண்டிய நிலை இருப்பதால், அதில் இலங்கை வீரர்கள் நிச்சயம் இடம் பெறுவர் . இந்த போட்டிகள் பெரும்பாலும் விசாகப்பட்டினத்தில் நடக்கும் எனத் தெரிகிறது.

## போர்க்குற்றம் என்கிறார்கள்... விலகி விடுங்கள்- இலங்கை வீரர்களுக்கு ரணதுங்கா கோரிக்கை

தென் இந்திய அரசியல்வாதிகள் போர்க்குற்றம் என்று குற்றம் சுமத்தியுள்ளனர். எனவே நாட்டின் நலன் கருதி இலங்கை வீரர்கள் ஐ.பி.எல். கிரிக்கெட்டிலிருந்து முற்றிலும் விலகுவதுதான் சிறந்தது என்று கூறியுள்ளார் ரணதுங்கா. நாட்டின் நலன் கருதி என்றால் எந்த நாட்டின் நலன் கருதி என்று ரணதுங்கா குறிப்பிடவில்லை. இந்தியாவின் ஒரு பகுதியில் (சென்னை) விளையாட அனுமதியில்லையெனில் முழுதுமே விலகிவிடவேண்டும். தென் இந்திய அரசியல்வாதிகள் போர்க்குற்றம் என்கிறார்கள் எனவே அதனை கருத்தில் கொண்டு நாட்டை நினைத்து முற்றிலும் இலங்கை வீரர்கள் விலகவேண்டும். ஐ.பி.எல். ஆட்சிக்குழு என்ன செய்திருக்க வேண்டுமெனில் அனைத்து சென்னை போட்டிகளையும் அங்கிருந்து தூக்கியிருக்க வேண்டும். இலங்கை வீரர்கள் முழுதும் பங்கேற்பதை அவர்கள் விரும்பினால் இதனைச் செய்ய வேண்டும். ஆனால் இவையெல்லாம் வெறும் அரசியல் தந்திரம். இவ்வாறு கூறியுள்ளார் அர்ஜுனா ரணதுங்கா.

**எஸ். கணேஷ்**





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# தேசம் பல - முடிவு ஒன்று!

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 387

'தெற்கு நோக்கி போகும் அந்த ரயிலில் தள்ளாத வயதில் ஏற்றி தள்ளி விடும் பிள்ளைகளைக் காணமுடியுமா?' கேட்கவே ஒரு மாதிரி இருக்கின்றது. இந்த நிலைமை 2020 இல் உலக நாடுகளில் முன்னேறிய நாடாக வரவிரும்பும் இந்தியாவில் உள்ளது. இளைஞர்களைக் கனாக் காணச் சொன்ன டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், இந்த நிலைமையைப் பற்றி சொன்னாரா? பெற்று, வளர்த்து, படிப்பித்து, பாரில் மதிக்கக்கூடிய மனிதர்களாக ஆக்கியவர்களையே இவ்வாறு செய்கின்றார்கள்.



இந்தியாவின் தெற்கு கோடியில் இருக்கும் சிறப்பு மிக்க நகரம் கன்னியாகுமாரி. மக்கள் விரும்பிச் சென்று பார்க்கத் துடிக்கும் இடம். சுவாமி விவேகானந்தர் தியானம் செய்த இடம், காந்திஜி பிரார்த்தனை செய்த இடம், வள்ளுவரின் உயர்ந்த சிலையை முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி அமைத்த இடம். ரம்மியமான சூரிய உதயம், அஸ்த்தமனம் ஆகிய அந்த காட்சியை காணச்சிறந்த இடம்.

ஆனால் இன்றோ ரயிலின் இறுதிப் புள்ளியில் இவ்வாறு வந்து இறங்கும் முதியவர்களின் நிலையோ பரிதாபத்திற்குரியது. இங்குவரும் வயதானவர்கள் தமது பிந்திய காலத்தை எவ்வாறு கழிக்கின்றார்கள, என்ன செய்கின்றார்கள். இவர்களின் அந்திய காலம் எவ்வாறு முடிகின்றது. இறுதிக்கிரியைகளை யார் செய்கின்றார்கள்? ஏன் செய்கின்றார்கள்? பெரியதொரு கேள்வி கண்முன் பூதாகரமாக தோன்றுகின்றது.

மார்ச் 02, 2013 இரவு 11 மணிஅளவில் Vijay TV ஐ பார்த்தபோது; 'நம்தேசம், நம்மக்கள்' என்ற தொலைக்காட்சி நிகழ்சியை கோபிநாத் நடத்திக்கொண்டு இருந்தார். அது இன்றைய முதியவர்களின் நிலைமை பற்றிய ஒரு நிகழ்வு. முதியவர்களின் நிலைமையைபற்றி முதியவர்களைக் கொண்டும், இவ்வாறானவர்களின் வாழ்வில் அக்கறையும், ஆர்வமும் கொண்டவர்களைக் கொண்டும் நடத்தப்பட்ட நிகழ்ச்சி. எமக்குத் தேவையானதும், அனேகமான தமிழ் தொலைக்காட்சிகள் தொட்டுப்பார்க்க நேரம் ஒதுக்காத ஒரு நிகழ்வாகவும் எனக்குத் தோன்றியது.

இதனைப்பார்த்ததும், முதியவர்களைப்பற்றி எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. உடம்பில் பலம் இருக்கும் போது எப்படியும் வாழலாம். எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்காதவர்களின் நிலைமை தான் என்று கூறலாமா? பிள்ளைகளே எல்லாம் என வாழ்ந்தவர்கள் சிலரின் நிலைமையும் இதில் அடங்குகின்றது. பிள்ளைகளை ஆலமரமாக வளர்த்து விட்ட பெற்றோரை இந்த நிலைமைக்கு தள்ளுவது நியாயமா, சரியா? இதே நிலைமை எங்களிற்கு வராதா? இதே நிலைமை சிறிது காலத்தில் எங்களிற்கும் வரத்தானே போகிறது. எமது பெற்றோரிற்கு நாம் செய்ததைக் தானே நமது பிள்ளைகள் நமக்கு செய்யப் போகின்றார்கள்? சொல்லை விட செயலிற்குத் தானே பலம் அதிகம்.

இந்த நிலைமை 20-30 வருடங்களிற்கு முன்பு இருந்ததா? அவ்வாறு இல்லாமல் இருந்திருந்தால், இவ்வாறான நிலைமை வந்ததன் காரணம் தான் என்ன? சிந்தித்து செயல்பட வேண்டிய தருணம் இது. முன்னைய காலங்களில் மக்கள் குறைந்த வயதில் ஏறக்குறைய 60 வயதில் இறந்து விடுவார்கள். அந்த நேரத்தில் தமது செயல்களை தாமே செய்வார்கள். உடம்பில் தென்பு இருக்கும். உழைக்கும் பலமும் இருக்கும். அதனால் முதியோர் இல்லம் தேவை இல்லாமல் இருந்தது. ஆனால் இன்று நிலைமை வேறு. எதிர்காலத்தில் இந்த நிலைமை மேலும் மோசமடையப் போகின்றது.

உலகத் தொடர்பு அமைப்பு, விஞ்ஞான வளர்ச்சி, மருத்துவ வளர்ச்சி ஆகியவற்றால் மக்களின் ஆயுட்காலம் நீடிக்கப்படுகின்றது. அனேகர் 80 வயதைத் தாண்டியே மரணிக்கின்றார்கள். அந்த வயதுவரை வாழ்ந்தாலும், இவர்களில் பலருக்கு பிறரின் உதவியில்லாமல் வாழ்வது என்பது நடைமுறையில் சிக்கலாகவே உள்ளது. இந்த வருடத்தில் (2013) தை இலிருந்து மாசி இறுதிவரை ஏழு மரணநிகழ்வுகளுக்குச் செல்ல வேண்டி இருந்தது. மரண-மானவர்கள் எல்லோருமே ஏறக்குறைய 80 வயதானவர்கள். ஒருவர் 100 வயதை அண்மித்தவர். இதுவே இன்றைய

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P.Eng.

5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666

**CONDO FOR RENT**



HWY 401 & KENNEDY

Brand new condo for rent.
2 Bedroom,
2 washroom.Avail. immediately.
Rent $1495.

**101 ERSKINE IN UPTOWN T0RONTO**



Another Tridel Project. price starting from $259,900. Summer 2015.

**CONDO FOR SALE**

HWY 401 & KENNEDY

1 Bedroom + den.
Indoor swimming pool.
Recreation facilities.
Asking price $259,900.

**CONVENIENCE STORE FOR SALE**

Over 10 years establish convenience / Grocery / Audio / video. Space for expansion. Asking only $129,900

**COMMERCIAL SPACE FOR LEASE**



MIDDLEFIELD & FINCH

1000Sq.ft. Available on the main floor. many uses available. avail. April 01, 2013.

# சாரதி பயிற்றுனர் தொழில் செய்வோரை உளவு பார்த்து காட்டிக் கொடுக்கும் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகை

## கனடிய தகவல் தொடர் 192

***ON GOING STAR INVESTIGATION IN DRIVING SCHOOL'S***

கனடாவின் ஆங்கில ஊடகமான 'ரொறொன்ரோ ஸ்ரார்' ஒரு புதிய பாணியில் தங்கள் புலனாய்வு ஊடகத்துறை பணியினை (Investigative Journalism) ரொறொன்ரோவிலும், அதனை அண்மித்த நகரங்களிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் 'சாரதி பயிற்றுனர்கள்' (Driving instructors) மற்றும் சாரதி பயிற்றுனர் பாடசாலைகள் (Driving Schools) ஆகியவற்றுக்கெதிராக துப்பு துலக்கிய தகவல்களை கடந்த மாதம் முதல் கிழமையிலிருந்து அடுத்தடுத்த இதழ்களில் முன்பக்க தலைப்பு புலனாய்வு செய்தி கட்டுரைகளாக பிரசுரித்து பரபரபாக்கியிருந்தனர்.

அவர்களின் புலனாய்வு கட்டுரைகளின் தலைப்புகள் பின்வருமாறு அமைந்திருந்து.

'ரொறொன்ரோ நகரின் றைவிவ் ஸ்கூல் ஒரு நில சுரங்கம்' (Driving Schools in Toronto area a Minefield)

'சாரதி பயிற்றுனர்கள் சட்டத்தினை வளைத்து தற்காலிக பாதையினை கண்டு பிடித்துள்ளனர்' (Instructors find detour around law)

விறுவிறுப்பான இப்புலனாய்வு கட்டுரைகள் கடந்த மார்ச் 05, 2013 செவ்வாய்கிழமை படங்களுடன் முன்பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது. அடுத்து அடுத்த நாள் தொடர்ந்தது.

**'ஸ்ரார் எடுத்த நடவடிக்கை சட்ட ஒழுங்குகளை பின்பற்றுமாறு றைவிங் கூல்களுக்கு மாகாண அரசு எச்சரிக்கை'** (Star gets action: province warns driving schools follow the rules)

மார்ச், 06, 2013 இல் மேற்குறிப்பிடப்பட்ட இந்த தலைப்பில் புலனாய்வு கட்டுரை வெளிப்பட்டிருந்தது. 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகை எடுத்த தீவிர புலனாய்வு நடவடிக்கையினை தொடர்ந்து மாகாண போக்குவரத்து அமைச்சு நீண்ட சுற்றறிக்கை ஒன்றினை சகல சாரதி பயிற்றுனர் அனுமதி பத்திரம் பெற்று தொழில் செய்பவர்களுக்கும் (Licensed Driving Instructor) அனுப்பி வைத்தது. அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கையில் சாரதி பயிற்றுனர் களுக்குரிய சட்ட ஒழுங்குகளை சற்று நினைவு படுத்தி மீண்டும் ஒருமுறை எச்சரிக்கை செய்தமாதிரி அவர்களின் அறிக்கைகள் அமைந்திருந்தன.

**'றைவிங் ஸ்கூல்களுக்கு எதிரான ஆயிரம் ஆயிரம் முறைப்பாடுகளை மாகாண அரசு இரகசியமாக பாதுகாக்கும்** (The thousands of complaints against driving schools, the province is keeping seceret)

மேற்குறிப்பிட்ட தலைப்பில் புலனாய்வு கட்டுரை மார்ச் 07, 2013 பத்திரிகையில் பரபரப்பாக வெளியிட்டிருந்தது. $7500 டொலர் பணம் மாகாண போக்குவரத்து அமைச்சுக்கு செலுத்தி 2007 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கிடைத்த சுமார் 4000 பக்க முறைப்பாடுகளை தாம் பெற்றுக் கொண்டதாகவும், இவ் இடைப்பட்ட காலத்தில் சுமார் 477 சாரதி பயிற்றுனர்களின் அனுமதி பத்திரம் மொத்தமாக பறிமுதல் செய்யப்பட்டது என்ற தகவலை குறிப்பிட்டு அவை தொடர்பான விபரங்களை நபர்களின் பெயர்களை தருமாறு கேட்டபோது அரசு தரமறுத்துவிட்டது என புலனாய்வு ஊடகவியலாளர் திரு. கென்ஜோன் வாலஸ் (Mr.Kenyon Wallace) குறைபட்டுக் கொண்டார்.

**'ஸ்ரார் புலனாய்வு - பாப்பாய் சிக்கன்** (popeys Chichen) **வாங்குவதற்கு விரைவாக நிறுத்தப்பட்டது என ரைவிங் ஸ்கூலுக்கு எதிராக பெண்முறைப்பாடு'** (Star investigation quick stop at popeyed chicken among womans's complaints against driving school)

மேற்குறிப்பிட்ட தலைப்பில் புலனாய்வு கட்டுரை மார்ச் 12, 2013 வெளியிட்டிருந்தது. தொழில் நேரம் உணவகத்திற்கு முன்னால் அவசரமாக நிறுத்தினார். கைத்தொலைபேசியில் அதிகநேரம் வாகனம் செலுத்த கற்று கொடுக்கும் நேரம் பேசிக்கொண்டிருந்தார் என ஒரு குறிப்பிட்ட பயிற்றுனரின் விபரங்களை குறிப்பிட்டு 'சமன்தா பார்' (Ms. Samantha farr) என்ற 23 வயது நிர்வாகத்துறையில் பணிபுரியும் பெண்மணி ஒருவர் தமது படத்துடன் முறைப்பாடுகள் வழங்கியிருந்தார்.



மாகாண போக்குவரத்து அமைச்சுக்கு உதவியாக, மக்கள் நலன் கருதி இவ் ஆங்கில ஊடகம் மேற்கொள்ளும் வேவு பார்க்கும் புலனாய்வு நடவடிக்கைகளுக்கும் இடையில் ஒரு மாகாண அரசின் அனுமதிபத்திரம் பெற்ற சாரதி பயிற்றுனர் (Licensed driving instructor) எப்படி உருவாக்கப்படுகின்றார் என்பது சகலரும் எதிர்பார்க்கும் கேள்வி?

உருவாக்கப்பட்ட ஒரு சாரதி பயிற்றுனர் பயிற்சி பாடசாலையினை ஆரம்பித்து அரசின் அனுமதியினை எப்படி பெறுவது என்ற விடயத்திற்கு முதலில் வருவோம்.

**சாரதி பயிற்றுனர் அனுமதிபத்திரம் பெறுவது! சொந்தமாக பாடசாலை ஆரம்பிப்பது என்பவற்றில் மாகாண அரசின் சட்டவிதிகள்**

- தொடர்ந்து நான்கு வருடத்திற்கு குறையாது வாகனம் செலுத்திய அனுபவங்கள்.
- வாகனமோட்டும் குற்றப்பதிவுகள் (Driving Violations) குற்றப்பதிவுகளில் ஒரு எல்லையினை மீறாது இருக்க வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு மூன்று வருடத்திற்கு ஒருமுறையும் சாரதி பயிற்றுனர் அனுமதிபத்திரம் புதுப்பிக்கும் போது இதே விதிகளை மீறாது இருக்க வேண்டும் என்ற நிபந்தனை.
- சாரதி பயிற்றுனர் கற்கை நெறிகள், பயிற்சி நெறிகளுக்கு தோற்றி பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட முறையில் அனுமதிபத்திரம் பெற்றவர் எந்த நகரில் தொழில் செய்ய விரும்புகின்றாரோ அந்த நகரசபையின் அனுமதி பத்திரம் பெற்று கொள்ள வேண்டியது அடுத்த கட்டம்.

- தொழில் வாகனம் சட்டவிதிகளுக்கு அமைய பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதுடன் அதில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு (Install duvall brake & mirror with safty standards)
- பயிற்றுனர் தொழிலுக்கு வாகனத்தினை உபயோகிப்பதற்கு விசேட வாகன காப்புறுதி!
- போக்குவரத்து அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சாரதி பயிற்றுனர் பாடசாலையில் (Ministry approved driving schools) பதிவு செய்யப்பட்டு அவர்களுடன் ஒப்பந்தம்

இத்தகைய நிபந்தனைகளை பூரணப்படுத்தி நகரசபையின் அனுமதி பத்திரத்துடன், வாகனத்தின் பின்னால் பொருத்த 'சிவப்பு இலக்க அனுமதி தகடு' ஒன்றும் தருவார்கள். அதனை பொருத்த வேண்டும். இந்நகர சபையின் அனுமதி பத்திரத்தினையும் ஒவ்வொரு வருடமும் மேற்குறிப்பிட்ட பரிசீலனைகளுடன் புதுப்பித்துக் கொள்ளவும் வேண்டும்.

சொந்தமாக பாடசாலை ஆரம்பிப்பவர் வகுப்பறை, அலுவலகம், பாடத்திட்டங்கள், வகுப்பறையில் கற்பிக்கும் ஆவணங்கள் யாவும் ஒழுங்கு விதிக்கு அமைய உருவாக்கி வகுப்பறையில் போதிக்கும் ஆசிரியர் அதற்குரிய இன்னொரு விசேட அனுமதிபத்திரம் பெற்றவர் என்பதனையும் உறுதிப்படுத்தி மாகாண அரசு, நகரசபை



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

TUTORING
By Qualified & Experienced Tutors
KEEN TUTORING CENTRE
GRADE 6 - 12, IB, MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
➢ SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
➢ MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
➢ DATA MGT, ENGLISH & FRENCH
Call (647) 341 3975 / (647) 869 3974



Sell your home

# faster

and more **money**

Kingston rd / Meadowvale Rd




5 Bedrooms, 4 W Rooms
Finished Bsmt

14th Av / Lagacy Dr




4 Bedrooms, 4 W Rooms
Hardwood Floor Finished Bsmt

Morningside/Finch




3 Bedrooms, 3 W Rooms
Ceramic, Hardwood Floor

Brimley/Eglinton




3 Bedrooms, 1 W Rooms
Hardwood Floor

Reeves Way/ 9 Th Line




3 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor

Mccowan/Steeles




3 Bedrooms, 2 W Rooms
Ceramic Floor

Markham Rd/Denison




3 Bedrooms, 3 W Rooms
Ceramic, Hardwood Floor

Hover Park/48/9th




4 Bedrooms, 3 W Rooms
Ceramic, Hardwood Floor

9th Line/14th Ave




3 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor

9th Line & 407




4 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor

Mccowan/Highglen




4+2 Bedrooms, 5 W Rooms
Hardwood , Ceramic Floor

Brimley/Lawrence




3 Bedrooms, 1 W Rooms
Granite ,Hardwood Floor

Harmony N/Taunton





3 Bedrooms, 3 W Rooms
Hardwood

Westney/Rossland




3+1 Bedrooms, 3 W Rooms
Ceramic Floor

Business with Property




Best Prize

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
**Your home sold in 30 days or we buy it**



**Elaguppillai Srinathan (Mike) B.Sc**
Sales Representative

**Direct 416 - 276-1225**
Email: esrinathan@yahoo.com

**Ph1-7800 Woodbine Ave**
**Markham, ON L3R 2N7**
**Office: 905-470-9800**
**Fax: 905-470-7770**

KZG 647-200-5833

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# தேசம் பல...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

நிலைமை. கனடாவில் இந்த நிலைமை நிச்சயம் தொடரும். வளர்ந்த நாடுகளில் மற்றும் வளர்முகநாடுகளில் மக்களின் ஆயுட்காலம் அதிகரித்தே செல்கின்றது. குறிப்பாக நாம் இருக்கும் கனடாவில் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.



வயதான பலர், தமது பிற்காலத்தில் தனிமையை உணர்கிறார்கள். தேவைகளிற்கு பிறரின் உதவியைத் தேடுகிறார்கள். தனியாக வாழ்வதற்கு ஒருவகையில் பயப்படுகிறார்கள். கனடா போன்ற நாடுகளில் முதியோர் இல்லம், அரச உதவிகள் இருந்த போதிலும் எமது வயதானவர்களிற்கு அங்கு வாழ்வதற்கு மொழிப்பிரச்சினை, பணப்பிரச்சினை, உணவுப்பிரச்சினை மற்றும் வாழ்க்கை முறைச் சிக்கல் எழுகின்றன. இது ஒரு புறம். இந்தியா போன்ற நாடுகளில், இங்குள்ள வசதிகள் போல் அங்கு காணப்படுவது குறைவு. வளர்ந்த நாடுகளில் முதியவர்களிற்கு கிடைக்கும் வசதிகள் அங்கு கிடைப்பது குறைவு. இவ்வாறான நிலைமைகளில்தான் பிள்ளைகள் பெற்றோரைத் தள்ளி வைக்கின்றார்கள். ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் தன்னார்வ நிறுவனங்கள், மற்றும் தாராளமனம் படைத்தவர்கள் இவர்களுக்கு உதவி செய்வது மனதிற்கு மகிழ்ச்சியான விடயம். அந்தப் பெரிய சனத்தொகைக்கு இந்த உதவிகள் போதாது. அரசின் ஒருமித்த புதிய சட்டங்கள், புதிய அணுகுமுறையே இதற்கு தகுந்த வழிவகுக்கும்.

மேலைத்தேச நாடுகளின் நிலைமைகளை வேறாக ஆராயப்படல் வேண்டும். 80களில் கனடாவிற்கு வந்த பலரின் வயது 30 இற்கு குறைவாகவே காணப்பட்டது. இவர்கள் 80 வயதைத் தாண்டி வாழ்வார்கள் எனக் கொண்டால், இவர்கள் சராசரியாக 50 வருடங்களிற்கு மேலாக கனடாவில் வாழ்வார்கள் எனக் கொள்ளலாம். ஆனால் இந்த 50 வருடங்களில் குறைந்தது 35 வருடங்களாவது தொழில் புரியக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

ஆண், பெண் இருபாலாரும் நியாயமான தொழில் புரிந்து ஒரு குறிப்பிட்ட தொகையை வேலை ஆரம்பித்த காலத்தில் இருந்து சேமித்து வந்தால் சிறந்தது. நீண்டகால பண வளர்ச்சி ஏற்படும். பிற்காலத்தில் ஏற்படும் பணநெருக்கடியைத் தவிர்க்கலாம். பலவிதமான நம்பிக்கையான வழிகளில் சட்டரீதியாக பணத்தை சேமிக்கலாம்.

கனடாவில் கடந்த 20 வருடங்களிற்கு மேலாக ஆதனம் (Real Estate) விற்றல், வாங்கல், முதலீடு செய்பவர்களிற்கு ஆலோசனை வழங்கும் தொழிலில் இருப்பதால் ஆதனத்தில் முதலிடுவது சேமிப்பதற்கு சிறந்த வழிகளில் ஒன்று என்பதனை அனுபவ ரீதியாகக் கூறமுடியும். குறுகிய காலத்தில் ஆதனத்தின் விலையில் இறக்கம் ஏற்படலாம். ஆனால் ஆதனத்தில் முதலிடுவது ஒரு நீண்டகால முதலீடு என்பதனை மறக்கக் கூடாது. பிந்திய காலத்தை மனதில் கொண்டு அதற்கேற்ப திட்டமிடுவதே சிறந்தது.

நம்மில் எத்தனைபேர் தாம் இருக்கும் வீட்டை தவிர்த்து எதிர்காலத்தை மனதில் கொண்டு ஆதனத்தில் முதலீடு செய்துள்ளார்கள்? நீங்களே சிந்தியுங்கள். உதாரணமாக கூறினால் என்னுடைய நண்பர்களில் 20 பேரை எடுத்துக் கொண்டால் அவர்களில் அனேகமானவர்கள் நிலையான, சராசரி வருமானத்தை விட அதிகமாக உழைப்பவர்களே. 2010ஆம் ஆண்டில் கனடாவின் சராசரி குடும்ப வருமானம் $65, 500. ஆனால் இவர்களில் 5 குடும்பத்திற்கு (25%) குறைந்தவர்களே இரண்டாவது, மூன்றாவது.... ஆதனமுதலீடு செய்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதற்கு காரணம் என்ன? இதே நிலைமைதான் நம்மக்களில் பலரிற்கு? பிள்ளைகளின் படிப்பு, மற்றைய செலவுகள்? இவ்வாறான பல தேவைகள் இருக்கலாம். இத்தேவைகள் எப்பொழுதும் இருக்கும். ஆனால் உங்களின் பிற்காலத்தை மனதில் வைத்து நீங்கள் சேமிக்காவிட்டால், அரசின் உதவி நிச்சயம் பற்றாக்குறையாகவே இருக்கும். உங்கள் கையில் தான் உங்கள் எதிர்காலம் தங்கியுள்ளது.

பிந்திய காலத்தில் தனிமை, உடம்பின் வலிமை குன்றல், நோய்களின் தாக்கம் என்பன பற்றிய தொலைநோக்குப் பார்வை எமக்குத் தேவை. உணவுமுறை, தேகப்பியாசம், யோகா, தியானம் போன்றவை எமக்கு உதவலாம். இவற்றை விட குறிப்பிட்ட கால சுற்றுலாப் பிரயாணங்கள், நல்ல நண்பர் குழாமைச் சேர்த்து வைத்தல் போன்றவையும் ஆறுதலளிக்கும். இவற்றிற்கு தகுந்த ஆலோசனை அதற்குரியவர்களிடம் பெறுதல் சிறந்தது. திட்டமிட்டு செயல்படுவதே நன்மையபக்கும். நடப்பது நன்றாகவே நடக்கட்டும். அது அவன் செயல்!

# சாரதி பயிற்றுனர்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசுகளின் அனுமதி பத்திரம் பெற்று தொழில் ஆரம்பித்தல் வேண்டும். பொதுவாகவே இந்த துறைகளில் தொழில் செய்வோரை மாகாண போக்குவரத்து அமைச்சு, நகர-சபை சட்ட ஒழுங்குகளை கண்காணிப்பவர்கள் (By law enforcement officers) போன்றோர் துரத்தி துரத்தி கண்காணிப்பதுண்டு. இவர்களின் கண்காணிப்பில் சிக்குப்படாத சாரதி பயிற்றுனர்கள் இருக்கவேமாட்டார்கள் என்ற அளவில் சொல்லலாம். மேலதிகமாக கண்காணிப்பவர்களுக்கு காட்டிக் கொடுப்பவர்களாக ஆங்கில ஊடகம் பின்வரும் புலனாய்வு தகவல்களை தற்போது வெளியே கொண்டுவந்துள்ளது. அவையாவன பின்வருமாறு

1. புதிதாக வாகனம் செலுத்த கற்றுக் கொள்பவர் அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுனர் பாடசாலையில் பதிவு செய்து, அங்கு நடத்தப்படும் பயிற்சி நெறிகளை தொடர்ந்து கொண்டு (Following Driving School Class room Course) வாகனத்திலும் பயிற்சி பெற வேண்டும். ஆனால் இங்கு வகுப்பறை பாடத்திட்டங்கள் பயிற்சி வகுப்புகள், பரீட்சைகள் எவற்றிற்கும் தோற்றாது, அதற்குரிய நற்சான்றிதழை முறையாக பின்பற்றியது போல பதிவு செய்து பெற்றுக் கொண்டு அதனூடாக அனுகூலங்களை பெற்று அனுபவிப்பது என்பது மிகப்பெரிய மோசடி.

2. விளம்பரப்படுத்துவதும், வாகனத்தின் மேலே வைத்து பகிரங்கப்படுத்துவதும் றைவிங் ஸ்கூல் பெயர் பலகை (Driving school roof sign name) ஒன்று ஆனால் சட்டரீதியான பதிவில் உள்ளது இன்னொன்று.

3. பல இடங்களில் சாரதி பயிற்றுனர் அனுமதிபத்திரம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கும். ஆனால் அவர்களும் றைவிங் ஸ்கூல் வாகனத்தில் தொழில் செய்வார்கள்.

4. சாரதி பயிற்றுனர் பயிற்சி நெறிபக்கம் திரும்பியே பார்க்காதவர்கள், அந்த அனுமதிபத்திரத்தினை பெறாதவர்கள் பயிற்சி வழங்குவது. இரட்டை பிரேக் (Double brake) பொருத்தாத வாகனத்தில் தொழில் செய்து ஆபத்துகளை ஏனையோருக்கும் உருவாக்குவது.



இப்படி பல்வேறு வகையான குற்றசாட்டுகளை தங்களின் உளவுத்துறை நடவடிக்கையில் கண்டு பிடித்து இப்புலனாய்வு பத்திரிகையாளர்கள் வெளிகொணர்ந்த வண்ணமுள்ளேயுள்ளனர்.

ரொறொன்ரோவிலும் அதனை அண்டிய நகரப்பகுதிகளிலும் பல்லினசமூகத்திலிருந்து வந்த மக்கள் வாழ்கின்றனர். முன்னணியில் நிற்கும் இத்தொழில் துறைசார்ந்தோரை ஆங்கில ஊடகவியலாளர்கள் கண்காணித்துக்கொண்டே இருக்கின்றனர்.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

TBC Toronto Business College



DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
Duration: 35 Weeks (co-op available)

Business Administration
Duration: 26 Weeks

Computerized Accounting
Duration: 26 Weeks

Medical Office Admin.(MOA)
Duration: 32 Weeks

Personal Support Worker(PSW)
Duration: 26 Weeks (NACC Diploma)

FREE TRAINING

யார் தகுதி உடையவர்கள்?

- ★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- ★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- ★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்
(திருப்பிச் செலுத்தத் தேவையில்லை)
Second Career மறுக்கப்பட்டவர்கள்
New Immigrants are also Welcome

Certificate Courses

MS Office 2010, Quick Books 2011
Simply Accounting 2011, Accpac 5.6
Canadian Securities Course
Online Stock Trading
Bank Teller, First Aid & CPR
Food Handler Certification

OACC PROUD MEMBER

416-291-5155

4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# காலத்தோடு வளரும் கணினிகள் -18

அன்பான வாசகர்களே!

கணினியில் உள்ள கோப்புக்களை (பைல்ஸ் Files) ஒழுங்கு முறையில் சேர்த்து வைப்பதற்காகவே போல்டர்களை (Folder) உருவாக்குகின்றோம். தாள் வடிவத்தில் உள்ள பத்திரங்களை வெவ்வேறு போல்டருக்குள் சேர்த்து வைப்பதைப் போலவே கணினியில் போல்டருக்குள் கோப்புக்களைச் சேமித்து வைக்கின்றோம். கோப்புக்களைக் கணினியின் நிலைவட்டில் உள்ள மை டொக்கியுமென்ற்ஸ் My Documents உள்ளே தேவையான விதத்தில் போல்டர்களை உருவாக்கி கோப்புக்களைச் சேமிக்கலாம். படங்களை மை டொக்கியுமென்ஸ் போல்டரின் உள்ளே உள்ள மை பிக்சேர்ஸ் (My Pictures) போல்டருக்குள்ளும், ஒலி வடிவக் கோப்புக்களை மை மியூசிக் (My Music) போல்டருக்குள்ளும், ஒளி வடிவக் கோப்புக்களை மை வீடியோ (My Video) போல்டருக்குள்ளும் சேமிக்கலாம். டெஸ்க்ரொப்பிலும் போல்டர்களை உருவாக்கி கோப்புக்களைச் சேமிக்கலாம். அதிகமான பைல்களை டெஸ்க்ரொப்பில் வைத்திருப்பது



கூடாது. இரண்டாந்தரச் சேமிப்பகங்களிலும் கோப்புக்களைச் சேமிக்கலாம். டெஸ்க்ரொப் பில் அல்லது மைடொக்கியூமென் ரில் ஒரு போல்டரை உருவாக்குவதற்கு ரைற் கிளிக் (Right Click) செய்து நியூ (New) வினைச் செலக்ட் பண்ணி போல்டரைச் செலக்ட் செய்தால் நியூ போல்டர் என்ற பெயரில் ஒரு போல்டர் உருவாக்கப்படும். போல்டரைச் செலக்ட் பண்ணி ரைற் கிளிக் செய்து ரீநேம் (Rename) இனை செலக்ட் செய்து விரும்பிய பெயரை போல்டருக்கு வழங்கலாம். போல்டர் ஒன்றை உருவாக்கிய தும் நியூ போல்டர் என்ற பெயரில் பொயின்ரரை (Pointer) வைத்துக் கொண்டு குறியழுத்தியை (மவுஸ்) கிளிக் செய்து விட்டு புதிய பெயரைக் கொடுக்கவும் முடியும்.

டெஸ்க்ரொப்பில் உள்ள ஸ்ரார்ட் பட்டனை கிளிக் செய்து All Programs இனைத் தெரிவு செய்தால் கணினியில் உள்ள மென்பொருட்களின் பட்டியல் தோன்றும். விரும்பிய ஒரு மென்பொருளைத் தெரிவு செய்து பயன்படுத்தத் தொடங்கலாம். இந்தப் பட்டியலில் அச்சசிரிஸ் (Accessories துணைப்பொருள்கள்) என்பதும் இருக்கும். இதனை செலக்ட் செய்ததும் தோன்றும் புதிய பட்டியலில் வின்டோஸ் எக்ஸ்புளோரர் (Windows Explorer) இருக்கும். இப்பொழுது டெஸ்க்ரொப்பில் கணினியில் உள்ள எல்லா சேமிப்பகங்களும், போல்டர்கள், கோப்புக்கள் என்பன தோன்றும். கணினியில் உள்ள எல்லாக் கோப்புக்களின் பட்டியலை இந்த வழிமுறையில் பார்த்துக் கொள்ளலாம்.

இது போன்று மேலும் சில வசதிகள் அச்சசிரிஸ் (Accessories துணைப் பொருள்கள்) ஊடாகச் செய்ய முடியும். இவை இயக்க அமைப்பு மென்பொருள் (Operating System Software) இல் உள்ளடக்கப்பட்டுள்ள சில பயன்பாடுகள் ஆகும். அச்சசிரிஸ் (Accessories துணைப்பொருள்கள்) என்பதில் கல்குலேட்டர் (Calculator) இனைச் செலக்ட் செய்தால் கல்குலேட்டர் டெஸ்க்ரொப்பில் தோன்றும். தேவையான நேரங்களில் கல்குலேட்டரை இவ்வாறு வரச்செய்து பயன்படுத்திக் கொள்ளலாம். அச்சசிரிஸ் (Accessories துணைப்பொருள்கள்) பட்டியலில் நோட் பாட் (Notepad) இனை செலக்ட் பண்ணி நோட் பாட் என்ற மென் பொருளைப் பயன்படுத்தலாம். இதன் மூலம் நமக்குத் தேவையான குறிப்புக்களைத் தட்டச்சு செய்து வைத்துக் கொள்ளலாம். இந்தப் பட்டியலில் உள்ள வேட்பாட் (Wordpad) என்பதைத் தெரிவுசெய்வதன் மூலம் சொற்பரிமாற்றம் (Word Processing) இனை மட்டுப்படுத்தப்பட்ட ஒரு சிறிய




- அகணி -
authorakani@yahoo.com


தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# உடல்பராமரிப்பு விதிமுறைகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

உடலைக் கவனியுங்கள், உடல் என்பது சுவர். இதை வைத்துதான் சித்திரம் எழுத வேண்டும். அதாவது வாழ்வை நடத்த வேண்டும். பிறப்பிலிருந்து இறக்கும் வரை எம்மோடு இருப்பது இந்த உடல்தான் இந்த உடலானது கறுப்பாகவோ, சிவப்பாகவோ, அழகாகவோ அல்லது அழகற்றதாகவோ, இளமையாகவோ அல்லது முதுமையாகவோ அமைந்திருக்கலாம். ஆனால் அந்த உடலுக்கு உரியவர் காலம் முழுதும் மகிழ்ச்சியாக வாழ்ந்து தான் ஆகவேண்டும். அதனால் எந்த உருவத்தில், எந்த நிலையில் நாம் இருந்தாலும் முதலில் வாழ வேண்டும் என்று நினையுங்கள்.

முதலில் முகத்தை நன்கு கழுவித் துடைத்துக் கொள்ளுங்கள் அழுக்கு, எண்ணெய் படிய விடாதீர்கள். சிலர் முகத்தில் எண்ணெய் வழியும். இன்னும் சிலர் முகத்தில் வியர்வை வழியும். பலர் முகத்தில் அசடு வழியும். எது வழிந்தாலும் அதனைச் சுத்தமாக வைத்திருங்கள். இது ஒரு கவர்ச்சித் தோற்றம் ஆகும். அடுத்து எவ்வளவு அழகான முகம், உடல் இருந்தாலும் அழுக்கும், கெட்டவாடையும் இருந்தாலும் கவர்ச்சியாக இருக்க முடியுமா? சிறு பிள்ளைகளைப் பார்த்தால் முகத்தில் ஜொள்ளு வழியும், கண்ணில் பீளை, மூக்கில் காய்ந்த சளி, காதில் அழுக்கு. இவற்றைச் சுத்தப்படுத்துவது பெற்றோரின் தலையாய பொறுப்பாகும்.

உடலைத் தூய்மையாக வைத்திருந்தால் அதுதான் சுத்தம். அது சுகம் தரும் வாழ்வும் தரும். இவ்வாறு இருப்பது எதிர்ப்பாலினரைக் கவர்ந்திட மட்டும் இல்லை தினமும் எத்தனையோ மனிதர்களைப் பார்க்கிறோம். எதையோ பேசுகின்றோம். அது எந்த நோக்கமாக இருந்தாலும் அதில் வெற்றியடைய வேண்டுமானால் கவர்ச்சியான பளிச்சென்ற தோற்றம் முக்கியம். ஒருவரிடத்தில் உதவி பெறுவதற்கு இது மிக மிக முக்கியம். மிகவும் அலங்கரித்தும் வாசனைத் திரவியங்களை அடித்த படியும் போகவேண்டும் என்பதில்லை. கெந்தி நடப்பது, சாய்ந்து நடப்பது, ஆடி நடப்பது போன்ற செயற்கை பாவனைகளை (Artifical style) தவிர்க்கவும். இயற்கையாக நேராக நடக்க வேண்டும்.

உயிரின் மீது ஆசை இருந்தால் அந்த உடல் நிலைத்திருக்கும். உடலை பாதுகாக்க வேண்டும். உடல் அழியும் போது உயிர் தானாகவோ பிரிந்துவிடும். உலகிலுள்ள அனைத்து இன்பங்களையும் அனுபவிக்க உயிர் விரும்புகிறது. அதனை உடலின் மூலமாகவே செய்து முடிக்கிறது.



### இராஜ உறுப்புகளின் பாதுகாப்பு

**உடலின் முக்கிய உறுப்புகள**

1. மூளை - Brian
2. இருதயம் - Heart
3. நுரையீரல் - Lungs
4. கல்லீரல் - Liver
5. சிறுநீரகம் - Kidney

முதுமையடைந்தால் மனிதன் இறப்பதுதான் நியதி. இந்தக் கருத்து தவறு. இளமையிலோ அல்லது முதுமையிலோ மேற்கூறப்பட்ட 5 இராஜ உறுப்புகளில் ஏதேனும் ஒன்று பாதிக்கப்பட்டு செயலிழந்தால் மரணம் சம்பவிக்கும். அதனைத் தவிர்க்க முடியாது. எனவே இந்த ஐந்து உறுப்புகளையும் பாதுகாப்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். அவை திறம்பட இயங்கிக் கொண்டிருந்தால் வாழும் காலம் நீண்டு கொண்டு போகும். இதற்கு உடல், மனம், ஆன்மா (Body, Mind, Sprit) மூன்றும் ஒருமுகமாக இயங்கும் பயிற்சிகளை மேற்கொள்வது அவசியம்.

### உடல்பயிற்சியும் - யோகப்பயிற்சியும்

தினமும் அரைமணிநேரமாவது நடைப்பயிற்சி செய்பவர்களுக்கு கொடிய நோய்கள் அணுகாது. உடல் எடை கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். அதனோடு எந்த வயதிலும் இலேசான உடற்பயிற்சிகளை செய்யலாம். உடலுக்கும் மனத்திற்கும் சமகாலத்தில் நன்மைதரும் பயிற்சி முறைகளில் யோகாசனங்கள் (Yoga) முதலிடம் பெறுகிறது. இதிலுள்ள ஆசனங்களை இளையவர், முதியவர், ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைவரும் பழகி பலன் பெறமுடியும். ஒவ்வொருவரின் உடலமைப்புகளுக்கேற்றபடி பொருந்தமான யோகா பயிற்சிமுறைகளை தேர்ந்தெடுத்து ஒரு ஆசிரியரின் உதவியுடன் ஆரம்பத்தில் பழக முடியும். இவற்றுள் நோய் நீக்கும் மருத்துமுறையிலான ஆசனங்கள் அனைவருக்கும் நன்மை தரக்கூடியவை. அதற்கு மேல் உடலிலுள்ள ஆதாரச்சக்கரங்கள் என்று அழைக்கப்படும் நாளமில்லா சுரப்பிகளை இயங்கவைக்கும் வல்லமை இவற்றிற்கு இருப்பதால் நோயில்லாப் பெருவாழ்வு அடைவது நிச்சயம்.

### மலச்சிக்கல் - செரியாமை

'மலச்சிக்கலையும் செரியாமையையும் உதாசீனப்படுத்துபவன். ரோக்கியத்தின் அடிச்சுவட்டையே அறியாதவன்' என்கிறார் மகாத்மா காந்தி. ஒருவருக்கு மலச்சிக்கல் தொடர்ந்து இருக்குமானால் பல்வேறு நோய்களும் தானா வந்து ஒட்டிக்கொள்ளும். வந்த நோய்கள் மருந்து மாத்திரைகள் மூலம் தீராது. உடல் பருமல் அதிகரிக்கும். இதற்கு பச்சை காய்கறிகள், பழங்கள், நார்ச்சத்து (Fiber) நிறைந்த உணவுகள் நன்மை தரும். அத்துடன் இலகுவில் செரியமானமாகக்கூடிய உணவுகளைத் தேர்ந்தெடுத்து உண்பது அவசியமாகின்றது.

இறுதியாக நாம் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்கள், உடல் உறுப்புகள் குறிப்பாக பாதங்கள் நகங்கள் வாய் பற்கள் கண்கள், காதுகள், மூக்கு போன்றவற்றை எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதால் கிருமிகள் தொற்றுவதைத் தவிர்க்க முடியும். மேலும் நாள்தோறும் சிறிது நேரமாவது தியானப்பயிற்சி செய்வதன் மூலம் மனம் ஒருமுகப்படுத்தப்படுவதால் மன அழுத்தம் குறைந்து முகப்பொலிவு அதிகமாகின்றது.

இவ்வாறு உடலையும் மனத்தையும் செம்மைப்படுத்துவதால் வாழ்நாள் அதிகரித்து என்றும் இளமையுடன் வாழலாம்.




Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

@ GTA Square

**TUTORING**
Saturday & Sunday 9:00 To 11:00
• Math - Grade 9 ,10 and 11 ($10 Per Hour )
• Advanced Functions - Grade 12 ($15 Per Hour )
• Vectors and Calculus- Grade 12 ($15 Per Hour )
**Kamal: 416.696.5007 / 647.268.5007**
15 years experience in teaching math for high school students
(Priority will be given for home work)

**YOGA - MEDITATION CLASSESS**
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


முட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்
**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# ஓடும் நீர் உறைவதில்லை 163

## கோழைகள் யார்?

கோழைகள் எனப்படுபவர்கள் பயந்த மனோபாவம் கொண்டவர்கள் என்று நாம் கருதிக்கொள்கிறோம். ஆனால் நாம் எல்லோருமே ஏதோ ஒரு அளவில் பயந்த சுபாவத்தைக் கொண்டிருக்கிறோம். பயந்த சுபாவத்துக்கு அடிப்படையாக அமைவது நாம் சேகரித்து வைத்திருக்கும் தகவல்களும் அனுபவங்களும் தான். பாம்பு என்றால் அதிகமானோர் பயப்படுகிறோம். பாம்பு பற்றி எம்மிடம் உள்ள தகவல்கள் அந்தப் பயத்தை உருவாக்குவதால் பயப்படுகிறோம். ஒரு குழந்தையிடம் பாம்புக்குப் பயப்படும் சுபாவம் இருப்பதில்லை. காரணம் அதனிடம் தகவல்கள் எதுவும் இல்லை. அதனால் நகர்ந்து செல்லும் பாம்பைக் கூட தவழ்ந்து சென்று பிடிக்க முயற்சிக்கும். ஆனால், காலப் போக்கில் பாம்பு பற்றிய தரவுகள் சேகரிக்கப் பட்டதும் அது அச்சத்துக்கு வழிவகுத்து விடுகிறது. இந்த அச்சம் அல்லது பயம் அவசியமானதும் கூட. அதாவது, எமது நலத்திற்கு தீங்கு விளைவிப்பதாகவோ அல்லது உயிராபத்துக்கு வழிவகுப்பதாகவோ இருக்கும் ஒன்றில் அச்சப்படுவது அல்லது பயப்படுவது தற்பாதுகாப்பே அன்றி கோழைத்தனம் அல்ல. தன்னால் இயலாத ஒரு காரியத்தை தன்னைவிடப் பலவீனமானவர்களிடம் தனது அதிகாரத்தைச் செலுத்தி தமது பயத்தை மறைத்துக் கொள்பவர்கள் கோழைகள் என்றும் கூறப்படுகின்றது. இவர்கள் உண்மையில் கோழைகள் அல்ல. கையாலாகாதவர்கள் இவர்களின் அதிகாரத்துக்கு உட்படுபவர்களும் இவர்களைப் போன்றவர்களே. தன்னால் செய்யக்கூடிய ஒரு காரியத்தை பிறரைக்கொண்டு செய்பவர்கள் கையாலாகாதவர்கள். இவர்களது அதிகாரத்துக்கு உட்படுபவர்கள் அடிமைகள். அடிமைகளும் கையாலாகாதவர்களே.

கோழைகள் யார் என்பதற்கு துணிவு அற்றவர்கள் என்ற விளக்கமும் கொடுக்கப்படுகின்றது. ஆனால் பல சந்தர்ப்பங்களில் நாம் எமது துணிவைப் பயன்படுத்த முடிவதில்லை. இது பயத்தினால் அல்ல. துணிவுக்கு ஒரு எல்லையை சட்ட விதிகளும் சமுதாய ஒழுக்க விதிகளும் உருவாக்கி இருப்பது தான். உதாரணமாக, குடும்பம் ஒன்றில் கணவர் தனது மனைவியை அடித்துத் துன்புறுத்தும் போது அதைத் தடுத்து அந்தப் பெண்ணைப் பாதிப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ளக் கூடிய உடற்பலமும் மனத் துணிவும் இருந்தாலும் கூட, சட்ட விதிகள், சமுதாய ஒழுக்க விதிகள் அதற்குத் தடையாக அமைந்து விடுகின்றன. அப்படியானால் கோழைகள் யார்? தமது சொந்த வாழ்க்கையை, வாழ்க்கை வகுக்கும் வழியில் நகர்த்திச் செல்ல அஞ்சுபவர்கள் தான் கோழைகள். இதுவரை நாம் அறிந்த, தெரிந்த, அனுபவப்பட்ட அனைத்தையும் புறந்தள்ளிவிட்டு, அறியாத, தெரியாத, புரியாத ஒன்றுக்குள் செல்ல அஞ்சுபவர்கள் தான் கோழைகள். அதாவது வாழ்க்கையை வாழ அஞ்சுபவர்கள் கோழைகள். ஏனெனில், வாழ்க்கையானது ஒரு பொழுதும் நாம் அறிந்த தெரிந்த அனுபவப்பட்ட விடயங்களையோ அல்லது ஒரு கையேட்டையோ அடிப்படையாக வைத்து நகர்த்தப்படும் ஒன்றல்ல. கணத்துக்குக் கணம் இதுவரை நாம் அறியாத, தெரியாத, புரியாத, உணராத ஒன்றுக்குள் எம்மை நகர்த்திச் செல்வதுதான் வாழ்க்கை. எனவே வாழ்க்கை எதைத் தந்தாலும் அதை முழுமையாக எதிர்கொண்டு வாழ்க்கையின் வழிப்படி வாழ்வேன் என அறுதியிட்டு வாழ்பவர்களைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் கோழைகளே.

## நம்பிக்கையின் இரு பலவீனங்கள்

நம்பிக்கை (BELIEVE) என்பது வாழ்க்கையின் பலம் என்பது தான் நாம் கற்றதும் கற்றுக்கொண்டிருப்பதும். நம்பிக்கை இருந்தால் அனைத்தையும் சாதிக்கலாம், அனைத்திலும் வெற்றி அடையலாம் என்பது தினம் தினம் பல வழிகளில் பலரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் தகவலாக அமைகின்றது. குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என வாழ்வில் எந்த நிலையில் இருந்தாலும் இந்த நம்பிக்கைதான் வாழ்க்கை என்று போதிக்கப்படுகிறார்கள். இங்கே நான் போதனை என்று கூறுவதற்கான காரணம் இந்த நம்பிக்கை என்பது வார்த்தைப் பரிமாற்றமாக அமைவது தான். ஏனெனில் நம்பிக்கையின் அடித்தளம் தெளிவுபடுத்தப்படாமல் கொடுக்கப்படுவதாகவும் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும் இருப்பதுதான் காரணமாக அமைகின்றது. இந்த நம்பிக்கை என்ற சொல்லைப் பயன்படுத்துபவர்கள் அனைவரும் மற்றவர்களுக்குப் புத்தி சொல்பவர்களாக இருப்பார்கள். தங்களை அறிவு ஜீவிகளாகக் காட்டிக்கொள்வதற்கு இவர்கள் பயன்படுத்தும் சொல்லாயுதம் தான் இந்த நம்பிக்கை எனும் சொல். உன்னை நம்பு, உலகை நம்பு, கடவுளை நம்பு என எல்லாவற்றையும் நம்பு என்ற போதனைகள் எமது மண்டைக்குள் மிக இலகுவாகப் புகுந்து விடுகின்றன. அத்துடன் மிக இறுக்கமாகவும் பதிவாகிவிடுகின்றன.

நம்பிக்கை என்றால் என்ன? அதற்கான வரைவிலக்கணம் என்ன? என்று சொல்பவரிடம் கேட்டால் அதற்கான விளக்கம் கிடைப்பதில்லை. காரணம், நம்பிக்கை என்பது அதன் தன்மையில் நாம் ஊகித்துக்கொள்ளும் பொருளுக்கு முற்றிலும் மாறான தன்மையைக் கொண்டிருப்பது தான். அதாவது நம்பிக்கை சந்தேகத்தை அடித்தளமாகக் கொண்டுள்ளது என்பது தான். நம்பிக்கையின் அடித்தளம் 'சந்தேகம்'. இதுவே நம்பிக்கையின் ஒரு பலவீனம். ஆச்சரியமாக இருக்கிறதா? ஆச்சரியம் வேண்டாம். இதோ அதற்கான விளக்கம். சந்தேகத்தின் அடித்தளம் தெளிவின்மை என்பது நாம் எல்லோரும் அறிந்துள்ள விடயம். ஒன்றின் மீது எமக்கு தெளிவு இல்லாத போது நாம் சந்தேகிக்கின்றோம். உதாரணத்தைப் பார்ப்போம். ஒரு மாலை நேரம். நாம் நடந்து செல்லும் பாதையில் இருக்கும் பொருளின் மீதான ஒளித்தெறிப்பு மிகவும் குறைவான நேரம். பாதையில் ஏறத்தாள ஒன்றரை அடி நீளமான ஒரு பொருள் வளைந்து கிடப்பது தெரிகிறது. ஆனால் அது என்ன என்பது தெளிவாக இல்லை. இந்த நிலையில் உடனடியாக நமக்குத் தோன்றுவது, அது ஒரு கயிறாக இருக்கலாம் அல்லது காய்ந்த மரத்தடியாக இருக்கலாம் அல்லது பாம்பாக இருக்கலாம் அல்லது ஏதோ ஒன்றாக இருக்கலாம் என்பதுதான். இங்கே 'இருக்கலாம்' என்பது சந்தேகத்தின் வெளிப்பாடு. இதே சம்பவத்தை நம்பிக்கையின் பார்வையில் செலுத்துவோமாயின் இதே இயல்பைக் காணலாம். அதாவது, "நான் கயிறு என்று நம்புகிறேன்" அல்லது "காய்ந்த மரத்தடி என்று நம்புகிறேன்" அல்லது "பாம்பு என்று நம்புகிறேன்" எனக் கூறுகிறோம். 'நம்புகிறேன்' என்பதும் "இருக்கலாம்" என்ற அதே சந்தேகத்தை அடிப்படையாகக் கொண்டதே. அந்தப் பொருள் என்ன என்பது தெளிவாக அறியப்பட்டதும் சந்தேகமோ அல்லது நம்பிக்கையோ அவசிய மற்றதாகிவிடுகிறது. இப்போது நம்பிக்கை அல்லது நம்புதல் என்பது சந்தேகத்தை அடித்தளமாகக் கொண்டுள்ளது என்பது நிரூபணமாகிவிட்டதல்லவா! உண்மையில் "நம்பிக்கை" என்ற போலிக்குள் நாம் அகப்பட்டு அல்லற்படாமல் வாழ்வதற்கு 'அறிதல்', 'புரிதல்', 'உணர்தல்' என்பவற்றை அடித்தளமாகக் கொள்ளல் வேண்டும்.




நம்பிக்கையின் இரண்டாவது பலவீனம் சந்தேகத்தை விட அதிதீவிரமானது. சந்தேகம் தெளிவை நோக்கிய ஒரு தேடலுக்கு வாய்ப்பளிக்கலாம். ஆனால் நம்பிக்கையின் இந்தப் பலவீனம் எமது பகுத்தறிவுத் திறனுக்கு முழுக்குப் போட்டுவிடும். அதாவது நம்பிக்கை ஒரு பொழுதும் பகுத்தறிவுடன் இணைவதில்லை. ஏனெனில், நாம் ஒன்றை முற்றுமுழுதாக நம்பிவிட்டதன் பிற்பாடு அந்த நம்பிக்கைக்கு அடிமையாகி நாம் நம்பியுள்ளதற்கு அப்பால் எமது அறிவைப் பயன்படுத்த அனுமதிப்பதில்லை. அதாவது தேடுதலுக்கு இடமளிப்பதில்லை. அத்தோடு எப்பொழுதும் இறந்தகாலத்தில் மட்டும் வாழப்பழகிவிடுவதால் நிகழ்காலம் வீணாகிவிடுகின்றது. நம்பிக்கையின் அடிமைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படக்கூடாது என்பதில் நம்பிக்கைவாதிகள் மிகவும் விழிப்பாக இருக்கிறார்கள். நம்பிக்கை அடிமைகளை இறந்தகாலத்திலேயே வைத்திருப்பதில் இவர்கள் மிகச் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களாக உள்ளார்கள். நம்பிக்கைக்கு நாம் அடிமைகளாக இருக்கும் வரை நம்பிக்கைவாதிகள் நம்மீது சவாரி செய்துகொண்டே இருப்பார்கள். தவறு அவர்களுடையதல்ல. நம்பிக்கைக்கு அவசியம் இல்லாத வாழ்க்கை தான் எமக்குக் கிடைத்திருக்கும் இந்த அற்புதமான வாழ்க்கையும் வாய்ப்பும். இந்த வாழ்க்கையினதும், வாய்ப்பினதும் உச்சப் பயன் என்பது அறிதல், புரிதல், உணர்தல் மூலம் வாழ்வதால் மட்டுமே சாத்தியமாகும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

**KG Master:** -www.kgmaster.com
- www.facebook.com / - kgmaster.yourlifecoach


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

மஹாராஜியின் உரைகள்



| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 11:00 am |
| (416) 431-5000 | Rogers Cable Channel - 20 |
| 1 877 707 3221 | Bell Express vu Channel - 219 |

# அகத்திய வெண்பா

## கடவுள் வணக்கம்

அகத்துறையும் ஆனைமுக ஐயனே ஆன்ற
அகத்தியர்க்கு வெண்பாவால் ஆரம் - தொகுத்தன்பால்
சூட்ட முனைகின்றேன் தோன்றித் தொடர்ந்திருந்து
காட்டீர் கருணை கனிந்து.

(ஆரம் - மாலை.)

## அவையடக்கம்

ஆற்றல் தவத்தால் ஆளும் அகத்தியரை
ஏற்றிப் பெருமையறிந்(து) எல்லவரும் - போற்றும்
விதத்தினிலே வெண்பாவில் வீற்றிருக்க வைத்தேன்
மதித்தறிஞர் ஏற்க மகிழ்ந்து.

## நூல்

அக்கினியே வந்து அகத்தியராய்க் கும்பத்தில்
புக்கதென்று சொல்லும் புராணமுண்டு - எக்கணமும்
கண்டிகையும் வெண்ணீறும் தண்டும் கமண்டலமும்
கொண்ட குறுமுனிவ ராம். (1)

(கண்டிகை - உருத்திராக்கம்.)

மலையான் மகளின் மணநாளில் மக்கள்
உலகம் நிலைகுலைய ஒப்பில் - தலைவர்
அடியார் அகத்தியரைத் தெற்கே அனுப்பிப்
படியைச் சமன்செய்தார் பார். (2)

(மலையான் மகள் - பராசக்தி.
ஒப்பில் தலைவர் - சிவபெருமான். படி - புவி.)

சிவன்சக்தி கல்யாணச் சிறப்பை வடக்கில்
புவனத்தார் காணுகின்ற போதில் - தவமுனியும்
தக்கணத்தில் கண்டு களிபேர் உவகையுற
மிக்கவருள் செய்தார் விழைந்து. (3)

(தக்கணத்தில் - தெற்கில்.)

தெற்குவந்து சேர்ந்த சிவமுனிவர் தானமர்ந்து
தக்கதவஞ் செய்யத் தகுந்தவிடம் - பக்கமெலாம்
பார்த்துப் பொதிகைமலைப் பைந்தண் பசுமைநில
நேர்த்தியிலே வைத்தார்தம் நெஞ்சு. (4)

அந்தரம் அற்ற அமைதி நிலவுகின்ற
மந்திரப் பொதிகை மலைதன்னில் - சந்தனக்
காற்றும் கனிவகையும் காந்தப் பொழிலழகும்
போற்ற உளவாம் பொலிந்து. (5)

வாச மலர்த்தென்றல் மாசில் மதுவீசும்
பேசும் கிளிதானும் பேசாது - ஓசைக்
குயிற்குச் செவிமடுக்கும் கூடல் மயிலும்
நயக்கும் பொதிகை நகர். (6)

தென்கண்டம் வந்த முனிவர் சிவபெருமான்
முன்கண்ட மூத்த முதல்மொழியாம் - பொன்வண்டுச்
செந்தமிழைச் சீராட்டித் தென்பொதிகைத் தொட்டிலிலே
தந்தையைப்போல் தான்வளர்த்தார் ஆம். (7)

முனிவர் தவமேன்மை மூவாத தன்மை
புனிதம் இனிமை புதுமை - கனிய
அழகுத் தமிழும் அரனார் அருளால்
வளமாய் வளர்ந்தாள் மகிழ்ந்து. (8)

தொல்காப் பியர்முதலாய் தூமுனிவர் கற்பித்த
பல்மா ணவர்வளர்த்தார் பைந்தமிழை - சொல்வார்
அகத்தியம் ஆனபல நூல்செய்தார் என்றும்
இகத்தினில் இல்லையவை இன்று. (9)

பாரில் நடந்தும் இருந்தும் பரந்தகடல்
நீரில் கிடந்தும் நிகரில்லா - வீரத்
தவம்செய்து திங்கள் சடையார் அருளால்
புவியெங்கும் பெற்றார் புகழ். (10)



**கவிஞர் வி. கந்தவனம்**

# காலத்தோடு...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

மென்பொருளுக்குள் செல்லலாம். இந்தப் பட்டியலில் உள்ள பெயின்ற் (Paint) என்ற மென்பொருள் மூலம் சிறிய அளவிலான வரைபடங்கள், புகைப்படங்களில் (Photographs) மாற்றங்கள் போன்ற வேலைகளைச் செய்து கொள்ளலாம். இவற்றுக்கு மேலாகவும் சில பயன்பாடுகள் அச்சசிரிஸ் (Accessories துணைப் பொருள்கள்) பட்டியலில் உள்ளன. இவற்றைப் பற்றி பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் சிஸ்ரம் (System அமைப்பு) என்ற ஐகனைச் செலக்ட் செய்வதன் மூலம் கணினி பற்றிய சில விபரங்களைத் திரையகத்தில் காணலாம். முக்கியமாக கணினியின் நினைவகக் கொள்ளளவு (Memory Capacity), கணினி மையச்செயற்பாட்டகத்தின் வேகம் போன்ற விடயங்களைக் காணலாம். கொன்ட்ரோல் பனல் மெனுவில் உள்ள பயனர் கணக்குகள் (User Accounts) மெனு (menu பட்டி) தோன்றும். இது மிகவும் முக்கியமானது. ஒன்றிற்கு மேற்பட்ட பயனர்கள் கணினியைப் பாவிக்கும் பொழுது தமது தகவல்களைப் பிரத்தியேகமாக வைத்திருப்பதற்கு உதவும் ஒரு பொறிமுறை இதன் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில்




கவனிப்போம்.

டெஸ்க்ரொப்பில் ஸ்ரார்ட் பட்டனை கிளிக் செய்து All Programs இனைக் கிளிக் செய்யத் தோன்றுகின்ற கேம்ஸ் (Games விளையாட்டுக்கள்) ஊடாகச் சில விளையாட்டுக்களைக் கணினியில் செய்யலாம். டெஸ்க்ரொப் (Desktop) இல் ஸ்ரார்ட் பட்டனைச் செலக்ட் செய்ததும் தோன்றும் மெனு (menu கட்டுப்பாட்டு பலகம்) இல் வலது புற நிரலில் உள்ள கொன்ரோல் பனல் (Control Panel) என்பதைச் செலக்ட் பண்ணினால் கொன்ரோல் பனல் மெனு திரையகத்தில் தோன்றும். இதனுள்ளே பல ஐகன்கள் (Icons) இருக்கும். இவற்றில் சிலவற்றைப் பற்றி இப்பொழுது ஆராய்வோம். பொன்ற்ஸ் (Fonts எழுத்துருக்கள்) எனப் பெயரிடப்பட்டுள்ள போல்டர் போன்ற ஐகன் இனை டபிள் கிளிக் செய்தால் உங்கள் கணினிக்குள் நிறுவப்பட்டுள்ள (Installation) எல்லா எழுத்துருக்களையும் காணலாம். பாமினி (Bamini) போன்ற தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்துவதற்கு இவற்றைக் கணினியில் நிறுவி இந்தப் போல்டருக்குள் குறிக்கப்பட்டுள்ள எழுத்துருவைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கொன்ட்ரோல் மெனுவில் உள்ள உங்கள் பயனர் கணக்குகளை ஆரம்பித்தல், கடவுச்சொற்களை (பாஸ்வேட் Password) வழங்குதல் போன்ற விடயங்களைக் கையாள்வதற்குரிய வழிவகைகள் உள்ளன. கொன்ட்ரோல் பனல் மெனுவில் காணப்படும் திகதி, நேரம் போன்றவற்றிற்குரிய ஐகனைக் கிளிக் செய்து கணினியில் உள்ள கடிகாரத்தின் திகதி, நேரம் போன்றவற்றைப் பார்க்கவும், மாற்றம் செய்யவும் முடியும். sounds and Audio devices ஐகனைக் கிளிக் செய்து கணினியில் உள்ள ஒலியமைப்பில் பல்வேறு மாற்றங்களைச் செய்து கொள்ள முடியும். Printers and Faxes ஐகனைக் கிளிக் செய்தால் Printers and Faxes மெனு திரையகத்தில் தோன்றும். இதில் ஒரு பிறின்ரரை நிறுவவும், நீக்கவும், நிறுவப்பட்டுள்ள பிறின்ரர் பற்றிய விபரங்களைப் பார்வையிடவும் முடியும்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம்.

தொடரும்.

**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# INNSYS

CONNECT YOUR BUSINESS TO THE WORLD

## தமிழ் புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை

ABSOLUTELY NO CONTRACT!



**HIGH SPEED INTERNET**
18 Mbps Speed
LIFE TIME DEAL **$33.99**
FREE MODEM
Unlimited Download & Upload

* Offer Available Where Technology Permits. Yearly Payment Required And Installation Fee Required Where Applicable. Conditions Apply. Taxes Extra.

**High Speed Internet & Home Phone**
LIFE TIME DEAL **$39.99**
18 Mbps Speed
All Phone Features Included
FREE Internet Modem - Unlimited Download & Upload

* Offer Available Where Technology Permits. Yearly Payment Required, Phone Modem Purchase, Same Phone Number Transfer Fee And Installation Fee Required Where Applicable. Conditions Apply. Taxes Extra.



**High Speed Internet Upto 6 Mbps Speed**
FREE Internet Modem
DSL or Cable
LIFE TIME DEAL **$22.99**
Unlimited Download & Upload

* Offer Available Where Technology Permits. Yearly Payment Required. Installation Fee Required Where Applicable. Conditions Apply. Taxes Extra.




HURRY! OFFER ENDS ON APRIL 30




**416 8000 SYS (797)**
www.innsys.ca
4500 Sheppard Ave East, Suite 111
Toronto, ON. M1S 3R6 (McCowan & Sheppard )


# சார்பியல் - 16

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

சிறப்புச் சார்பின் அதிசயமான நேர மெதுமையாக்கம், நீளக் குறக்கம், திணிவின் அதிகரிப்பு என்பவற்றைப் பார்த்தோம். சிறப்புச் சார்பானது இன்னமும் பல விபரங்களைத் தெளிவாக்கியது. அதில் முக்கியமான வெளி பற்றிய கருத்தினை இனிப் பார்ப்போம். முப்பரிமாண வெளி கலிலியோ, நியூட்டன் காலத்தில் இருந்தே வெளியும் நேரமும் விஞ்ஞானிகளால் வேறுவேறாகப் பார்க்கப்பட்டன. நியூட்டன், இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்றோ அல்லது வேறு எதனுடனுமோ கலப்பில்லாத, தனித்துவமானவை எனக் குறிப்பிட்டும் இருந்தார். வெளியில் உள்ள புள்ளி ஒன்றின் நிலையினை, நீளம், அகலம், உயரம் போன்ற மூன்று கணியங்களினால் குறிப்பிடலாம். இதனை எவ்விதம் கூறுவதெனில், எமது அறையை எடுத்துக் கொண்டால் இவ்வறையில் இருக்கிற எந்தவொரு புள்ளியின் நிலையையும், ஒன்றுக்கொன்று செங்குத்தான இரண்டு சுவர்களில் இருந்துள்ள தூரங்களினாலும், தரையில் இருந்துள்ள உயரத்தாலும் கூறலாம். அறையில் உள்ள புள்ளியை மாத்திரமல்ல, பேரண்டத்தில் உள்ள எந்தப் புள்ளியையும், ஒன்றுக்கொன்று செங்குத்தான மூன்று வரையறைகளில் இருந்து உள்ள தூரங்களின் அடிப்படையில் குறிப்பிடலாம். இந்த ஒன்றுக்கொன்று செங்குத்தான வரையறைகளை பொதுவாக அச்சுக்கள் என்போம். இந்த அச்சுக்களை நாம் எமக்கு வேண்டியபடி எடுக்கலாம். நியதி என்னவெனில் அவை மூன்றும் தமக்குள் ஒன்றுக்கு ஒன்று செங்குத்தாக இருக்க வேண்டும். அதனால்தான் பொதுமையாக, நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று, நீளம், அகலம், உயரம் என்ற அச்சுக்களைக் குறிப்பிடுவார்கள். ஆக, ஒரு புள்ளியின் நிலைதனைத் தெரிவிப்பதற்கு மூன்று கணியங்கள் தேவைப்படுகிறது. இந்த மூன்று கணியங்களையும் பரிமாணங்கள் என்கிறார்கள். அதாவது மூன்று அச்சுகளில் இருந்துள்ள தூரங்களை பரிமாணம் என்பார்கள்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எங்களது பேரண்டவெளியின் ஒவ்வொரு புள்ளிகளும் ஏதோ ஒருவகையில் இந்த மூன்று பரிமாணங்களினால் கொடுக்கப்படக் கூடியன. இப்படியாக, மூன்று பரிமாணங்களினால் கொடுக்கப்படக் கூடிய புள்ளிகளைக் கொண்டதுதான் எங்களது பேரண்டம். பெருந்தொகையான புள்ளிகளினால் ஆனது தான் இந்தப் பேரண்டம் என்பதாகிறது. எனவேதான், நாங்கள் முப்பரிமாணவெளியில் வசிக்கிறோம் என்கிறார்கள். இதுதான் பொதுவாக நாமெல்லோரும் ஏற்றுக் கொண்ட நிலை. இதற்குக் காரணம், வெளியானது தனித்துவமானது என்ற நியூட்டனின் கருதுகோளே. நாமெல்லோரும் இந்தக் கருதுகோளுக்குப் பழக்கப்பட்டு விட்டோம். முப்பரிமாண வெளியினைப் பொறுத்த வரையில் புள்ளி என்பது பிரதானமானதாக அமைந்து விட்டது. இப்புள்ளியை அதனுடன் இணைந்துள்ள மூன்று எண்களின் உதவியினால் நாம் இனம் காணுகின்றோம். ஒன்றுடன் ஒன்று கலவாத பரிமாணங்கள் எனப்படுகிற இம்மூன்று எண்களும் நீளம், அகலம், உயரம் என்பவற்றைக் காட்டி நிற்பதும் நாமறிந்ததே. வெவ்வேறு புள்ளிகளுக்கிடையேயான தூரத்தினை அப்புள்ளிகளின் பரிமாணங்களில் இருந்து அளவிட்டுக் கொள்ளலாம். இவ்விரண்டு புள்ளிகளுக்கும் இடையேயான மிகக் குறுகிய பாதையினைத்தான் நேர்கோடு என்கிறார்கள். பரிமாணங்கள் பற்றிய விரிவான விளக்கத்தினைப் பகுதி 2இல் தெளிவாகப் பார்ப்போம். பேரண்டத்தின் புள்ளிகளுக்கு இடையேயான தொடர்புகளைத் தருகிற கேத்திரகணிதத்தை 'யுகிளிட் கேத்திரகணிதம்' என்கிறார்கள். கி.மு. 3ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த யுகிளிட் என்ற கிரேக்க கணித வித்தகர் இந்த அற்புதமான கேத்திர கணித அமைப்பினை உலகிற்குத் தந்திருந்தார். யுகிளிட்டின் கேத்திரகணித அமைப்பால் தெளிவுபடுத்தப் படக் கூடிய பேரண்ட வெளியினை, அதாவது முப்பரிமாண வெளியினை 'யுகிளிட் வெளி' எனவும் கூறுவார்கள். நியூட்டன் பேரண்டத்தினை யுகிளிட் வெளியாகத்தான் பார்த்தார். ஆனால் அயன்ஸ்ரைனின் சிறப்புச் சார்புத் தத்துவம், வெளி தனியானது அல்ல, தன்னுடன் நேரத்தையும் பின்னி வைத்துள்ளது என்கின்றது. அப்படியானால் பேரண்டம் பற்றி நாம் கொண்டிருக்கும் முப்பரிமாணவெளி என்னும் கருத்துத்



தவறானதா? என்ற கேள்வி எழுகின்றது. ஆம், அது தவறுதான் என்கிறது சிறப்புச் சார்புத் தத்துவம். முப்பரிமாணவெளி என்பது உண்மையில் ஓர் அண்ணளவாக்கம் மட்டுமே. எமது சாதாரண வாழ்க்கையானது அகிலஒருமையான ஒளியின் வேகத்துடன் ஒப்பிடுகையில் மிகச் சிறிய வேக நிலைகளிலேயே செல்கிறது. அதனால் வெளியும், நேரமும் தனித்தனியானவை போன்று எங்களுக்குத் தோற்றமளிக்க, இப்பேரண்டமானது புள்ளிகளால் அமைந்த முப்பரிமாண வெளியாக எமக்குத் தோன்றுகிறது, அவ்வளவுதான். இந்த முப்பரிமாண வெளியின் திருத்திய வடிவமாக வெளி-நேரம் என்ற நாற்பரிமாணப் பேரண்ட வெளியை சிறப்புச் சார்புத் தத்துவம் காட்டியது


**- கனி -**
416.261.1348
leptons@hotmail.ca




# மழைக்காலம்



மாலை நேரம் சோலை ஓரம்
ஆயிரம் ஆயிரம் மழைத்துளிகள்
வானில் இருந்து வீழும் அழகை
ஆயிரம்கண் இல்லாத ஆதங்கத்துடன்
மெய்மறந்து ரசித்த வேளை
சோவென்று மழை கொட்ட
புயல் காற்று வீச மரங்கள் ஆடிஅசைகிறது
சில்லென்ற காற்று மெய்வருட
மெய்சிலிர்க்கிறது

காற்றுக்கென்ன கோபமோ வெறிகொண்டு
புயலாக உக்கிரம் கொண்டு வீசுகிறது
மரங்கள் சட சட என முறிகிறது
பாலங்கள் சிதைந்து நீரில் மூழ்கிறது
மின்கம்பங்கள் நிலத்தில் சாய்கின்றன
சில்லென்ற காற்றை ரசித்தமனம்
புயல் காற்றைக்கண்டு
மனம் மிகநொந்து வெறுக்கின்றது

தென்றல் புயலானது அதிசயம் அல்ல
மனம் ஏனோ ஏற்க மறுக்கிறது
கனக்கும் மனதை இளகச்செய்ய
துன்பத்தையும் ஏற்கும் திறனை
விரைந்து வளர்த்திடுவோம்

- ரஞ்சி கதிர்


யாழ் இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா
இராப்போசன விருந்து - 2013

**காலம்:** ஏப்ரல் மாதம் 06
**நேரம்:** சனிக்கிழமை, மாலை 6.00
**இடம்:** Scarborough Convention Centre, 20 Torham Place, Scarborough, ON, M1X 0B3
(Finch Ave. E. & Finchdene Square) ***FINCH & NEILSON***

பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அவர் தம் குடும்பத்தினர் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

***416.930.9119 / 416.856.6900***

நடைபெற இருக்கும் நிகழ்வுகள்
விளையாட்டுப்போட்டி & ஒன்றுகூடல் - ஜூலை ***01 (Sunny Brook Park)***
சிறுவர் கல்விப் போட்டி - ***September 14 (Scarborough Civic Centre)***
கலையரசி - ***October 12 (Chinese Cultural Centre)***
www.JaffnaHinduCanada.com

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

கனடா மாதகல் நலன்புரி சங்கத்தின் வேனிற்கால ஒன்றுகூடலும் விளையாட்டுப்போட்டியும். - 2013

காலம்: ஆகஸ்ட் 17, 2013 சனிக்கிழமை
இடம்: நெல்சன் பூங்கா (**Neilson Park), (Neilson & Finch)**
நேரம்: காலை 10.00 - மாலை 8.00


அனைத்து மாதகல் உறவுகளையும் அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு: ***647.408.9539 / 647. 720.0247***

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- கைரேகை
- கல்வி, உத்தியோகம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- குடும்ப பிரச்சினைகள்
- குழந்தை பாக்கியம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- தொழில் வியாபாரம்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- சர்ப்ப தோஷம்
- கஸ்ட நஷ்டங்கள்

**Tel.:647.856.0559**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**

# துணிக்கைப் பௌதீகம் கடவுட் துணிக்கை

மார்ச் 14, 2013ல் பௌதீக உலகில் பெரும் பரபரப்பான முடிவு ஒன்று வெளியானது. விஞ்ஞானிகள் அல்லாத சாதாரண மக்களில் சிலரைக்கூடப் பரவசப்படுத்திய அதனை உலகின் பல ஊடகங்களும் வெளியிட்டிருந்தன. சேன் ஆய்வு மையத்தினர், 2012 யூலையில் தாம் புதியதாக ஒரு இம்மியைக் கண்டு பிடித்துள்ளதாகவும், அது கிக்ஸ் போசோன் எனப்படுகிற கடவுட் துணிக்கையாக இருக்க வேண்டும் எனக் கூறிப் பெரும் பரபரப்பை அப்போது ஏற்படுத்தியிருந்தார்கள். அந்தத் துணிக்கை கடவுட் துணிக்கைதான் என இப்போது அவர்கள் உறுதி செய்துள்ளார்கள்.

சேன் என்பது, ஐரோப்பிய அணுக்கரு ஆய்வு மையம் ஆகும். பிரான்ஸ் - சுவிஸ் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள அவ்வாய்வு மையத்தில், நிலம்மின் கீழாக 574 அடி ஆழத்தில் 17 மைல்களுக்கும் மேலான நீளமுள்ள வட்டக் குழாயில், உப அணுத்துகற் கற்றைகளை மிகவேகமாக, எதிரெதிராகச் செலுத்தி, ஒன்றுடன் ஒன்றை மோதவிட்டு ஆய்வுகள் செய்கிறார்கள். இதன் மூலமாக, உயர்ந்த சக்திநிலையில் இருக்கக் கூடிய குட்டித் துகள்களைக் கண்டு பிடித்து, எங்களது பேரண்டத் தோற்றத்தின்போது தோன்றி, பிரபஞ்சத்துள் உள்ளவற்றை எல்லாம் உண்டாக்கிய ஆரம்பத் துகள்கள் பற்றி அறிவது அவர்களது நோக்கங்களில் முக்கியமான தாகும். அப்படியான ஆய்வின் உச்சக்கட்டம்தான் இந்த கடவுட் துணிக்கை எனப்படுகின்ற கிக்ஸ் போசோன்கள் என்கிற இம்மிகள். பேரண்டத்துள் உள்ளவை எல்லாம், அணுக்களினால் கட்டியெழுப்பப் பட்டவை என்பது ஆரம்ப காலங்களில் இருந்த கருத்துகளில் ஒன்று. அந்த அணுக்களின் ஆய்வுகளின் வளர்ச்சி, பல உப அணுத்துகள்களையும், அவ் உபவணுத் துகள்கள் ஆனவற்றையும் வெளிப்படுத்தின. இன்னமும் ஈர்ப்புவிசை, காந்தவிசை, மின்விசை, அணுக்கருவிசை, மெலிந்தவிசை போன்ற இயற்கையின் விசைகளுக்கும் காரணிகளான வேறு சில துகள்களையும் இனம் காட்டின. இதனால், அணுக்கள்தான் இயற்கைக் கட்டுமானத்தின் காரணி என்ற கருத்து மாறி, புதுப்புது கருத்துகள், வந்து இன்று கிக்ஸ் போசோனில் வந்து நிற்கிறது.

கிட்டத்தட்ட 50 வருடங்களின் முன்னராகப் பீற்றர் கிக்ஸ் என்பவர், கணித முடிவுகளுடன் கொள்கை வடிவில் கிக்ஸ் போசோன்களை அறிமுகப்படுத்தினார். இந்தக் கிக்ஸ் போசோன்கள்தான் பேரண்டத்தினுள் உள்ள அத்தனை பொருட்களின் பௌதீக இயல்புகளுக்கும் (காட்டாகத் துணிக்கைகளின் பாரம்.) காரணமாக இருக்கின்றன எனக் கொள்கை அடிப்படையிற் காட்டிட, கிக்ஸ் போசோனைக் கடவுட் துணிக்கை எனச் சில விஞ்ஞானிகள் குறிப்பிட்டார்கள். பௌதீகத்தில் இன்று காட்டப்படும் கொள்கைகள், முடிவுகள் எல்லாவற்றையும் சரியெனக் காட்டுவது இந்த கிக்ஸ் போசோன்கள் கொள்கையே. ஆக, தற்போதைய இயற்பியற் கொள்கைகள் எல்லாம் முற்றுப் பெறுவதற்கு, சரியானவை



என அமைவதற்கு கிக்ஸ் போசோன்கள் உண்மையானவை எனக் காட்டப்பட வேண்டிய அவசியம் விஞ்ஞானிகளுக்கு வந்தது. எனவே, அன்றில் இருந்து பெரும் முயற்சிகளுடன் கடவுட் துணிக்கையின் தேடல் ஆரம்பமாகியது. விஞ்ஞானிகளுக்கு 'டிமிக்கி' கொடுத்துக் கொண்டு வந்த கிக்ஸ் போசோன், கடைசியில் இப்பொழுதுதான் அவர்களிடம் சிக்கிக் கொண்டது. கிக்ஸ் போசோன் கொள்கையின் வழி பார்த்தால், பேரண்டம் தோன்றியவுடன் பேரண்டம் முழுவதையும் ஒரு புலம் நிரப்பிவிட்டது. இப்பொழுதும் அதனால் பேரண்டம் நிரப்பித்தான் உள்ளது. என்னை, உங்களை, மற்றும் எல்லாப் பொருட்களையும் ஆக்கிய அணுக்களைச் சுற்றியும், அணுக்களின் உள்ளேயும் இப்புலம் காணப்படுகிறது. இதனைக் கிக்ஸ்புலம் என்கிறார்கள். இந்தக் கிக்ஸ்புலத்தின் உள்ளேதான், கிக்ஸ் துகள்கள் பெருமளவில் நிரம்பலாகத் ததும்பிக் கொண்டு இருக்கின்றன. கிக்ஸ் புலத்தினுள் பொருட்கள் எல்லாம் ஏதோவித இயக்கத்தைக் கொண்டுள்ளன. அவ்வியக்கங்களை, கிக்ஸ்புலத்தினுள் உள்ள கிக்ஸ் துகள்கள் தடுத்துக் கொண்டு இருக்கின்றன. சிலவற்றை வலிமையாகத் தடுக்கின்றன, வேறு சிலவற்றை மெதுவாகத் தடுக்கின்றன. ஆனாலும் இத்தடுப்பையும் மீறித் துணிக்கைகள் இயங்குகின்றன. இத் தடுப்புகளின் வலிமையின் அளவுகளுக்கு ஏற்ப, அத்தடுப்புகளை மீறி இயங்குகின்ற பொருட்கள், இம்மிகள் பாரத்தைப் பெறுகின்றன. இதுதான் பொருட்கள் பாரத்தினைப் பெறுவதற்கான காரணமாக இப்போது கூறுகின்றார்கள். நான் இங்கே பாரமெனக் குறிப்பிடுவது பொருட்களின் திணிவினையே ஆகும். இதனை எவ்விதம் காட்டுகிறார்கள் என்றால் மகிழுந்துகளின் வேகத்தைத் தடுப்பதற்குப் போடப்படும் தடுப்புகள் போன்று கருதுகின்றார்கள்.

எல்லா இடங்களிலும் கிக்ஸ்புலம் இருந்தாலும், அதனுள் கிக்ஸ்போசோன்கள் இருந்தாலும் உயர் சக்தி நிலைகளிலேயே கடவுட் துணிக்கை எனும் கிக்ஸ் போசோன்களை வெளிப்படுத்தலாம். இதற்காகத்தான் சேனின் குழுவினர் 'லாட்ஜ் காட்றோன் கொலைடர்' எனும் பெரும் கட்றோன் மோதுகையாக்கியை நிறுவி, அதனுள் உயர் வேகத்தில் உபஅணுத்துகள்களைச் செலுத்தி மோதவிட்டுக் கிட்டத்தட்ட எமது ஆரம்பப் பேரண்டத்தின் சக்திநிலையைப் போன்ற ஒன்றினைத் தருவித்துக் கிக்ஸ் போசோன்களைத் தேடினார்கள், கண்டடைந்தார்கள். கிக்ஸ் போசோன்களைக் கடவுட் துணிக்கை எனக் கூறுவதைச் சில விஞ்ஞானிகள் விரும்பவில்லை. ஆனாலும் கிக்ஸ் போசோனைக் கண்டு பிடித்ததையிட்டுப் பெருமை கொள்கிறார்கள். உப அணுத்துகள்களின் இயல்புகளின்படி, இன்னமும் சில கடவுட் துணிக்கைகள் இருக்கலாம் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். காட்டாக, இலத்திரன் போன்ற இயல்புகளுடைய மியூஓன் என இன்னொரு துகள் உள்ளது. அது, இலத்திரனைவிடத் திணிவு மாத்திரம் அதிகமாகக் கொண்டது. மற்றவகையில் எல்லா விதத்திலும் இலத்திரனையே ஒத்தது. இதுபோலவே, இப்போது இனம் காணப்பட்ட கடவுட் துணிக்கை போன்று, இதனது பாரமான குடும்ப உறுப்பினர்களான வேறு கடவுட் துணிக்கைகளும் இருக்கலாம் எனவும் சிலர் சந்தேகிக்கின்றார்கள். இப்பாரமான உறுப்பினர்களைத் தேட, இன்னமும் சக்தி கூடிய நிலையில் ஆய்வுகளைச் செய்ய வேண்டும். இவ்விதச் சோதனைகளுக்காக சக்திநிலை கூடிய நிலைகளை மனிதர்கள் உண்டாக்க வேண்டும். அது மனித குலத்திற்கே உலை வைத்துவிடும் செயலாக மாறிவிடும் என்பது சிலரது பயம். அதனால் பெரிய காட்றோன் மோதுகையை பரிசோதனைகளுக்கு, எங்களுக்கும் விபரங்கள் தெரியும் எனக் கூறும் சூழற் சுற்றுப்புறப் பாதுகாப்பு அமைப்பினைச் சேர்ந்த, எதிர்பாளர்களும் இருக்கின்றார்கள். அடுத்து, இவ்வளவு பெரும் செலவில், 10,000 விஞ்ஞானிகளின் மூளைவலுவைச் சேர்த்துக் கிக்ஸ் போசோனைக் கண்டுபிடித்ததினால் மனித குலத்திற்கு என்ன உபயோகம் எனும் பெருங் கேள்வி எழுந்துள்ளது. அதற்கான

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


NEXTBOX 2.0
ரிவியின் முகம்
மீண்டும் மாறுகிறது.
டிஜிட்டல் பிளஸ் ரிவி,
எக்ஸ்பிரஸ் இன்ரநெட் மற்றும்
இலவச NEXTBOX 2.0
எச்டி பிவிஆர் ரெண்டல் உடன்
$82 39/மாதம்
NEXTBOX
City
SAMSUNG
NEXTBOX 2.0, உடன் உங்களது ரிவியினை உங்களது டபிளட் மூலம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும்.
எங்களது புதிய மெருகூட்டப்பட்ட ரிவி நிகழ்ச்சி நிரல் வழிகாட்டியில் இலகுவாக நிகழ்ச்சிகளை தேடலாம்.
உங்கள் பிவிஆர் இல் நிகழ்ச்சிகளை எங்கிருந்தும் பதிவு செய்ய அல்லது கட்டுப்படுத்த முடியும்.
பல ஆயிரக்கணக்கான நேரடி ரிவி சனல்களை உங்களது டபிளட் இல் உங்கள் வீட்டில் எங்கிருந்தும் பார்க்கலாம்.
இவற்றை எல்லா றொஜேர்ஸ் அதிவேக இன்ரநெற்றின் மிக விரைவான Wi-Fi மூலம் செய்யலாம்.
ஏற்கனவே உங்களிடம் NextBox™ 2.0 இருக்கிறதா? உடனடியாக இதற்குரிய app ஐ தரவிறக்கம் செய்வதன் மூலம் இவற்றை ஆரம்பியுங்கள்.
தொலைபேசி: 1 855 214-6824 | இணையம்: rogers.com/EnnathuNextBox |
நேரில்: உங்கள் உள்ளூர் றோஜேர்ஸ் நிலையத்துக்கு நேரில் செல்லவும்.
action ENTERTAIN PLAY WATCH SPORTS ENTERTAIN ACTION FUTURE MOVIES
புதிய வெளியீடுகள் LIVE வியப்பில் ஆழ்த்தும் LIVE NEW RELEASE
ANYPLACE STUNNING ANYPLACE EXCITING
ROGERS
Offer available for a limited time within Rogers cable service area (where technology permits) to new customers in Ontario only and subject to change without notice. 1 Taxes extra. Includes Digital Plus TV (including NextBox 2.0 HD PVR rental) service and Express Internet (including modem rental) for 6 months. Regular monthly rates for each service will apply thereafter (including for modem and HDPVR rental or purchase) and are subject to change. Current regular rate $135.54/mo. An installation charge of $49.99 and activation fee of $14.95 also apply. TV portion includes monthly Digital Service Fee of $2.93 and, where applicable, CRTC Local Programming Improvement Fund Fee (LPIF) of 1% of the recurring TV monthly service fee. 2 Rogers Anyplace TV Home Edition only available in Ontario to Rogers customers with a My Rogers account, consolidated billing, and select HD digital set top boxes (8642 HDPVR, 4642 HD, 8300 HDPVR and 4250 HD). Customers must download the Rogers Anyplace TV Home Edition app from applicable app store (free to download). Wireless data charges deducted from usage allowance or at pay per use rate for set/manage/record and remote control features outside of Wi-Fi. Live streaming feature (currently only available on tablets) only available within your home over your own Wi-Fi connection and requires subscription to Hi-Speed Internet (Lite tier and above) and Rogers Digital TV (excluding Digital Starter Pack) and a compatible iPad or Android tablet. Internet usage deducted from your usage allowance or charged at per GB rate for your tier. Live TV content selection is limited. Visit Rogers.com/GetAnyplaceTVHome for full details. © 2013 Rogers Communications.

# மகுடம் 2013

கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் கனடா கிளை நடத்தும் 'மகுடம்' விழா 2013 ஆம் ஆண்டு மார்ச் 23 இல் ரொறொன்ரோவில் உள்ள ஆர்மேனியன் இளையோர் நடுவத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக சமூகபுரவலர் மாணிக்கம் சுப்பிரமணியமும் அவரது பாரியார் மாலதி சுப்பிரமணியமும் சமூகமளித்திருந்தார்கள். கொக்குவிலை சேர்ந்த கொடையாளரான மாணிக்கம் சுப்பிரமணியம் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு மூன்று மாடி நூற்றாண்டு விழா மண்டபம் அமைத்து கொடுத்தது மட்டும் அல்லாமல் கொக்குவில் கிராமத்திற்கும் கொழும்பில் கதிர்வேலாயுத சுவாமி கோயில் போன்ற பல பொது நிறுவனங்களுக்கும் பலவகையான உதவிகளை செய்துள்ளார். இவ்விழாவிற்கு கௌரவ விருந்தினர்களாக கொக்குவில் இந்துக் கல்லூரி பழையமாணவரான மருத்துவர் ஜெயக்குமாரி நடேசலிங்கமும் அவரது கணவர் மருத்துவர் பழனியர் நடேசலிங்கமும் வந்திருந்தார்கள். இவர்கள் இருவருமே ரொறொன்ரோ Sick Kids வைத்தியசாலையில் பணிபுரிகின்றனர். மருத்துவர் பழனியர் நடேசலிங்கம் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் பணிபுரிகிறார்.

பிரதம விருந்தினர் மற்றும் கௌரவ விருந்தினர் மங்கல விளக்கேற்றலுடன் மகுடம் விழா மாலை 6:00 மணிக்கு ஆரம்பமானது. மங்கல விளக்கேற்றலை தொடர்ந்து தேசியகீதம், கல்லூரி கீதம், தமிழ்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு தேசிய கொடியும், கல்லூரி கொடியும் ஏற்றப்பட்டது. இதை தொடர்ந்து போரில் இறந்தவர்களுக்கும் காலம் சென்ற கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்களுக்குமாக ஒரு நிமிட அகவணக்கம் நடைபெற்றது.




கலை நிகழ்ச்சிகள் நாட்டியகலைமணி ஸ்ரீமதி குமுதினி சிறீகாந்தனின் மாணவிகளின் வரவேற்பு நடனமான புஷ்பாஞ்சலியுடன் ஆரம்பமானது. இந்த வரவேற்பு நடனத்திலும் பின்னர் நடைபெற்ற ரொறொன்ரோ கலாபவன மாணவிகளின் இன்னொரு நடனமான கிராமிய நடனத்திலும் ஆடிய சிறுமியின் நடனம் மிகவும் அழகாகவும் பார்வையாளர்களை கவர்ந்ததாகவும் இருந்தது.

வரவேற்பு நடனத்தை தொடர்ந்து செல்வி ரூபினி தெய்வேந்திரனின் மாணவிகளின் Fusion நடனம் நடைபெற்றது. இந்த டிவி சாய் நடனாலய மாணவிகளின் இன்னொரு நடனமான கும்கி Instrumental இன்னொரு நிகழ்வாக பின்னர் நடைபெற்றது.

பரதகலா வித்தகர் கிருத்தியாயினி ஜெகதீஸ்வரன் மாணவிகளின் 'சிவசக்தி' நடனம் நடைபெற்று அதை தொடர்ந்து கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா கிளையின் தலைவர் M.V ஜெகநாதன் உரை நிகழ்த்தினார். தலைவர் தனது உரையில் காலம் சென்ற திருமதி. சுப்பிரமணியம் குடும்பத்தினரும் திரு. திருமதி. நாகலிங்கம் குடும்பத்தினரும் மனம் உவந்து கொடுத்த நன்கொடைக்கு சமமாக பழைய மாணவர் சங்கமும் இணைந்து மொத்தமாக 13 ஆயிரம் கனடிய டொலர் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு வழங்கப்பட்டது என்றார்.

இதைவிட கொக்குவில் இந்துக்கல்லூரியில் தரம் 6 இல் இருந்து 10 வரை படிக்கும் 50 மாணவர்களுக்கும் மாதம் 300 ரூபா உதவிப்பணமாக வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார். இத்திட்டத்திற்குரிய இலக்கில் 65% ஐ அடைந்து விட்டதாகவும் இந்த வாழ்நாள் உதவித்திட்டத்தை பூரணப்படுத்த $300 டொலர் வழங்கக்கூடிய பல நன்கொடையாளர்கள் தேவை என்றார்.

தலைவர் உரையைத் தொடர்ந்து சதங்கை நர்தனாலய மாணவிகள் வழங்கிய நிருத்திய

தொடர்ச்சி 35ஆம் பக்கம்




SKN
SKN FINANCIAL
எண்கள் எதைப் பேசுகிறது?
$1530*
*$10,000 அடைவுக்கு PRINCIPAL REDUCTION SCHEME® (PRS) திட்டத்தின் மூலம் நீங்கள் ஒரு வருடத்தில் சேமிக்கும் தொகை.....
உங்கள் தங்க நகை அடைவுகளைத் தவணை முறையில் விரைவில் மீட்டு வட்டியை சேமிக்கும் திட்டத்தை PRINCIPAL REDUCTION SCHEME® (PRS) SKN வழங்குகின்றது
உங்கள் அனைத்துக் கட்டணங்களையும் பிரதான வங்கிகளில் செலுத்தலாம்.
Now @ Brampton
40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கைக்கு SKN
BRAMPTON
85, Kennedy Road South, Unit - 33
(Next to TIM HORTONS)
Kennedy & Steeles
905-499-0800
SCARBOROUGH
2677, Eglinton Avenue, Unit - 4
(Close to CIBC Bank)
Brimley & Eglinton
416-269-5393

# A New Project By TRIDEL

## TRIO @ HWY 404 & SHEPPARD











## Occupancy Spring 2016

**For Further information Please Call**

**Tel: 416.321.6969**

## HomeLife/GTA Realty Inc. Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

**"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"**

**5215 Finch Ave, E, #203 - Tel: 416.321.6969**

**Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666**

*Independently Owned & Operated

# இரட்டை பிரஜா உரிமை

## Dual Citizenship – Sri Lanka

புனித பத்திரிசியார் பழைய மாணவர் கனடா சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களின் சந்திப்பு மார்ச் 16, 2013 திகதி ஸ்பாரோ கொன்வென்சன் சென்ரரில் நடைபெறவுள்ள புனித பத்திரிசியார் நாள் கொண்டாட்டம் தொடர்பாக கூட்டப்பட்டது. முடிவில் நிர்வாக உறுப்பினர் ரஞ்சித் இல்லத்தில் விருந்துபசாரம். அவ்வேளையில் பல விடையங்கள் பேசப்பட்டன. நண்பர் ஒருவர் அண்மையில் இலங்கை சென்று திரும்பியிருந்தார். அவரிடம் ஊர் விவகாரங்கள் பற்றிய கேள்விகள் தொடுக்கப்பட்டன. வெளிநாடுகளில் புகலிடம் கோரி குடியுரிமை அந்தஸ்து பெற்ற இலங்கையை பூர்விகமாக கொண்டவர்கள் தாங்கள் பிறந்த மண்ணை தரிசிப்பதற்கு விசா தேவை என்பது மனதைப் புண்படுத்துவதாக பட்டது. விசா என்ற பதத்தை பாவிக்காமல் அரசுக்கு 'கப்பம்' என்ற சொல்லை பாவிப்பது பொருத்தமாக அமைந்திருக்கும்.

கனடாவிலிருந்து இலங்கை சென்றிருந்த நண்பருக்கு அவரது குடும்ப சொத்து தொடர்பாக பத்திரம் தயார் பண்ணவேண்டியிருந்தது. அதற்காக இலங்கை அரச ஊழியர் ஒருவரின் சேவை தேவைப்பட்டது. சேவையை நாடிய பொழுது அந்த (சிங்கள) ஊழியர் நண்பரிடம் அவரது இரு அடையாள பத்திரங்கள் கொடுக்கும் படி பணித்தார். நண்பர் இலங்கை அடையாள அட்டையையும் கனடிய பாஸ்போட்டையும் கொடுத்தார். இந்த இரண்டு பத்திரங்களும் நண்பரின் குடியுரிமை அந்தஸ்து பற்றிய சட்டபூர்வ விடயத்தில் முரண்பாட்டை ஏற்படுத்தின. கனடிய பாஸ்போட் கனடிய பிரஜைக்கு உரித்தானது. அதேபோல் இலங்கை அடையாள அட்டை இலங்கை பிரஜைக்கு மட்டும் தான் உரித்தானது. இலங்கை பிரஜை அல்லாதவர் இலங்கை அடையாள அட்டையை பாவிப்பது குற்றமாகும்.



அவ்வாறு இரு நாட்டு பிரஜா உரிமையை உறுதிப்படுத்தும் அடையாளப்பத்திரத்தை பாவிப்பதற்கு இரட்டை பிரஜா உரிமை அவசியமாகும். இதற்கு இரு நாட்டு பிரஜா உரிமையும் பெற்றிருக்க வேண்டும். அந்த இரு நாட்டு பிரஜா உரிமை அந்தஸ்து நண்பரிடம் இருக்கவில்லை. அவர் கனடிய பிரஜா உரிமை அந்தஸ்து பெற்ற பொழுதே இலங்கை பிரஜா உரிமையை இழந்துவிட்டார்.

இரட்டை பிரஜா உரிமைக்கான சலுகையை இலங்கை அரசு சென்ற வருடம் பறித்து விட்ட காரணத்தால் நமது நண்பர் இரு நாட்டு பிரஜா உரிமை பெறும் வாய்ப்பையும் இழந்திருந்தார்.

1948ம் ஆண்டு இல 18 அமலாக்கப்பட்ட இலங்கை பிரஜா உரிமை சட்டமும், 1948ம் ஆண்டு இல 20 அமலாக்கப்பட்ட குடிவரவு, குடியகல்வு சட்டமும் மாற்றியமைப்பதற்கான அனுசரணையை இலங்கை மந்திரி சபை சென்ற பெப்ரவரி மாதம் வழங்கியுள்ளது என்ற செய்தி கிடைத்துள்ளது. இரட்டை (Dual citizenship) பிரஜா உரிமை தொடர்பான மாற்றங்களே இந்த சட்டமாற்றங்கள் மூலம் அங்கீகரிக்கப் பட்டுள்ளன என்பது தெரியவருகிறது. இந்த



**மனுவல் ஜெசுதாசன்**

**தொடர்ச்சி 33ஆம் பக்கம்**



# முட்டாளும் அறிவாளியும்

## நேர்காணல்: செழியன், நாஞ்சில்நாடன்

சமீபத்தில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் தமிழ்த் திரைப்படம் இயக்குநர் பாலாவின் 'பரதேசி'. பாலா படம் என்பதே ஒரு முத்திரை என்றாலும், தற்போது படம் வெற்றிபெற்றுள்ள சூழ்நிலையில் இந்த வெற்றிக்கு பாலாவைவிட முக்கிய காரணகர்த்தாக்களாக குறிப்பிடப்படுபவர்கள் ஒளிப்பதிவாளர் செழியனும் வசனமெழுதிய இயக்குநர் நாஞ்சில்நாடனும்தான். ஒளிப்பதிவாளர் செழியனுக்கு நான்காவது படம். நாஞ்சில்நாடனுக்கு முதல்படம். இருவரையும் விளம்பரம் இதழுக்காகச் சந்தித்தோம்.

முதலில் செழியன்

தற்கால தமிழ் சினிமா ஒளிப்பதிவாளர்களில் முக்கியமானவராக குறிப்பிடப்படும் பி.சி.ஸ்ரீராம் அவர்களிடம் தொழில் கற்றவர் நீங்கள். அவருடன் பணியாற்றிய அனுபவங்களைச் சொல்லுங்களேன்?

சிறு வயதிலேயே சினிமாவில் ஒளிப்பதிவா-ளராக வேண்டும் என்ற எண்ணம் எனக்கிருந்தது. பி.சி.ஸ்ரீராம் சாரை போய் பார்த்து வாய்ப்பு கேட்டேன். தற்போது என்னிடம் உதவியாளர்கள் இருக்கிறார்கள். இதில் யாராவது வெளியே போனால் சேர்த்துக்கொள்கிறேன் என்றார். சுமார் ஒன்றரை வருடங்கள் காத்திருந்தேன். ஏறத்தாள நாற்பது முறை சந்தித்திருப்பேன். அதன் பிறகு சேர்த்துக்கொண்டார். நான் இயல்பிலேயே கொஞ்சம் கூச்ச சுபாபம் உள்ளவன். பி.சி.ஸ்ரீராம் சொன்னார்: முதலில்



- சந்திப்பு சிவதானு -

உன்னிடம் உள்ள சுபாபம் மாறனும். சினி-மாவில் தன்னை சுற்றி உள்ளவர்களை வேலை வாங்குகிற திறமை உள்ளவர்கள்தான் ஜெயிக்க முடியும். முதலில் அது உனக்கு வரனும் என்றார்.

ஒட்டுபொறுக்கி எனும் ராசாவாக அதர்வா நடித்திருக்கிறார். அடிபட்டு, கால் நரம்பு துண்டிக்கபட்டு, எல்லாவற்றையும் இழந்து குழந்தையுடன் வெறுமை தோய்ந்த கண்களுடன் அவர் திரும்பி பார்க்கும் பார்வை நம் மனசாட்சியை உலுக்கிவிடுகிறது. ராசா, பலவீனங்களின் மொத்த உருவம். முட்டாளல்ல ஆனால் அப்பாவி. யாசிப்பதற்கும் உரிமையோடு கேட்டு வாங்கி சாப்பிடுவதற்கும் வித்தியாசம் தெரியாதவனாய் இருக்கிறான். தன் இலைக்கு பந்தியில் யாரும் கவனிக்காமல் போகிறார்கள் என்றாலும் அழுகிறான். அடிபடும்போதும் அழுகிறான். தன்ஷிகா கதாபாத்திரத்தின் குழந்தையோடு விளையாடி விளையாடி உறவினை வளர்த்துக்கொள்ளும் போதும், தன் நண்பனின் மனைவி

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

Train to be a ...
Community Service Worker With CO-OP




Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome
Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA
OACC PROUD MEMBER ontario association of career colleges
You may qualify for SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179
citi COLLEGE
www.CitiCollege.ca
Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
Financial Assistance may be available to those who qualify

# திரை விமர்சனம்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

வெள்ளைக்காரனின் பாலியல் நிர்ப்பந்தங்களுக்கு ஆளாகி வருகையில் அவளை மௌனமாக ஒதுக்கி உதாசீனப்படுத்தும்போதும், அதர்வா பலவீனமான ஆணொருவனின் நல்ல கெட்ட பக்கங்களை நன்றாக வெளிப்படுத்துகிறார்.

வேதிகாயின் நடிப்பு, முதல் பாதியில் படு செயற்கையாக இருக்கிறது. வேதிகாவுக்கும் தன்ஷிகாவுக்கும் முகத்தில் கருப்பு மையை பூசிவிட்டவர்கள் தலையில் எண்ணெயை தேய்க்க மறந்துவிட்டிருக்கிறார்கள். ஷாம்புவின் பளபளப்பில் வேதிகாவுக்கும் தன்ஷிகாவுக்கும் மட்டும் தலைமுடி, அவர்கள் வாழ்வுக்கு பொருத்தமில்லாமல் மின்னுகிறது. வேதிகாவைப் போல மிகை நடிப்பில் ஈடுபடவேண்டிய கட்டாயமில்லாதலால், தன்ஷிக்காவுக்கு நுட்பமான பாவனைகள் கைகூடி வருகின்றன. அதர்வா தன் குழந்தையுடன் விளையாடுவது, கால் கழுவி விடுவது என்பதையெல்லாம் பார்க்கும்போது தன்ஷிகாவின் முகத்தில் தெரியும் மலர்ச்சிகள் மின்னல்கள் போல திரைக் கதையையே பிரகாசமாக்குகின்றன. அதர்வாவுக்கும் அங்கம்மாவுக்கும் திருமணமாகாமலே குழந்தை பிறந்திருப்பதை அறியவரும்போது, அதர்வா அதை அங்கம்மாதான் என்று நியாயப்படுத்த முயல, பெண்ணைக் குற்றம் சொல்லாதே என தன்ஷிகா சீறுவதும் கச்சிதமாக இருக்கிறது. கங்காணியாக வரும் ஜெரி, கிராமத்து குடிகார கதாபாத்திரமாக நடித்துள்ள கவிஞர் விக்ரமாதித்யன் என்று அத்தனை கதாபாத்திரங்களும் கச்சிதமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறார்கள், சிறப்பாக நடித்திருக்கிறார்கள். ஆனால், எல்லோரையும்விட உயரத்தில் இருப்பது அதர்வாவின் பாட்டியாக வரும் கச்சம்மாள்தான். அங்கம்மா அம்மாவிடம் ஊர்ப் பஞ்சாயத்தில் கைச்சண்டையில் இறங்குவது, சத்தியம் பண்ணச்சொன்ன எரியும் சூடத்தை அலட்சியமாக அணைத்துவிட்டு போவது, படத்தின் பிற்பகுதியில் அங்கம்மா கர்ப்பமாக இருக்கிறாள் என்பது அறிந்து அவள் அம்மா அவளை தலை முழுகி திட்டும்போது அங்கம்மாவை கையைப்பிடித்து தன் குடிசைக்கு அழைத்து வருவது, பேரன் இப்படி பொறுப்பில்லாமல் ஒட்டுப்பொறுக்கி என்று பெயரெடுத்து அப்பிராணியாக திரிகிறானே என்று கவலைப்படும்போது, அங்கம்மாவுக்கு பிள்ளைப்பேறு பார்த்து திருமணத்திற்கு முன்பே பிறந்த அந்த சிசுவை தொப்புள்கொடி ரத்தத்தோடு கையில் ஏந்தி பெரிய சாதனை போல கொண்டாடும் போது என எல்லா காட்சிகளிலும் மூதாட்டி அசத்துகிறார்.



நாஞ்சில்நாடனின் வசனமும் செழியனின் கேமராவும் பிரமாதமாக இருக்கிறது. இருவருமே இப்படத்தில் பலம். பெரிய பலவீனம் ஜி.வி.பிரகாஷ் இசை. சப்தங்கள் ஒருவகையில் நிலப்பகுதியை அடையாளப்படுத்தும் தன்மையுடையன. படத்தில் பல காட்சிகளுக்கும் தேவை நிறையவே மௌனமும் அமைதியும்தான். ஆனால், எல்லா காட்சிகளிலும் 'ஜஜாங் ஜஜாங்' என இரைச்சலை கொட்டுகிறார். பாடல்களும் சுமார்தான். இப்படியொரு பின்னணியில் ஒரு படம் எடுத்ததற்காக இயக்குனர் பாலாவை பாராட்டலாம். ஆனால், ஏகப்பட்ட குறைகள். தமிழின் முக்கியமான இயக்குநர்களில் ஒருவராகச் சொல்லப்படும் பாலா போன்ற ஒருவர் படத்தில் இவ்வளவு குறைகள் இருக்கக்கூடாது. இப்படம் அது பேசுகிற வரலாற்றுக்கு நேர்மையின்றியும் போதிய ஆராய்ச்சிகளின்றியும் மேம்போக்காக சொல்லப்பட்டிருப்பது முதல் குறை. முதலில் காட்டப்படும் கிராமத்தில் வசிக்கும் மக்கள் என்ன தொழில் செய்கிறார்கள் என்பது சொல்லப்படவேயில்லை. அதர்வா ஒன்றிரண்டு காட்சிகளில் தண்டோரா போடுகிறார், அவ்வளவுதான். கிராமத்தில் வர்க்க அடுக்கோ சாதி அடுக்கோ தெரிய வருவதில்லை. சோழர் காலத்திலிருந்து வரிவசூல் முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு விட்ட தமிழகத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் அதற்கான அரசுப் பிரதிநிதி உண்டு. இங்கிலீஷ்காரர்கள் காலத்திலும் இந்தப் பிரதிநிதியும் ரெவின்யூ அமைப்புகளும் தொடர்ந்து வருகின்றன. பாலாவின் கிராமத்தில் எதுவும் கிடையாது. பாலா காட்டும் தேயிலை எஸ்டேட்டும் 1939இன் எஸ்டேட் அல்ல. 1936இலேயே தேயிலைத் தோட்டங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன. பாலாவின் எஸ்டேட்டில் அதற்கான அறிகுறியே இல்லை. பஞ்சம் பிழைக்கச் செல்வதற்காக ஊரைவிட்டு செல்லும் அளவுக்கு கிராமத்தில் அவர்கள் வாழ்க்கை சிரமத்தில் உள்ளது போலும் தெரியவில்லை. கிணற்றில் தண்ணீர் எடுக்கும்போது ஊர் பெண்களிடையே சந்தோஷத்துக்கு குறைவில்லை. தண்ணீர் பஞ்சமும் இல்லை. மக்கள் தொடர்ந்து நாற்பத்தியெட்டு நாட்களாக நடந்து கொண்டேயிருக்கிறார்கள். உண்மையில் இப்படி நடந்தால் உத்தரப் பிரதேசத்துக்கே போய்விடலாம். தென் தமிழ்நாட்டிலிருந்து மேற்கு வால்பாறைக்கு செல்ல பத்து நாள் நடந்தாலே போதும். அவர்கள் நடக்கும் காலம் கற்காலமா என்ன? வழியில் கோவில் குளங்கள், கிராமங்கள் எதுவுமே இல்லை. போதாக்குறைக்கு நாற்பத்தியெட்டு நாட்கள் நடந்து சோர்ந்து தாடியெல்லாம் அடர்ந்துவிடுகிறவர்களுக்கு அதற்கேற்றாற் போல அப்பாக்கட்டை கிராப்பில் தலையில் முடி வளர்வதில்லை. ஒரே ஊரில் ஒன்னுமண்ணாய் பழகியவர்களூ அந்த மக்களெல்லாம் ஒருவருக்கொருவர் உறவினர்கள் என்றும் தெரிகிறது. அப்படிப்பட்டவர்கள் பஞ்சம் பொழைக்கும் பயணத்தில், ஒருவர் மரணத்தின் விளிம்பில் இருக்கிறார் என்று தெரிந்தும், அவரை அப்படியே போட்டுவிட்டு திரும்பிகூட பார்க்காமல் பயணத்தைத் தொடர்வது நம்பும்படியாய் இல்லை. தேயிலைத் தோட்டத்திலும் நாயகன், நாயகி, நாயகனின் நண்பன், அவனுடைய மனைவி ஆகியோரைத் தவிர்த்து வேறுயாருக்கும் அந்த தேயிலைத் தோட்டத்தில் ஏதும் பிரச்சனைகள் இருப்பதாகத் தெரியவில்லை. அவரவர் வேலையை அவரவர் பார்த்துக்கொண்டு குடியிருப்புகளில் வாழ்கிறார்கள். இடைவேளை வரைக்கும் நாஞ்சில்நாடனின் 'இடலாக்குடி ராசா' என்னும் சிறுகதையைத் தழுவி எடுக்கப்பட்டுள்ளது. இடைவேளைக்குப் பிறகு வரும் தேயிலைத்தோட்டக் காட்சிகள் பி.எச்.டேனியலின் 'எரியும் பனிகாடு' நாவலைத் தழுவி எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், படத்தில் கதை திரைக்கதை என்று பாலா பெயர் வருகிறது. நாஞ்சில்நாடனிடமும் பி.எச்.டேனியல் வாரிசுகளிடமும் முறைப்படி அனுமதி பெற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனாலும், இப்படி தன் பெயரைப் போட்டுக்கொள்வதை எப்படி நியாப்படுத்த முடியும்? இனிமேல் இக்கதையின் உரிமையை பலகோடி ரூபாய்களுக்கு வேறுமொழிகளுக்கு விற்கப்போகிறார் பாலா. நாஞ்சில்நாடனுக்கும் பி.எச்.டேனியல் வாரிசுகளுக்கும் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட காசு மட்டும்தான். படத்தில் மக்களை ஏமாற்றுபவராகக் காட்டப்படும் கங்காணி செய்வதுபோன்ற காரியம்தானே இதுவும். இப்படி திருட்டுத்தனம் செய்யும் ஒருவரை எப்படி பெரிய இயக்குநர் என்று கொண்டாட முடியும்.

சரி இதனையாவது வழக்கமாக சினிமாக்காரர்கள் செய்வதுதானே என ஆறுதல் அடைந்துவிடலாம். 'எரியும் பனிக்காடு' நாவலை எழுதிய பி.எச். டேனியலை ஞாபகப்படுத்தும் ஒரு பாத்திரத்தை உருவாக்கி, அவரை சிறுமைப்படுத்துவதைத் தான் பொறுத்துக் கொள்ள முடியாது. மலைக் காடுகளில் தேயிலைத் தோட்டங்களில் வேலைபார்க்கிற ஏழை மக்களுக்கு மருத்துவம் பார்த்து, அவர்களுடைய உரிமைகளுக்காக தேயிலை தோட்ட தொழிலாளர்கள் சங்கம் அமைத்து போராடியவர் டேனியல். தன் போராட்டத்துக்கு வலுசேர்க்க நாவல் எழுதியவர். அந்த நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட 'பரதேசியிலோ' விஷக்காய்ச்சலினால் கொத்து கொத்தாக மக்கள் மடியும்போது பார்வையிட வருகின்ற டாக்டர், கொள்ளை நோயினை, தொழிலாளிகளை கிறித்துவத்திற்கு மதமாற்ற சந்தர்ப்பமாக பார்க்கிறார். அவரும் அவருடைய வெள்ளைக்கார மனைவியும் ஜீஸஸ் குத்துப்பாட்டு ஆடி ரொட்டிகளை வீசியெறிய தொழிலாளிகள் அவற்றைப் பொறுக்கி எடுத்துக்கொள்கிறார்கள். 'அடிமைத்தனத்தின் உள்கட்டுமானங்களான உழைப்பு சுரண்டல், அதிகார படியமைப்பு, மருத்துவம், மாந்தரீகம், மதம், ஆண்மனம், பணத்தாசை ஆகியவற்றின் உறவுகளை காட்சிப்படிமங்களாக்குவதிலும் கதைக்காகக் கோர்வைப்படுத்துவதிலும் 'பரதேசி' பெரும் வெற்றியடைந்திருக்கிறது' என தமிழ் சிற்றிதழ்காரர்களே பாராட்டுகிறார்கள். இந்தப் பாராட்டு 'எரியும் பனிகாடு' நாவலால் கிடைத்தது. அதற்கு காரணமான டேனியலுக்கும் அவருடைய தொண்டுக்கும் இப்படியொரு துரோகத்தினை பாலா இழைத்திருக்க வேண்டாம்!


## கொக்குவில் இந்துக்கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் - கனடா
## வருடாந்த பொதுக்கூட்டம் - 2013

**திகதி:** ஏப்பிரல் 28, 2013, ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** பிற்பகல் 3:00 மணி
**இடம்:** *GTA Square ( Second floor)*
*5215 Finch Ave. E., #224, Scarborough,ON M1S 0C2*

இக்கூட்டத்திற்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அவர்களின் வாரிசுகள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**மேலதிக தொடர்புகளுக்கு**
**416 414 3327 416 299 6645**
**416 296 7037 416 315 9397**



## யோகா சோதிடம்


- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# யானையும் பறவையும்

ஒரு யானை ஒரு காட்டில் வாழ்ந்து வந்தது. அக்காட்டில் சிங்கம் இல்லாததால், அக்காட்டிற்கு அந்த யானை தான் அரசன். யானையின் தலைக்கு ஏற்ற முடியை அக்காட்டின் இரும்பு சம்பந்தப்பட்ட வேலைகள் செய்யும் குரங்கினால் செய்யவோ அல்லது தூக்கவோ முடியாததால், குரங்கு யானையின் தும்பிக்கைக்கு ஒரு முடியின் வடிவில் மோதிரம் ஒன்றை தயாரித்தது.

யானையும் அதை அணிந்து கொண்டு திரிந்தது. அதன் பலத்தையும், அறிவையும் பாவித்து காட்டை ஆண்டது. ஒருமுறை ஒரு ஆந்தை ஒரு சிறு பறவையின் கூட்டை தட்டி விழுத்தி விட்டு சென்றது. பறவையும் அரசனிடம் என்ன செய்வது என கேட்கச் சென்றது. யானையும் பறவையின் பிரச்சினையை தீர்த்த பின்னர், அந்த ஆந்தையை கண்டு பிடித்து தண்டிக்குமாறு குரங்குகளிடம் கட்டளை இட்டது. பறவையும் நன்றியுடன் அரசனுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் யானையை என்ன செய்வது என்று கேட்டது.



யானையும் சிரித்துக் கொண்டு, 'சிறிய பறவையான உங்களால் என்ன செய்ய முடியும். இது அரசனின் கடமை. நீ போகலாம்" என்றது. பறவையும் சென்றது. தன்னால் யானைக்கு எந்த உதவியும் செய்ய முடியாதா என நினைத்துக் கொண்டு பறவை இருந்தது. ஒரு நாள் யானையின் தும்பிக்கையில் இருந்து மோதிரம், கைவிடப்பட்ட குழாய் ஒன்றில் விழுந்தது. அது தும்பிக்கையால் எட்டக் கூடிய தூரத்தில் இல்லை. அது குரங்குகளை கூப்பிட்டாலும், குரங்கின் கைகள் குழாயினுள்ளே அடிவரை போக முடியவில்லை. எனவே யானை காட்டு மிருகங்களுக்கு செய்தி அனுப்பியது. மோதிரத்தை எடுப்பவருக்கு 100 பழங்களை வழங்குவதாக கூறியது.

பழங்களை பெற காட்டில் உள்ள உயிர் இனங்கள் யானையை காண வந்தன. காகத்தால் குழாயினுள் போக முடியவில்லை. எறும்புகளால் போக முடிந்தாலும் மோதிரத்தை தூக்க முடியவில்லை. முன்னர் யானை உதவிய பறவையும் வந்தது. அது குழாயினுள் சுகமாக உள்ளே சென்று கொஞ்ச தூரம் பறந்து மோதிரத்தைக் கண்டது. அது மோதிரத்தை குழாயினுள் இருந்து தூக்கி கொண்டு குழாய்க்கு வெளியே வந்தது. யானையும் 100 பழங்களை பறவைக்கு வழங்கியது. பறவை பழங்கள் வேண்டாம் என்று கூறியது.

'இது நான் அரசனுக்கு செய்ய வேண்டிய கடமை. என்னாலும் உதவ முடியும் என்று நிரூபித்து விட்டேன்" என்றது பறவை.

**நீதி: சிறு துரும்பும் பல்குத்த உதவும்.**



ஞா. ஆரணி
அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# ஹவாய் தீவுகள்...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

முக்கியமாகும். உத்திராட்ச மென்ற பெயரில் பல போலியான விதைகள் விற்பனைக்குள்ளன என்பதை வாசகர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.



ஒரு கோவிலுக்குத் தேவையான பூக்கள், பழங்களுக்கு கோவிலுக்குப் பக்கத்திலேயே தோட்டங்கள் அமைப்பது வழக்கம். அவ்வாறே இங்கும் ஆரம்பிக்கப்பட்ட தோட்டம் கடந்த 20 ஆண்டுகளாக பல அரிய பூமரங்களையும் பழமரங்களையும் கொண்ட ஒரு பெருந் தோட்டமாகக் காட்சியளிக்கிறது. இத்தோட்டத்தில் ஓர் ஓடையும், பெரியகுளமொன்றும் பின்னால் மலைத் தொடரும் இயற்கையாக அமைந்திருக்கின்றன. இத்தீவின் காலை நிலைகள் ஆசிய நாடுகளின் தாவரங்கள் செழித்து வளரக் கூடியவாறு அமைந்திருப்பது ஒரு முக்கிய காரணமாகும். இங்கு நாங்கள் இதுவரை பார்த்திராத அரிய பூமரங்களும், பழமரங்களும் ஏராளமாகக் காணப்படு கின்றன. இந்தியா, இலங்கை போன்ற ஆசிய நாட்டுத் தாவரங்களான மா, பலா, அன்னாசி, கொய்யா, விளா, பப்பா, மங்குஸ்தான் ரம்புட்டான் போன்றவை பயிரிடப்பட்டுள்ளன. தென்னை, கமுகு, ரப்பர். கொக்கோ இவையும் காணப்படுகின்றன. இவற்றுடன் மருத்துவப் பயனுள்ள வில்வம், வேம்பு, கறிவேப்பிலை, வெற்றிலை, உருத்திராட்சம், சந்தனமரம், வாழை, டுறியான், சிக்கு, லிச்சி போன்றவையும் காணப்படுகின்றன. இதைத் தவிர இத்தோட்டத்துக்கு கூடாக ஓடுகின்ற சிற்றோடைக்கு நர்மதா எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது தோட்டத்தின் ஊடாக ஓடி சிறிய நீர்வீழ்ச்சியாக விழுந்து குளத்தை அடைகிறது. இந்த மனோ ரம்மியமான தோட்டத்தை நன்கு திட்டமிட்டு, அரிய தாவரங்களை பல்வேறு நாடுகளிலிருந்து வரவழைத்துப் பெயரிட்டுப் பாதுகாத்து வந்த பெருமைக்குரியவர் எமது குருதேவர் ஆவர். இவர் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பு-செங்கல்லடியிலும் ஏழு ஆண்டுகள் வசித்தவர் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

இறைவழிபாட்டை முடித்துக் கொண்டு இரு தொண்டர்களின் வழிகாட்டலில் இத்தோட்டத்தை வலம் வந்தோம். ஒவ்வொரு அரிய பூமரத்தையும் பிற மரங்களையும் பற்றி அவர்கள் வழி நெடுக விபரித்துக் கொண்டே வந்தார்கள். யாவரும் ஆச்சரிய மேலீட்டால் கேட்டுக் கொண்டே வந்தோம். இங்கு தாமரை, லில்லி, நீலோற்பலம் போன்ற நீர்த் தாவரங்களும் உள்ளன. இங்கு 300 வகையான உஷ்ணவலயப் பூமரங்களும் 250 வகை மரங்கள், அரியபல palms வகை மரங்களும் உள்ளன. (தொடரும்)

## கவிதைப் பயிற்சிப் பட்டறை

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் 2013ம் ஆண்டுக்கான கவிதைப் பயிற்சிப் பட்டறை வகுப்புக்களை ஏப்ரல் மாதத்திலிருந்து இலவசமாக நடத்தவிருக்கிறது.

ஏப்ரல் 07ம் திகதியிலிருந்து பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் காலை 10.00 – 1.00 மணி வரை
முகவரி - 2929 Lawrence Avenue East, Scarborough, Ontario

அனுமதி / பதிவு - இலவசம்

இந்தப் பயிற்சிப் பட்டறையில் இணைந்து கவிதை யாப்பிலக்கணம், கவிதை இலக்கியம் ஆகியவை பயின்று தங்கள் கவிதை புனையும் ஆற்றலை வளம் படுத்த விரும்புகின்றவர்கள் முன்கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.

மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா: 905.201.7592 / 416.939.9171
அருட்கவி த. ஞானகணேசன்: 647. 244. 0813

- கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
BRAND Niru ®
Niru BRAND
SHERBET Drink with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
Niru BRAND
FALUDA
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# மகுடம் - 2013

20ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆராதனை நடனம் நடைபெற்றது. இவர்களின் Semi Classical Fusion நடனம் ஒன்றும் பின்னர் நிகழ்ந்து. Semi Classical Fusion இல் பங்கு பற்றிய நான்கு மாணவிகளினதும் திறமை அவர்களது நடனத்தில் தெளிவாக தெரிந்தது.

நிருத்திய ஆராதனை நடனத்தை தொடர்ந்து பிரதம விருந்தினர் மாணிக்கம் சுப்பிரமணியம் உரை நிகழ்த்தினார். பிரதம விருந்தினர் தனது உரையில் கற்றோருக்கு சென்றவிடம் எல்லாம் சிறப்பு என உணர்ந்த கனடா பழையமாணவர் சங்கம் எம்மக்களுக்கு அழியாத கல்விச் செல்வத்தை கல்லூரி மூலமாக வழங்குவதற்கு பேருதவி புரிந்து வருகின்றனர் என்றார். பரதகலா வித்தகி ஸ்ரீமதி செல்வானந்தி சுகுமாரின் மாணவிகளின் ‘முகுந்தா முகுந்தா’ நடனத்தை தொடர்ந்து கௌரவ விருந்தினர் மருத்துவர் ஜெயக்குமாரி நடேசலிங்கம் உரையாற்றினார். அவர் தனது உரையில் தான் வாழ்க்கையில் முன்னேறி இந்நிலைக்கு வர பல ஆசிரியர்கள் உதவினார்கள் என்றார். அவர்களில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் தனக்கு ஆறாம் வகுப்பில் விஞ்ஞானம் கற்பித்த சிவக்கொழுந்து ஆசிரியையும் ஐந்தாம் வகுப்பில் கணிதம் கற்பித்த செல்லையா ஆசிரியரும் குறிப்பிடத்தக்கவர்கள் என்றார்.

கௌரவ விருந்தினர் உரையை தொடர்ந்து ஆடல் கலைமணி ஸ்ரீமதி ரஜினி சத்தியரூபனின் மாணவிகளின் நடனங்கள் நடைபெற்றன. இந்த நடனங்களில் 50 மாணவிகள் வரையில் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தை சேர்ந்த ‘Assassins’ குழுவினரின் நடனம் நடைபெற்றது. இந்நடன நிகழ்வுகளை தொடர்ந்து கௌரவிருதுகள் ஜெகன்மோகன், ரவிசந்திரன் (ஆத்மன்), உமாகரனிற்கு இதுவரை காலமும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளைக்கு செய்துவரும் சேவைக்காக வழங்கப் பட்டது. இடைவேளையைத் தொடர்ந்து விளையாட்டுக் கழக விருதுகள் வழங்கப்பட்டன. விருது வழங்கலைத் தொடர்ந்து பழையமாணவர் சங்க செயலாளர் நடராசா நாகேஸ்வரன் அவர்களால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது.

நன்றியுரையைத் தொடர்ந்து நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டபடி 9 மணி 25 நிமிடத்திற்கு ஆரம்பமான அரவிந்தனின் Mega tuners இனுடைய இன்னிசை விருந்து ரொறொன்ரோவை சேர்ந்த மகிஷா, சாம்பவி, சங்கவி, எலிசபெத் மாலினி, பிரபா, பார்த்தி, ரவி ஆகிய பாடகர்களின் இனிமையான பாடல்களுடன் இரவு 11மணி 25 நிமிடங்களுக்கு நிறைவுற்றது.

மகுடம் நிகழ்வுகள் இம்முறை வழமையை விட மிகவும் தரமானதாகவும், சிறப்பான-தாகவும் நேரத்திற்கு அமையவும் நடைபெ-பற்றது குறிப்பிடத்தக்கது. நூற்றுக்கு மேற்பட்ட மாணவிகள் பங்குபற்றிய இந்தக் கலை விழாவில் மாணவர்கள் (ஆண்கள்) இல்லாதது (Assassions குழுவில் இருந்த நால்வரை தவிர) மிகவும் தெளிவாகத் தெரிந்தது.

மகுடம் விழா நிகழ்ச்சிகளை ராம்பிரசன் மற்றும் சஜினி ஜெயமோகன் தொகுத்து வழங்கினர்.



ஞா. அருந்ததி

# இரட்டை பிரஜா...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

கடல் கடந்த இலங்கையர்கள் (Overseas Sri Lankan ) திட்ட அடிப்படையிலான மேற்கூறிய சட்ட மாற்றங்கள்:

a). முன் கட்ட விசாரணைக்கான நடவடிக்கை ( Pre-Examination Procedure ) - இரு நாட்டு பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்கும் நபர் அதற்கான தகைமை-கள் கொண்டுள்ளார் என்பதனை நிரூபிக்கவேண்டும். அத்தகைமையை தீர்மானிப்பதற்கான நடவடிக்கைகள் முதலில் மேற்கொள்ளப்படும். இதற்கமைய வேறு நாட்டு பிரஜாவுரிமை பெற்றுள்ள முன்னாள் இலங்கை பிரஜை இருநாட்டு பிரஜா உரிமைக்கான விண்ணப்பம் செய்யும் பட்சத்தில் அவ்வந்தஸ்து வழங்குமுன் ஐந்து வருட நிரந்தர வதிவிட உரிமை முதலில் வழங்கப்படும். (A Sri Lankan applicant holding a passport of another country will be given permanent resident status for five years first) ஐந்து வருட முடிவின் பின் விண்ணப்பத்தாரர் இரு நாட்டு பிரஜா உரிமைக்கு தகைமையுடையவராவர்.

முன் கூட்டிய விசாரணைக்கான நடவடிக்கைகளின் பொழுது விண்ணப்பகாரர் பின் வரும் தகல்களை சமர்ப்பிக்கவேண்டும்:

- புகல் நாட்டில் எவ்வாறு பிரஜா உரிமை பெறப்பட்டது
- என்ன காரணத்திற்காக இரட்டை பிரஜா உரிமை கோரப்படுகிறது

மேற்கூறிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் வேறு நாடுகளில் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பின் அந்நாட்டு பிரஜா உரிமை பெற்றவர்கள் இலங்கை பிரஜா உரிமை பெறுவது கேள்விக்குரிய விடையம். இந்த நிபந்தனை தமிழர்களுக்கு இரட்டை பிரஜா உரிமை மறுப்பதற்கான திட்டம் என்பது வெளிப்படை.

தனது குடும்ப சொத்து தன் கையிலிருந்து பறிக்கப்பட்டு விட்டது என்ற ஐயம் ஏற்பட்ட நண்பரின் பரிதாப நிலையை உணர்ந்த அந்த சிங்கள அரச ஊழியர், நண்பர் வியப்படையும் வகையில் செயல்பட்டு அவ்வப்போது சாதாரண சிங்கள மக்கள் சிலர் தன்னும் தமிழனின் பறிக்கப்படுகின்ற உரிமைகளுக்காக அனுதாபப்படுகின்ற உயர்ந்த உள்ளம் கொண்டவர்கள் என்பதனை வெளிப்படுத்தும் வகையில், ‘மஹாத்தையா உங்கட கனடா பாஸ்போட்டை காட்டாதேங்கோ’ அது காட்டினால் உங்கட காரியம் ஆகாது. ஸ்ரீ லங்கா ஐடன்டிக் காட் போதும்..,’ எனக் கூறி நண்பரின் விவகாரத்தை சுலபமாக தீர்த்துவைத்தார் என்ற விடயத்தை மிகுந்த பூரிப்புடன் கூறினார்.

இந்த சம்பவத்தை கேட்ட புனித பத்திரிசியார் பழைய மாணவர் சங்க கனடா நிர்வாக உறுப்பினர் சிலர், ‘நீர் எவ்வளவு லஞ்சம் கொடுத்தனீர்?’ எனக்கேட்டனர். அதற்கு நண்பர், என்னிடம் அவர் நன்றியை தவிர சிறிய நன்கொடை தன்னும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் என பதில் கூறியதை கேட்டு அக்கேள்வியை தொடுத்தவர்கள் திறந்த வாய் மூடாமல் வியப்பில் ஆழ்ந்தனர்.

குறிப்பு: இந்த கட்டுரை தொடர்பாகவோ அல்லது உங்கள் சட்ட சம்பந்தமான சகல தேவைகளுக்கும் மனுவல் ஜேசுதாசனை 416 444 8070 என்ற இலக்கத்தில் அழையுங்கள்


# பேச்சுப் போட்டி - 2013

## பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெறும் பேச்சுப் போட்டி

போட்டி நடைபெறும் நாள்: யூன் 09, 2013 (ஞாயிற்றுக்கிழமை)
விண்ணப்பம் ஏற்கும் இறுதிநாள்: ஏப்பிரல் 30, 2013
போட்டி நடைபெறும் இடம்: ஸ்காபரோ நகர மண்டபம் (Scarborough Civic Centre)
போட்டி நான்கு பிரிவுகளாக நடைபெறும்.

1. தொடக்கநிலை: 2004, 2005, 2006 இல் பிறந்தோர்
2. கீழ்ப்பிரிவு: 2001, 2002, 2003 இல் பிறந்தோர்
3. இடைநிலைப்பிரிவு:1998, 1999, 2000இல் பிறந்தோர் தொடக்கநிலைப் பிரிவுக்கும்,கீழ்ப்பிரிவுக்கும், இடைநிலைப் பிரிவுக்கும் பதிவின்போது பேச்சிற்குரிய பகுதி கொடுக்கப்படும்.

4) மேற்பிரிவு: 1992, 1993, 1994, 1995, 1996, 1997 இல் பிறந்தோர் “தனிநாயகம் அடிகளின் தணியாத தாகம்” அல்லது “தனிநாயகம் அடிகள்” என்னும் தலைப்பில் ஒளிப்படக் காட்சிப்படுத்தலுடன் கூடிய விளக்கவுரை (Power Point Presentation) வழங்கவேண்டும். இவ்வுரைக்கு ஒருவர் ஏழு மணித்துளிகள் மட்டும் எடுக்கலாம்.

905.479.5375 / 647.856.6326 / 416.267.5255 / 418.219.5113

பதிவு செய்வோர் விண்ணப்பப் பத்திரங்களைப் பெறத் தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல். sthaninayakam100@live.com அத்தோடு உங்கள் விணப்பங்களைப் பூர்த்தி செய்து இந்த மின்னஞ்சலில் இணைப்பாக அனுப்ப முடியும். அல்லாதுவிடின் கீழ்வரும் விலாசத்திற்கு தபாலில் அனுப்பமுடியும்.

***Coordinating Committee of Birth Centenary Commemoration of Prof X.S.Thaninayakam Adikal, 29, Schmirler Terrace, Scarborough, ON M1E 5K6***




# Education

## Review Tutorials -136

### AP CHEMISTRY

Identify the stable diatomic species predicted by the molecular orbital model?

(i) $H_2^-$, $H_2$, $H_2^-$ $H_2^{2-}$
(ii) $He^{2+}$, $He_2^+$, $He_2$

### CHEMISTRY 12, IB

(1)Explain the order of increasing boiling points given below,


| | |
|---|---|
| 2,4-dimethyl pentane | 80.5°C |
| n- Heptane | 98.42°C |
| 2- hexanone | 128°C |
| 1- hexanal | 158°C |

(2) A 25mL, 1 mol/L of acetic acid (HOAc) solution is titrated with 1 mol/L NaOH solution.
(i) Determine the $p^H$ of the acid solution before adding NaOH
(ii) Determine the pH resulting solutions when
(a) 10 mL of NaOH has been added?
(b) 25mL of NaOH has been added?
(c) 35 L of NaOH has been added?

### PHYSICS 11 & 12

(1) A bomber plane is diving to drop a bomb to reach a 2000m horizontal target in 20s. If the speed of the plane is 115m/s, determine the angle of the plane and its height when the bomb released from the plane.

(2) Two masses A (5kg) and B (2kg) connected by a cord passes over a massless frictionless pulley P, fixed on an inclined surface (30°) as shown below. If the system is released ($\mu_k$= 0.15), calculate the acceleration of the system.




### BIOLOGY 11 &12

1. Explain, why the use of genetically modified herbicide-resistant crop plants in an agricultural ecosystem is a problem?
2. Two of the side effects of this chemotherapy are that sperm production stops and red blood cell number decreases. Explain why this is the case.

### DATA MANAGEMENT

A 5 card hand is dealt from a deck of 52 cards. How many distinct hands can be formed if there are at least 2 Kings

## Answer Key : 135

### CHEMISTRY 12 & IB

$Mg + Cu^{2+} \rightarrow Mg^{2+} + Cu$
$Mg (s)/ Mg^{2+} (aq) // Mg^{2+} (aq) / Cu (s)$

$E°_{cell} = E°_{(cathode)} - E°_{(anode)}$
$E°_{cell} = E°_{(red. hal cell)} - E°_{(ox. half cell)}$
$E°_{cell} = E°_{(Cu^{2+}/Cu)} - E°_{(Mg^{2+}/Mg)}$

$E°_{cell}$ = (+0.34V) (-2.356) = 2.7 V

### CHEMISTRY 11

(A) Calculate the molarity of the hydrochloric acid solution 12% by mass. (density = 1.05g/mL)

Mass of 1 L solution = 1050 g

Mass of pure HCl in 1 L solution = (12/100)1050g = 126g

No of moles of HCl in 1L solution = mass/ M.mass = 126/ 36.5 =3.45 mol

Molarity = moles/ volume = 3.45/ 1 = 3.45 moles/L

### BIOLOGY 11 &12

- Cancer cells rapidly dividing and abnormally reproducing.
- Cell division occurs followed by DNA replication.
- Chemical analogues that mimic the structure of nucleotides will prevent DNA polymerase and therefore the DNA replication will be prevented.
- Thus cancer cells won't be able to reproduce/ further division.

### PHYSICS (11)

First ball (A) Calculate the time required to reach maximum height $V_f = V_i + a \Delta t$

- $v_i$ =25.0m/s, $v_f$ = 0m/s, a= -9.8m/s$^2$ ; $\Delta t$ = 2.5 s
- For the 2$^{nd}$ ball(B)
- $v_i$ =? , $v_f$ = 0m/s, a= -9.8m/s$^2$; $\Delta t$ = ( 2.5-1.2) s
- $V_f = V_i + a \Delta t$ ; $V_i$ = 13.3m/s **(ans 13.3 m/s)**

### Calculus 12 from 135

**(i) Differentiate,** $\cos^2\frac{1}{x}$ ans:

$$\frac{2}{x^2}\cos\left(\frac{1}{x}\right)\sin\left(\frac{1}{x}\right)$$

**(ii) Find the limits,** $\lim_{x\to 0}\frac{\sin 2x + 3x}{2x + \sin 3x}$ ans :1

*Answer key 136 - next issue*

**Contact: 647 341 3975**
Dr. A.Sri Krishnaraj PhD
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

50
PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE
AVAILABLE FOR RENT

Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

GTA Square Mall (FINCH & MIDDLEFIELD
தொடர்புகளுக்கு: 416.917.6883

# துணிக்கைப்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

பதிலைக் காலம்தான் கூறவேண்டும். 1930களில், இலத்திரனின் முரண் துணிக்கை என்கிற பொசித்திரனைக் கண்டுபிடித்திருந்தார்கள். அப்போது அதன் உபயோகம் என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை. இன்றோ அதன் உபயோகம் மிகப் பெரியது. மருத்துவத்துறையில் அளப்பரிய உதவியைப் பொசித்திரன் மனித குலத்திற்குச் செய்கிறது. அவ்விதமே, எதிர்காலத்தில் கிக்ஸ் போசோனின் உபயோகமும் வரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. காலம் கூறப்போகும் பதிலை நாங்களோ அல்லது எங்களது வாரிசுகளோ அறியத்தான் போகின்றார்கள். எப்படி இருப்பினும் கடவுட் துணிக்கையை இனம் கண்டது, மனித குலத்தின் அறிவியல் வளர்ச்சியின் சிறப்புத்தான்.

# உடல் நோவு...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

மருந்துகளை சிபார்சு செய்துள்ளது. Pregabalin, Duloxetine ஆகியனவே அவை. சிறந்த மருந்துகள் என கூறுகிறது. அத்துடன் Amitriptyline, Nortriptyline, Desvenlafaxine ஆகிய மருந்துகளையும் சிபார்சு செய்துள்ளனர். பொதுவாக மனம், உடல், ஆத்மா போன்றவை சிறப்பாக இருக்க வேண்டும். எனவே இதனை பெறுவதற்கு பல பயிற்சிகளை இவர்கள் மேற்கொள்ளவேண்டும். நீர்நிலைகளில் நீச்சல், சீனமுறையான Taichi, யோகா என்பன உதவலாம். இவற்றில் எதனையாவது தெரிவு செய்யலாம். மெதுவாக செய்தல் அவசியம். அத்துடன் போஷாக்குள்ள உணவு வேண்டும். சங்கீத பயிற்சி (Music Theraphy) மூலமும் இவர்களது நோவு குறைவடைவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. எனவே, மனத்திற்கு விருப்பமான இசையை அனுபவிக்கலாம்.

உடலியல் ரீதியில் பல்வேறு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. தசைகள் ஓய்வு பெறல் இதில் முக்கியம். அத்துடன் உளச்சோர்வுக்கு எதிரான மருந்துகள், நோவினை அகற்றும் மருந்துகள், நித்திரைக்கான மருந்துகள் வழங்கப்படுகின்றன. அறிவியல்சார் சிகிச்சைகளும் வழங்கப்படுகின்றன. டயரியில் நோவு ஏற்படும் நேரம் பற்றிய குறிப்புக்களையும், மோசமான முறையில் நோவு ஏற்படும் நேரம் என்பனவற்றை பற்றியும் எழுதி வைக்கலாம். சிலருக்கு அக்குபங்சர் முறையிலும் இந்நோவினைக் குறைக்க முடிகிறது. சிலருக்கு குடலில் பக்ரீரியாக (Intestinal Bacteria) மூலம் இந்நோய் அதிகமாக ஏற்படலாம் எனவும் அறிக்கைகள் கூறுகின்றன. அதற்கும் சிகிச்சை வேண்டியுள்ளது.

14 வருடங்களுக்கு முன்பு National Fibromyalgia Assocation (NFA) நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் National Fibromylgia and Chronic pain (NFMCP) நிறுவனமும் இதனுடன் இணைந்து செயல்படுகிறது. பல்வேறு உடல் நோவும், மூளையின் சமிக்ஞை குறைபாடும் சேர்ந்து செயல்படும். இவ்வகையான ஒழுங்கீனம் அல்லது நோய் தொடர்ந்து பலரையும் வருத்துகின்றது. இந்நோய்க்கான காரணங்களும் தெரியவில்லை, தீர்வும் முடிவாகவில்லை.

# விடாமுயற்சியின் வெற்றி

தீவிர முயற்சி வெற்றி தருமென நான் எதிர்பார்ப்பதனால் எனது நம்பிக்கையை முற்றிலும் அனுபவித்து அதை வெளிப்படுத்துகிறேன்.

நான் வெற்றி அடைவேன் என்ற எதிர்பார்ப்பே உனது வாழ்வின் வெற்றிக்கும் காரணமாக அமைகின்றது. நான் யார் என்பது எனக்குத் தெரியும் என உன்னைப் பற்றி உன் மனதில் உருவகப்படுத்திக்கொள். வாழ்வில் நான் எதைச் சாதிக்கப்போகிறேன் என்பதை உன் மனதில் உருவகப்படுத்திக் கொள். வாழ்வில் நான் எதைச் சாதிக்க விரும்புகிறேன்? இக்கேள்வியின் பதிலை இப்போ எனக்குத் தெரியாவிட்டாலும் காலநேரம் வரும்போது அதை நான் கண்டறிந்து கொள்வேன் என உனக்கு நீயே சொல். நான் செய்ய விரும்புவதை நிச்சயம் செய்வேன. இவ்வாறு சிறப்பான எதிர்பார்ப்புகளில் நீ நம்பிக்கை வைத்தால் உனது எதிர்பார்ப்புகள்



கட்டாயம் நிறைவேறியே தீரும்.

மற்றவர்கள் தம்மிடமிருந்து எதிர்பார்ப்பதன்படியே தம்மை அடையாளங்கண்டு கொள்ளும் சிலர் எம்மிடையில் இருக்கிறார்கள். இப்படியானால் பிறரின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு வாழ நீ முயற்சிப்பாய். சிலசமயங்களில் உனது திறமையை முழுதும் வெளிப்படுத்தாது அவர்களின் கணிப்புக்கேற்ப குறைவான நிலையில் வாழ நீ தள்ளப்படலாம். உன்மேல் சுமத்தப்பட்டிருக்கும் இந்த அடையாளத்தினால் வாழ்வு கடினமானது என நீ எதிர்பார்க்கலாம். இவ்வாறு ஒரு எதிர்மறை எதிர்பார்ப்பை கைக்கொண்டால் நீ நினைக்கிற மாதிரி உனது வாழ்க்கை கடினமானதாகத்தான் விரியும்.

சிலர் நாடக நடிகர்கள் மாதிரி தம்மைத்தாமே முறுக்கிக் கொள்வார்கள். யாரோ வந்து தம்மைத் துன்புறுத்தி தண்டிக்கப் போவதாக நினைப்பார்கள். தான் முன்பு அனுபவித்த கஷ்டங்களைத் தொடர்ந்தும் வருங்காலத்திலும் அனுபவிக்கப் போவதாக அஞ்சுவார்கள். தாம் காயப்பட்டுக் கீழே விழுந்தால் தம்மால் திரும்ப எழும்ப முடியாது. விழுந்திருக்கும் தம்மை யாரோ வந்து காலால் எட்டி உதைத்து மிதிப்பார்கள். ஆமாம், இப்படி உதை வாங்கினால் பல்லெல்லாம் உடைந்து, மூக்கும் உடைந்து பற்சிகிச்சைக்கும் பிளாஸ்டிக் சிகிச்சைக்கும் எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டி வரும்? இப்படி நீ எதிர்பார்க்கும் துன்ப அனுபவங்கள் ஏன் உனக்கு அதிகப்படியாக ஏற்படுகின்றன தெரியுமா? நீ அவற்றை எதிர்பார்த்து உருவகப்படுத்திக் கொள்வதனால் தான்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 217

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# குமிண் நகை

‘மனித வாழ்வின் அரைவாசிப் பகுதி சிரிப்பிலும் மறு அரைவாசிப் பகுதி அழுகையிலும் கழிந்து விடுகின்றது’ என்பது கவிஞரின் கருத்து. சிரிப்பு நோயைக் கூட விரட்டிவிடும் என்பர். அது ஒரு நல்ல ஔடதம். ‘வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்’, ‘சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே’ என்பது அறிவுரை.

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள் - திருக்குறள் 999

சிரிக்கத் தெரியாதவனுக்கு பகலும் இருளாகவே இருக்கும் என்று வள்ளுவர் கூறியதிலிருந்து சிரிப்பின் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது. சிரிப்பு மகிழ்ச்சியின் வெளிப்பாடு. உள்ளம் மகிழ்ச்சியில் திளைப்பதை உணர்த்துவது. இது புன்னகை எனவும் முறுவல் எனவும் அழைக்கப்படுகின்றது. சிந்திக்கத் தெரிந்த இனத்தின் தனிச் சொத்து சிரிப்பு. உள்ளத்தில் உவகை உண்டாகும் போது புன்னகை பூக்கும். அது உள்ளத்தின் கள்ளமற்ற தன்மையை தெளிவாய் காட்டும் கண்ணாடி. உள்ளத்தில் உருப்பெனும் இன்பம், மகிழ்ச்சி, ஆசை, உவகை இவற்றின் சாளரமே புன்னகை. உள்ளத்தில் வெறுப்போ, பகைமையோ இருக்கும் போது புன்னகை மலராது என்பது தெளிவு. ஒருவர் மேல் ஆர்வம், பற்று, நட்பு, கரிசனை கனிவு, ஏற்படும் போது புன்னகை இயல்பாகவே பூக்கும். கள்ளம் கபடமற்ற சிரிப்பு குழந்தைச் சிரிப்பு அது வெள்ளைச் சிரிப்பு. எத்தனை பேரிடம் இவ்வகைச் சிரிப்பு பிறக்கின்றது.

அம்பிகையின் அழகை வர்ணிக்கும் லலிதா சகஸ்ர நாமம் ‘மந்தஸ்மித ப்ரபா பூரமஜ்ஜக் காமேச மானஸா’ என்று அவளது சிரிப்பின் அழகை வர்ணிக்கின்றது. ‘பனிமுறுவல் துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்’ என்று அபிராமி அந்தாதி செப்புகின்றது. மயிலிறகின் தண்டுப் பகுதியின் வெண்மை அம்பிகையின் பல் வெண்மைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. சீதையின் புன்முறுவலை ‘புதியதோர் முறுவல் பூத்தாள்’ என்று கம்பர் வர்ணித்துள்ளார். ஒருவர் புன்னகை மாறாத முகத்துடன் இருப்பதால் அன்பானவர், சாந்தமானவர், நெருங்கத்தக்கவர் கடினசித்த மற்றவர் (கோபமற்றவர்), அழகானவர், பலராலும் விரும்பத்தக்கவர்,



கோபமற்றவர், பிறரை ஈர்க்கும் திறன் உடையவர் என்று கூறலாம். குடும்ப உறுப்பினர்களிடமும் ஆத்மார்த்த நண்பர்களிடமும், புன்னகை இயல்பாகவே பிறக்கும். பலபேர் சிரிப்பை வரவழைத்துக் கொள்கிறார்கள். பார்வைக் கண்ணாடியை மாட்டிக் கொள்வதைப் போன்று புன்னகையை முகத்தில் மாட்டிக் கொள்கிறார்கள். விற்பனையாளர்கள், வரவேற்பாளர்கள், செய்தியாளர்கள், தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள், மயக்கும் மோகினிகள் இந்த வகையினராகும். இதனை லாவகமாக செய்வதில் இவர்கள் கை தேர்ந்தவர்கள்.

அருணகிரிநாதர் தேவயானையின் புன்னகை முகத்தினைக் காட்டும் பாங்கினைப் பார்ப்போம். அவரது முதற் பாடலிலேயே இது கூறப்பட்டுள்ளது.

‘முத்தைத்திரு பத்தித் திருநகை அத்திக் கிறை சத்திச் சரவண’ என்பது தான்.

முதல் இரு வரிகளில் பற்களின் ஒளி, அவற்றின் வரிசை இரண்டையும் இணைத்துப் பாடியுள்ளார்.


முத்தை - முத்து, பந்தி - வரிசை, அத்தி - தேவயானை, முத்தை நிகர்த்த பல் வரிசையினால் புன்னகை புரியு் தேவயானையின் கணவன் முருகன் என்பதே இதன் பொருள்.

சிரிப்பு: அசட்டுச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, சாகசச்சிரிப்பு, சங்கீதச் சிரிப்பு, நக்கல் சிரிப்பு, வெற்றிச் சிரிப்பு, மோகினிச் சிரிப்பு, ஞானச் சிரிப்பு, குமிண் சிரிப்பு எனப் பலவகைப்படும். உதட்டுக்குள் சிரிப்பது குமிண் சிரிப்பாகும். இது அனுபவச் சிரிப்பு. குமிண் சிரிப்பு இரண்டு பேருக்கு மட்டும் உண்டு. ஒருவர் சிவபெருமான். மற்றவர் புத்த பெருமான். முன்னவர் நம்மைப் படைத்த கடவுள். மற்றவர் நம்மில் ஒருவராகப் பிறந்து பின்னர் கடவுளாகிப் போனவர். சிவபெருமானின் குமிண் நகை காணப்பெறுவதாக இருந்தால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்கின்றார் அப்பரடிகள். மனிதப்பிறவி இழிந்தது. வேண்டத்தகாதது ஆனால் சிவபெருமானின் குமிண் நகை காணப் பெறுவது நிச்சயமானால் இந்த இழிவும் ஏற்கத்தக்கதாம்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே!

வினைகள் மலிந்த வாழ்வை விளையாட்டு என்று கொள்ளும் ஞானவீறு புத்தபிரானின் முகத்தில் குமிண் நகையாக அரும்பியது எனலாம். அவருடைய சிரிப்பு ஞானச் சிரிப்பாகி உலக போகங்களைத் துறந்து ஞானம் பெற்றவராக்கியது.

வாய் சிரிப்பை உதிர்க்க முன்பே கண்கள் சிரிப்பை உதிர்த்து விடுவதுமுண்டு. சனாதிபதி கென்னடி இதற்கு உதாரணமாக விளங்கியர். மனிதனின் வாழ்வின் பற்றுதியைக் கண்டு இயற்கை தனது குமிண் நகை மூலம் பல அனர்த்தங்களை ஏற்படுத்துகின்றது.



நா. க. சிவராமலிங்கம்

நகைச்சுவைத் தொடர் 265

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்







சித்திரை புதுவருடப்பிறப்பு
ஏப்பிரல் 13 சனிக்கிழமை விசய வருடம்

1 ஏப்பிரல் மறக்கமுடியுமா!
நானொரு முட்டாளுங்க
நல்லாப்படித்தவங்க நாலுபேரு
சொன்னாங்க –சந்திரபாபு




பிறதேசம் வந்தாலும் நாம் பிரதோசம் மறக்கவில்லை.
வரப்புயர நீருயரும் என்றார் – ஔவையார்





ஈழத்தமிழர் பிரச்சினை நாளுக்கு நாள் விசுவரூபமெடுத்துள்ளது. ஆபிரிக்காவில் மகாத்மா காந்தி தொடங்கிய உரிமைப்போராட்டம் நாள் செல்ல செல்ல ஆங்கிலேயரையே அடிவயிறு கலங்கவைத்தது. ஆனால் தமிழக மாணவர் ஆரம்பித்த போராட்டம் வெவ்வேறு திசையில் கொழுந்து விட்டெரிகிறது.

இவர்களுடன் சேர்ந்து குரல் கொடுப்பதா அல்லது மௌனமாக இருப்பதா?............



உலகண்ணை கடவுளில்லை. அங்கை போகாதே, இஞ்சை போகாதை எண்டு மற்றவைக்கு அட்வைஸ் பண்ணிப்போட்டு அரசியல் கட்சிகள் தமது பலனை சாத்திரம் பார்க்கத் தொடங்கிவிட்டினம். தனக்குப் பிடித்ததோ பிடிக்கவில்லையோ கோவிலுக்கும் சேச்சுக்கும் மசூதிக்கும் போய் மக்களோடு மக்களாக கும்பிட்டு ஆராதனை செய்து தொழுது மக்களைக் கவர்வதும் மகேசனை வணங்குவதும் ஒன்றுதான்.




சமயமில்லை சாத்திரமில்லையெனும் பல அரசியல் பெருந்தலைவர்கள் கூட சாத்திரம் பூசை அன்னதானம் யாகம் செய்த கதைகள் உடனுக்குடன் பத்திரிகை வானொ-ாலி தொலைக்காட்சி இன்ரநெற் ஈமெயில் என சகல ஊடகத்துறையூடா வருகின்றன. தமிழக மாணவர்கள் போராட்டத்திலொரு பகுதியாக கடற்கரையில் உயிரோடிருப்பவர்க்கு திதி கொடுக்கிறார்கள்.



மன்னனும் மக்களும் உரியமுறையில் ஆட்சியையும் வாழ்வு முறையையும் அமைத்தால் மாணவர்கள் ஏன் வீதிவரை போராட்டத்திற்கு வரவேண்டும்.



சர்வதேச சிறுவர் புத்தக தினம் ஏப்பிரல் 2ம் திகதி. ‘இளமையில் கல்வி சிலையில் எழுத்து’. ‘கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்க நன்றே’ என எத்தனை வசனங்கள் பேசினாலும் நாம் படித்துவிட்டு வீசியெறியும் புத்தகங்களை பொது இடங்களில் வைப்பதன்மூலம் இன்னெருவர் படிக்க உதவமுடியும். இதுவும் ஒரு சேவைதான்……….. (நாடக சீரியல் சி.டி.க்கள் எத்தனை பார்த்துவிட்டு அயலவர்க்கும் நண்பர்களுக்கும் கொடுக்கிறோம்)



இன்னெருவருக்கு உதவ பணம் தேவையில்லை. மனமிருந்தால் போதும் என தத்துவக்கருத்து கூறினா செக்கண்ட்புளோர் செல்லம்மா.


மழை ஓய்ந்து சற்று தூவானம் எண்டு நினைச்சா அது சரிவராது போல கிடக்கு எண்டு தொடங்கினா ஆட்டிலறி அன்னம்மா. உலகர் திரும்பி ஆட்டிலறி அன்னம்மாவையும் செல்லம்மாவையும் பார்த்தார். இல்லை உலகண்ணை, உலகமெல்லாம் இஞ்சை சண்டை சச்சரவில்லை. பாலும் தேனும் ஓடதெண்டு இலங்கை அரசும் அமைச்சர்களும் நாடு நாடாப்போய் பிரசங்கம் செய்யினம்.


சர்வதேச மகளிர் தினத்தில் எல்லோரும் சமமெண்டு பேசிப்போட்டு யாழ்ப்பாணத்திலை பெண்களை வீடுகளில் அடைத்து வைத்து தப்பான முறையில் அவர்களை வற்புறுத்தி தவறாக நடத்தியதாக பொலிஸார் கைது செய்துள்ளனர். அரசு பின்னணி முன்னணிகளும் இதற்கு காரணம் என மக்கள் கூறியும் அதைக் கேட்பாரில்லை.

உலகர் மனதுள் நினைத்தார். பாவ மூட்டையின் சுமை கூடிக்கொண்டே போகிறது. இப்போ சர்வதேச மன்னிப்புச்சபை அமெரிக்க விசாரணைக்குழு போன்றவற்றிடம் ஆளையாள் காட்டிக்கொடுக்கும் படலம் ஆரம்பித்து விட்டது. ஊர் 2..3..4.. ஆகப்பிரிந்து விட்டது. கண்டுபிடிப்பவர்களுக்கு வேலை சுலபமாகிவிடப்போகிறது.


கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதை. உலகர் சிறுவயதிலே படித்தவர். ஆனால் இப்போ இராணுவ முகாம் இருந்த இடங்களில் நிலத்தைத் தோண்டியபோது மறைந்த பல முகங்கள் வருகின்றன….
முகாம்களின் பின் பல முகங்களின் கதைகள் வெளிவரப்போகின்றன.

விசய வருடத்தில் பல விசயங்கள் வரப்போகிறதென்று எண்ணியுள்ள அனைத்து தமிழ் உள்ளங்களுக்கு கலகலப்பான சித்திரை விசய வருட புது வருட வாழ்த்துக்கள்.







ஏப்பிரல் 01…15...



1. பங்குனித் திங்கள் பொங்கல்
1. ஈழத்து தமிழறிஞர் சி. கணேசையர் பிறந்த தினம். 1878–1958
2. 1975 சி.என். கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. 553.33 மீற்றர்
4. 1949 இல் 12 நாடுகள் இணைந்து ஐக்கிய அமெரிக்க தலைமையில் இணைந்து நேட்டோ அமைப்பை உருவாக்கின.
4. பாப்பரசரின் வேண்டுகோளையும் விடுத்து நேட்டோ வான்படைகள் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று முன்னாள் யுகோசிலேவியாமீது குண்டுகளை வீசின.
13. சித்திரை வருடப்பிறப்பு விசய வருடம் மானிப்பாய் மருதடி விநாயகர் தேர்.





# அறிந்திருக்க!

1. வெங்காயம் நறுக்கும் போது, சூயிங்கம் சாப்பிட்டால் கண்ணீர் வராது.



2. சராசரி மனிதனின் விழிகள் 200 டிகிரி வரை திரும்பும்.

3. தர்பூசணியைத் தட்டும் போது ஹாலோ சத்தம் வந்தால், காயாக உள்ளது என அர்த்தம்.

4. குழந்தைகள் 6 மாதம் வரை ஒரே நேரத்தில் மூச்சு விடவும், முழுங்கவும் முடியும்.



5. திராட்சையை மைக்ரோ ஓவனில் சூடு படுத்தினால், வெடிக்கும்.

6. கனடா நாட்டவர், தங்களின் புகைப்படத்தை தபால் முத்திரையாகப் பயன்படுத்த முடியும்.

7. சுவீடனில், ஒரு ஹோட்டல் ஐஸினால் கட்டப்பட்டு உள்ளது. ஒவ்வொரு வருடமும் மீண்டும் கட்டப்படும்.

8. புதுப் பேனாவை எழுதக் கொடுத்தால், 97% மக்கள் தங்கள் பெயரை எழுதுவார்கள்.



9. இயர் போன் ஒரு மணி நேரம் அணிந்தால், 700 முறை பாக்டீரியா வளரும்.

10. சகாரா பாலைவனத்தில் பனி மழை 1979 பிப்ரவரியில் பெய்தது.

11. கண்கள்தான் பிறந்ததில் இருந்து வளராமல் அப்படியே இருக்கும்.

12. எல்லோருடைய நாக்கு ரேகைகளும் கை ரேகைகள் போல வேறு விதமாக இருக்கும்.

13. 40 டிகிரி வெப்பத்தில், 14.4 கலோரிகள் ஒரு மனிதன் இழப்பான்.


14. 8 மாதம் வரை குழந்தைகள் அழும் போது கண்ணீர் வராது.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# முட்டாளும்...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

எல்லாத்தையும் கத்துக்கிடுங்க என்றார். சீமான் அண்ணன் நம்மள ஒரு அறிவாளி என்று சொல்லிவிட்டார் என்ற சந்தோஷத்தில் இருந்தேன். அப்ப பி.சி.சார் ஒரு நாள் என்னை டேய் முட்டாள் அங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கிறே என்றார். வாழ்க்கையிலே முதல் தடவையாக என்னை பார்த்து முட்டாள் என்று சொன்னவர் பி.சி.சார்தான். முட்டாள் என்ற வார்த்தையை கேட்டதும், என் கண் கலங்கிவிட்டது. அப்போதுதான் என்னுள் இருந்த ஈகோ எல்லாம் உடைந்தது. அதன்பிறகு பல முறை என்னை முட்டாள், முட்டாள் என்றே அவர் கூப்பிட்டார். அதை கேட்க, கேட்க என்னுள் நிறைய கத்துக்கணும் என்ற எண்ணம் தோன்றியது. என்னை அறிவாளி என்று சொன்னது எனக்கு நம்பிக்கையை கொடுத்தது. முட்டாள் என்று சொன்னது எனக்கு பல வஷயங்களை கத்துக்க தூண்டியது. அதற்காகத்தான் அந்த புத்தகத்தில் அப்படி சொன்னேன்.





பரதேசி வாய்ப்பு பற்றி?

பாலா சாரை எனக்கு ஆறேழு வருடமாகத் தெரியும். என்னோட வளர்ச்சியில், ரொம்ப அன்பும் அக்கறையும் கொண்டவர். என்னோட சகோதரர் மாதிரி. நான் அவரை இயக்குனராக பார்ப்பது இல்லை. நான் ஒளிப்பதிவு பண்ணிய படம் வெளிவந்தவுடன் பார்த்து விட்டு எனக்கு போன் பண்ணி பேசுவார். அத அப்படி பண்ணியிருக்கலாம், இதை அப்படி பண்ணியிருக்கலாம் என்று அட்வைஸ் பண்ணுவார். சினிமாவில் சீமானுக்கு பிறகு என்னிடம் அதிக அன்பு காட்டியது பாலா சார்தான். அப்படி இருக்கும் போது ஒரு நாள் ஒரு நாவலை கொடுத்து படியுங்கள் என்றார். அந்த நாவலை படித்தேன். அப்ப அவர் சொன்னார் இந்த நாவலைத்தான் படமாக்கப் போறேன். உங்க கமிட்மண்டு என்ன என்று கேட்டார். ஒண்ணுமில்ல என்றேன். நீங்க இந்த படத்துக்கு ஒளிப்பதிவு பண்ணுங்க. நீங்க பண்ணுனா சரியா இருக்கும் என்றார். அப்படித்தான் பரதேசி பட வாய்ப்பு கிடைத்தது.

கதை 1930களில் நடப்பது போல இருக்கிறது. அந்த காலகட்டத்தை எப்படி திரையில் கொண்டு வந்தீர்கள்?

எங்க தாத்தா பர்மாவில் இருந்தவர். அவருடைய புகைப்படம் எங்க வீட்டில் இருக்கிறது. அதில் அவர் கழுத்தில் உத்திராட்ச கொண்டை போட்டிருப்பார். எங்க அம்மாவோட அம்மா இலங்கை காப்பித் தோட்டங்களில் வேலை செய்தவர். இப்படி எனக்கு அந்த காலகட்டத்தைப் பற்றிய சின்ன புரிதல் இருந்தது. அப்புறம் பாலா சார் கொடுத்த நாவலை படிக்கும் போது காட்சிகள் மனக்கண்முன் விரிந்தது. பழைய படங்கள், புத்தகங்கள் என இது சம்பந்தமான விடயங்களை நான் தேடிப் பார்த்தேன்.

நீங்கள் ஒரு சிறுகதை எழுத்தாளரும்கூட. கதை ஞானம் இருப்பதால் இயக்குனராகும் எண்ணம் இருக்கும். உண்டா?

பல இயக்குனர்களிடம் வேலை செய்யும் போது பல விஷயங்கள் கத்துக்கிறேன். நான் ஒன்னுமே தெரியாமல் இருக்கும்போது படம் இயக்கனும் என்றிருந்தேன். சினிமாக்குள்ள வந்து ஒவ்வொரு விடயமா கத்துக்கும் போது இவ்வளவு விடயங்கள் இருக்கிறதே என்ற மலைப்பு தோன்றுகிறது. போக போக படம் இயக்கலாம் என்ற எண்ணம் தானாக உருவாகும். அப்போ பண்ணுவேன்.

தற்போதைய தமிழ் சினிமாவின் போக்கு எப்படி இருக்கிறது.?

ரொம்ப ஆரோக்கியமா இருப்பதாகவே எனக்கு தோன்றுகிறது. பெரிய பட்ஜெட் படங்கள், பெரிய நடிகர் படமெல்லாம் ஓடமாண்டேன் என்கிறது. ஆனால், யாருன்னே தெரியாத சின்ன படங்கள் எல்லாம் ஓடுது. மக்களுடைய ரசனை மாறியிருக்கிறது. நிறைய படித்த இளைஞர்கள் சினிமா பண்ண வந்திருக்கிறார்கள். இதெல்லாமே சினிமாவுக்கு செழுமை சேர்க்கும்.

இந்தப் படத்தின் வசனகர்த்தா நாஞ்சில் நாடனின் படைப்பாளுமையைப் பற்றி கூறுங்களேன்?

இந்தப் படத்திற்காக நாஞ்சில் நாடனை சந்திக்கும் போது அவர் சொன்னார். இந்தப் படத்தோட கதை எனக்குத் தெரியும். ஆனா சினிமா எனக்குத் தெரியாது. முதலில் என் நாவலான தலைகீழ் விகிதங்கள் திரைபடமாகியிருக்கிறது. அது எனக்குத் திருப்தி இல்லை. இந்தப் படத்தின் மூலமாக என் பெயர் கெட்டு போயிடக் கூடாது என்றார். நவீன தமிழ் இலக்கியத்தின் முக்கியமான ஆளுமை. படப்பிடிப்புத் தளத்தில் ரொம்ப அமைதியாக இருந்து காட்சிகளை எழுதி கொடுப்பார். அவரோட நான் பணிபுரிந்ததை பெருமையாக கருதுகிறேன்.


இனி நாஞ்சில்நாடன் பேட்டி

ஐயா! உங்களோட முதல் நாவலான தலைகீழ் விகிதங்கள், சொல்ல மறந்த கதை என்ற பெயரில் திரைப்படமானது. தற்போது பரதேசிக்கு வசனம் எழுதி இருக்கிறீர்கள். இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

தலைகீழ் விகிதங்கள் படமாகும் போது நான் எதுவுமே செய்யவில்லை. கதை மட்டும் என்னிடம் வாங்கினார்கள். கடலூரில் படப்பிடிப்பு நடக்கும் போது ஒரு நாலு, ஐந்து நாட்கள் நான் வேடிக்கை பார்த்தேன். அந்த படத்தை ஒரு இருபது தடவையாவது டி.வி.யில் ஒளிப்பரப்பினார்கள். ஆனால், அந்த படத்தில் எங்கேயுமே என் பெயர் கிடையாது. இது அந்தப் படத்தின் இயக்குனரான தங்கர்பச்சானின் மன வெளிப்பாடாகவே நான் பார்க்கிறேன். டில்லியில் என் கதைக்கு சாகித்திய அகா-டமி விருது கொடுத்தார்கள். கனடா வாழ் தமிழர்கள் எனக்கு வாழ்நாள் சாதனை விருது கொடுத்தார்கள். இப்படி உலகமே ஏற்றுகொண்ட என்னை, என் படைப்பை பயன்படுத்திய தங்கர்பச்சனுக்கு ஏற்றுக்கொள்ள மனமில்லை. என் பெயர் போடகூட மனம் வரவில்லை. அங்கீகரிக்கப்படாத படைப்பாளி வலி நிறைந்த இடத்தில்தான் இருப்பான். பாலாவோட எனக்கு தந்த மதிப்பும் மரியாதையும் மன நிறைவை தருகிறது. எனக்கு சினிமா தொழில் இல்லை. இருந்தாலும் பாலாவோட சுமார் முப்பது நாட்கள் அந்த படப்பிடிப்பில் கலந்துகொண்டேன். சினிமாவைப் பற்றிய சின்ன புரிதல் எனக்கு கிடைத்தது. பாலா எனக்கு கொடுத்த மதிப்பு, மரியாதை, சன்மானம் எல்லாத்துக்கும் நான் தலை வணங்குகிறேன். படம் பார்த்த எனக்கு ஒரு நிறைவை தந்தது. இன்றைய தமிழ் சினி-மாவில் இப்படியொரு படம் எடுக்க அசாத்திய தைரியம் வேண்டும்.

தொடர்ந்து திரைப்படங்களுக்கு வசனம் எழுதுவீர்களா?

எனக்கு இன்னும் எழுத நிறைய விடயங்கள் இருக்கிறது. யார் வசனம் எழுத கூப்பிடுகிறார்கள் என்பது முக்கியம். யார் வேண்டுமானாலும் எழுதலாம் என்கிற படத்திற்கு நான் எதுக்கு. இதை நாஞ்சில் நாடன் செய்தால் நன்றாக இருக்கும் என்கிற மாதிரியான படங்களில் பணியாற்றுவேன்.

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666



















**Free Real Estate Class - Call: 416.321.6969**




விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com www.tamilvanakkam.com**

